கௌதுல் அஃலமின்
மல்பூஜாத்

- 1 -

புலைல் பின் இயாலின் மகன் அலி (ரஹ்) அவர்கள் இறந்த பின் ஒரு சமயம் புலைல் தம் மகனைக் கனவில் கண்டு. "செல்வ மகனே, இறைவன் உன்னை எவ்வாறு நடத்தினான்?" என்று வினவினார்கள். "அருள் மிகுந்த தந்தையே, அடியார்களுக்கு (மட்டற்ற வகையில்) கருணை புரிந்து, உன்னதப் படுத்தக்கூடியவன் (அல்லாஹ்வையன்றி வேறு எவரும் இல்லை!") என்று அலி (ரஹ்) பதிலளித்தார்கள்.

அன்பனே, கருணையாளனான இறைவனையே உன் ஆதரவாகக் கொள்! படைப்பவனைப் புறக்கணித்துவிட்டு வேறு எந்த படைப்பிலும் கலந்துவிடாதே! இம்மையானது இறைவன் நமக்கருளியுள்ள தங்குமிடமாகும். இதிலுள்ள சர்வ சௌபாக்கியங் களும் அவன் படைத்தவைகளே. அனைவருக்கும் வேண்டிய உணவின் அளவை அவன் (முன்னரே) நிர்ணயித்து ஒதுக்கியுள்ளான். உனக்கு விதித்துள்ள உணவை அவனது அமரர்கள். உனக்காகப் பாதுகாத்து வைத்துள்ளனர். உனக்காகவே ஒதுக்கப்பட்டுள்ள செல்வங்களும், அவனிடமிருந்தே வரமாக அருளப்படுகின்றன. அஃதேபோல் சோதனைகளையும் அவன் உண்டாக்கியுள்ளான். அல்லாஹ்வின் சோதனைகளென்னும் அம்பு மார்க்கு நல்லிணக்கம் காட்டி (சோதனைக்கு மிரளாமல்) கண்களை மூடிக்கொண்டு அமர்ந்துவிட்ட ஞான நாதர்களை, இறைவனின் ஆத்மீக வைத்தியர்கள் நெருங்கிக் கருணையுடனும், ஆதங்கத்துடனும் அணைத்துப் பரிவுக்காட்டி (சோனை என்ற ஈட்டியின்) காயங்களுக்கு மருந்திட்டு உயர்வுபடுத்துவார்கள்.

ஆத்ம சுத்தத்துக்கான தொடக்கநிலை, பற்பல சோதனைகளால் சூழப்பட்டுள்ளதாகும். சுவர்க்கம் கூட சோதனைகளுக்கிடையேதான் இருக்கிறது. எனவே,(சோதனைக்குள்ளாகி,நல் அமல் புரிந்தாலன்றி, யாரும் சுவனபதி புகமுடியாதாகையால்) இறைவனின் முடுகுதலைப் பற்றி என்ன கூறமுடியும்? மெய் விசுவாசியான் சிறந்த அடியான். இகத்தில் இறைவனின் தாசனாவான். (தன் எசமானனின் ஏவலுக்கிணங்க மெய் வணக்கம் புரியக் கடமைப்பட்டவனாவான்) உன் புனித உள்ளம் (பாத்தின்) வானமாகவும், தூய ஆத்மா (கல்பு) பூமியாகவும் பண்பட்டால்தான், அந்த வானத்தின் அமுதத்தை அருந்தும் பாக்கியம் உன் ஆத்மாவுக்குச் சித்தியாகும். இறைவன் நாடி விட்டால், வானம், பூமி (உள்ளம், ஆத்மா) இரண்டையும் ஒன்றாகப் புனிதப்படுத்தி (உன்னிடம்) ஒப்படைத்து விடுவான். (இதைக்கூறி விட்டுக் கௌதுல் அஃலம் அவர்கள் எதையோ எடுத்துத் தங்கள் மார்பில் அணைத்துக் கொள்வது போல் செய்கை செய்துவிட்டு, மேலும் தொடர்ந்து பேசலானார்கள்)

சபையோர்களே! (நான் இப்போது செய்த செய்கை பற்றி) விவரிக்க இயலாதவனாவேன். நான் (இம்மையின் அகமியங்களைத் தெளிவாகக் கூறமுடியாத) ஊமையாயும், செவிடனாயுமிருக்கிறேன். ஆதம் நபி (அலை) அவர்கள் தங்களின் புதல்வரிடம், "நீ என்னுடைய சத்தியபுத்திரன் என்பதைப் பரிசுத்தமாக நிரூபித்துவிடு" என்று திருவுளமானதையே நானும் உங்களுக்குக் கூறுகிறேன். ஆத்ம சித்திக்கான புனிதப் பாதையில் நடப்பவனுக்கு, ஏகாந்தம் மிக மிக அவசியமானதாகும். மரணம் உன்னைப் பிடித்துக் கொண்டதும், உன் இம்மையின் தொடர்புகள் அனைத்தையும் வெட்டி, உன் உற்றார் உறவினர்களை விட்டும் உன்னைப் பிரித்துவிடும். ஆகையால், மரணம் வந்து உன்னை அப்பாலாக்கிவிடும் முன்பே, உற்றார் உறவினர்களின் பிணைப்பிலிருந்தும் நீ அப்பாலாகிக் கொள். இறைவனின் திருச்சமூகம் செல்லப் புதை குழிதான் வழியாயும், வாசலாயுமுள்ளது. ஆகவே, மரணம் வருமுன்பே மரணமாகி விடு! படைப்புகள் மீது வைத்துள்ள இச்சாபாசங்களை முற்றும் துறந்து

புனிதம் பெற்றுச் சம்பூர்ணமாக உன்னை சாகடித்துக்கொள்! அந்த நிலையில் தான் இறைவனின் சமூகத்தில் வாழும் புனித மகிமை உனக்குச் சித்தியாகும்.

நீ முழுமையான மரண நிலைக்குச் சீர்பட்டுவிட்ட பின்னரே, இறைவனின் மகத்தான சக்தி (குத்ரத்) என்ற கரம் உனக்காகப் பாக்கியமான அழுதையூட்டி, உன்னைத் தாலாட்டும். இறைவனின் கடாட்சத்தில் உனக்குரிய பங்கு, நீ விரும்பாமலே அருளப்பட வேண்டும் என்று பரிபூர்ண விரதம் கொண்டுவிடு! பவித்திரமான இப்படிவம் உனக்குச் சம்பூர்ணமாகச் சித்தியான பின்னரே, இறைவனின் மகத்தான முடுகுதலும், மெய்ஞ்ஞானப் பிரகாசமும் சித்தியாகும். உன் ஆத்மா என்ற பட்சி (இம்மையின் களங்கங்கள் அனைத்தையும் விட்டு தூய்மையாக்கித்) தனிமை பெற்றுவிட்டால், மரணத்தைப் பற்றியும் அதற்குக் கவலையே இல்லை. அப்போது தான் உன் ஆத்மா இறைவனோடு ஒன்றித்து விடுவதையே குறிக்கோளாகக் கொண்டுவிடும்.

அந்தப் புனித நிலையில் கூடச் சன்மார்க்கத்தின் ஏவல், விலக்கல்களைச் சம்பூர்ணமாக நிறைவேற்ற வேண்டும். சன்மார்க்கம் என்ற உன்னத உடையால் மறைத்து, மெய்ஞ்ஞானப் பிரகாசத்தால் உன்னைத் திறக்கும் அந்த மகா வல்லமையாளனே தூய்மையானவன். நீலக் கம்பளியை அணிந்து கொண்டு ஞானநாதர்களைப் போல் நடிக்கும் போலித் துறவிகள் சிலருண்டு. அவர்களை நான் 'காபிர்'கள் (நிராகரிப்பவர்கள்) என்றே அழைப்பேன். அடியான் கஷ்டப்பட்டு உழைத்து உண்ணும்வரை தான் அவனுடைய மெய்விசுவாசம் (ஈமான்) உறுதி பெற்றிலங்கும். அவ்வாறான மெய்யுறுதி சித்தியான உத்தமோத்தம மகான்களுக்கே, உழைப்பு தடுக்கப்பட்டு, இறைவனின் கசானா (பொக்கிஷம்) திறக்கப்பெற்று, மெய்ஞ்ஞான அகமியங்களை அள்ளிக்கொள்ளுமாறு அனுமதி தரப்படும். "உன்னால் முடிந்தவரை இம்மையின் பாசங்களை அப்பாலாக்கு" என்பது நம் பெருமான் (ஸல்) அவர்களின் அருள்போதமாகும். மரணத்தையும், 'ஸிராதுல் முஸ்தகீம்'

பாலத்தையும், அதற்குப் பின்னுள்ள சம்பவங்களையும் அதிகமாகச் சிந்தித்துச் சீர்படு! மறுமையையும், அதன் இன்ப துன்பங்களையும் அப்பாலாக்கி, இறைவனோடு தூய்மையாக ஒன்றித்து, உள்ளத்தையும், அந்தரங்கத்தையும் புனிதப்படுத்திக் கீழான மனம் (நப்ஸ்), ஷைத்தான் ஆகியவற்றை வீழ்த்தி, பரிசுத்தனாகி, அல்லாஹ்வின் மெய்நேசனாகி மகிமை பெறு! படைப்புப் பொருள்களின் மோகபாசங்களைப் பரிபூரணமாக அகற்றுவதின் மூலம் அவை உன்னைப் பொறுத்தவரை படைக்கப் படாதவை என்றே நீ எண்ணி விட வேண்டும். உன் தீய சுபாவங்கள் அகன்று, உன் ஆத்மா புனிதப்பட்டுக் குற்றமற்ற) அமரர்களைப் போன்று நீ மகிமை பெற்ற பின் அமரத்துவத்தின் சுபாவங்களையும் அழித்து, இறைவனுடன் ஓர்மைப்பட்டிருக்கும் பாக்கியம் உனக்குச் சித்தியாக வேண்டும். இதுவே உன்னதமான ஏகத்துவமாகும். அதன் பின்னர், இறைவன் தமது மகிமைமிக்க அழுதை உனக்குப் புகட்டுவதுடன் (ஆத்ம சாபல்ய சித்தியுடன்) வெளிப்படையான மெய்வணக்கங்களிலும் உன்னைச் சீர்படுத்துவான்.

-2-

புனித இஸ்லாமென்பது, வெளிப்படையான (கலிமா, தொழுகை போன்ற) நல் வணக்கங்களேயாகும். இவைகளைப் பரிபூரணமாகத் தூய்மையாக நிறைவேற்றுவதே (ஈமான்) மெய்விசுவாசமாகும். பின்னர் இறைவனை அறிந்துகொள்ள வழிகாட்டும் மஃரிபத் (மெய்ஞ்ஞானம்), படைப்புகளுக்கும், படைப்பவனுக்குமுள்ள பிணைப்பை அறியும் படிவமும் உண்டு. ஆகவே, உன் 'உள்ளமை' மகிமைபெற்று, இறைவனுக்கே உரியதாக சீர்பட்டால்தான், நீ அவனுடைய நேசனாகும் பாக்கியத்தை அடையலாம். உன்னத மெய்விசுவாசிதான் தன் சுய உழைப்பாலும், அதற்குரிய சாதனங்களாலுமே சம்பாதித்து உண்பதுடன், இந்த உழைப்பும், சாதனங்களும் கூட இரட்சகன் கருணைதான் என்றும் எண்ணுவான். இந்த நிலையிலேயே அவனது புனித மெய்விசுவாசம் உறுதி பெற்றதும், இறைவனிடம் பொறுப்புச் சாட்டல் (தவக்குல்) மூலமாக

உண்ணுவான். அப்போதும் கூட இதுவும் இறைவனின் கடாட்சம் என்றே எண்ணுவான். (எந்தச் சோதனை வந்தாலும்) இறைவன் மீது முதலில் வைத்த பக்தியில் உரோமத்தின் முனையளவு கூட, அவனில் குறை உண்டாகாது. உணவை எதிர்பார்த்துக் கொண்டு திஜ்லா நதிக்கரை மீது ஆயிரம் ஆண்டுகள் அமர்ந்து, வழி பார்த்து, அது கிடைக்காவிடினும், தன் உள்ளம் இறைவனின் கருணையின் மீதே பிணைந்தவாறு இருப்பவனே மேன்மை மிக்க மெய் விசுவாசியாவான்.

-3-

என் ஞானோபதேசத்தை ஏற்றுச் சீர்படு. இறைவன் தன் கிருபையை உன் மீது மட்டற்றுப் பொழிவானாக! உன் இறைவனின் அளவையும் (கத்ரையும்), முடிவையுமே (கலாவையுமே) எதிர்க்கத் துணியும் நீ, எந்த முகத்தோடு அவனைச் சந்திப்பாய்? அந்த வல்லவனை எதிர்த்துப் போரிடாதே! ஒரு சமயம் இறைவன் ஓர் ஊரை நிர்மூலமாக்கிப் பின்னர்ச் சீர்படுத்தினான். அது குறித்து உஜைர் நபி (அலை) "ஏன் ஒன்றை படைக்க வேண்டும், பிறகு அதை அழித்து மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்?" என்று (அவன் செய்கையின் முழுத் தாத்பரியத்தையும் அவனே அறிவான்) ஆட்சேபித்தார்கள்! அதனால் அவர்களின் திருநாமத்தையே நபிமார்களின் பட்டியலிலிருந்து நீக்கி, நூற்றாண்டுகள் வரையும் (நுபுவத்தையும் பிடுங்கிக் கொண்டு) உயிரற்ற சடலமாகவே அவர்களை உயிர்ப்பித்து, முன் உயிரோடு அவர்கள் இருந்த சமயம் நிகழ்ந்தவற்றை எல்லாம் அவர்களுக்கு நினைவூட்டி ஞானமளித்தான்.

புனிதமாகப் பாவமன்னிப்புக் கேட்பதில், தன் நாவைப் பழக்கப்படுத்து! செய்து விட்ட பாவங்களை மெய்யாக எண்ணிப் பிராயச்சித்தம் தேடும் மேலான பண்பை உன்னில் வளர்த்துவா! உன் புனித உள்ளம் அமைதியையும் சாந்தியையுமே ஏற்கட்டும்! இறைவனைப் புனிதமாகத் தியானிப்பது (திக்ரு) முதலில் நாவால் துதிக்கப்பட்டுப் பின் களங்கமற்ற இதயத்தில் உறைவதாகிக் கடைசியில்

போன்ப பக்தியாக இழைந்துவிட வேண்டும். (இம்மையின் பாசங்களால் மகிழ்ந்து) புன்னகையும் புரியாத எத்தனையோ உத்தம மகாத்மாக்களின் சிறப்பான சகவாசத்தில் அமர்ந்துள்ளேன். தாங்கள் அருந்தும் உயர்ந்த உணவில் ஒரு கவளமேனும் அவர்கள் எனக்குத் தராத நிலையிலும், அவர்களைக் குறித்துத் தீய ஊசாட்டமோ, சடைவோ என் உள்ளத்தில் உண்டாக விட்டதில்லை.

அன்புள்ள நேசனே! நல்லொழுக்கம் உடையவனாகுக! நீ பசித்திருந்து மற்றவர்களை உண்ண விட்டுவிடு! இன்றேல், நீ இழிவானவனாகக் கருதப்பட்டு, மற்றவர்கள் சிறப்படைந்து விடுவார்கள். அவர்கள் செல்வர்களாகவும், நீ ஏழையாகவுமிருந்து விடுவாய். நீ எனக்குத் தீமையோ, நன்மையோ செய்து விடமாட்டாய். அல்லாஹ் எனக்கு அருளியுள்ள மேலான செல்வங்களைக் குறைத்துவிடவோ, கூட்டிவிடவோ உன்னால் முடியாது. புனிதமான இப்படிவம் எனக்கு சித்தியான பின்னரே, மெய்ஞ்ஞான உபதேசத்துக்காக என்னைப் பணித்துக் கொண்டுள்ளேன். காடுகளிலும், பாலையிலும் நான் சுற்றிக் கொண்டிருந்த சமயமே (என் ஞானோபதேசப் பணிக்கு முன்னே) இப்புனிதப் படித்தரம் கைவல்யமாகும் மாட்சியைப் பெற்றேன். கீழான மனத்தின் (நப்ஸின்) வேட்கைக்குப் பணிந்து, அதற்கு உணவளித்தோமானால், புனிதம் கெட்டு, இதயம் இறுகி, உள்ளம் சிறைப்பட்டு, அந்தகாரம் சூழ்ந்து, தூக்கமும், சோம்பலும் மிகைத்து, இம்மையின் பாசம் இதயத்துள் இடங்கொண்டு, பேராசைகள் வளரத்தான் அது வழி செய்யும்.

- 4 -

ஆசாபாச மென்ற சிறையின் கைதியே, படைப்புகளுக்குத் தலைசாய்ப்பவனே, தன் முடிவைப் பற்றியே அறியாத அறிவிலியே, படைப்புகளையும், அல்லாஹ்வின் மகத்தான அகமியங்களையும், உன் நாசத்தையும் பொருட்படுத்தாத அஞ்ஞானியே, உனக்குப் புரியாவிடின் இப்பொழுதாவது விளங்கிச் சீர்படு! மரணத்தை நினைவுபடுத்திக்கொள்! சாவ சாயுச்சிய நிலைக்கும், ஈடேற்றத்துக்கும்

பற்றிச் சிந்திப்பதுதான் முக்கியமான சாவியாகும். மரணத்தை மட்டும் சரியாக நினைவூட்டிக் கொண்டால் போதும். அதுவே உன் கற்பனைகள் அனைத்தையும் அப்பாலாக்கிவிடும். உன் பேராசைகளும், மோகபாசங்களும், பலகீனப்பட்டு விட்டாலே போதும். 'இன்னா லில்லாஹி' (நாங்கள் அனைவரும் அல்லாஹ்வுடையவர்களே) என்று கூறிச் சர்வ கருமங்களையும், சர்வசக்தனான இறைவனிடம் தூய்மையாக ஒப்படைத்து விடுவாய். (அல்லாஹ்வே போதுமானவன், மற்றவைகளனைத்தும் வீண் கற்பனைகளே.)

அருமந்த செல்வ! அல்லாஹ் உனக்கு வரமாக அளித்துள்ள சௌபாக்கியம் (நீஃமத்து)களைக் களங்கமற உன் நாவால் விண்ணப்பித்து, அல்லாஹ்வின் புனித ஏகத்துவத்தில் உன்னைச் சம்பூர்ணமாக மூழ்கடித்துக் கொள்ளாதவரை, உனக்கு வெற்றி கிட்டாது. படைப்புகளின் மீதுள்ள பாசங்களைப் பரிபூரணமாக அகற்றிக் கொள்வதால் தான், அந்த மகத்தான ஏகத்துவம் கடாட்சமாகும். இறைவனின் தீர்ப்பையும், விதிப்பையுமே எதிர்த்துக் கூப்பாடுபோடும் ஓர் அடியான், அந்த மெய்ப்பொருளின் விசுவாசமுள்ள பக்தனாவானா? அவன் மீது வைக்க வேண்டிய புனிதமான பயபக்தியும், ஒருமையான முடுகுதலும் இவ்வாறு தர்க்கம் புரிவதனாலெல்லாம், அடியானுக்கு ஒருபோதும் சித்தியாகி விடாது. இறைவனின் தீர்ப்பையும், விதிப்பையும் குறித்து எவ்விதமான குறைகளும் இல்லாதிருக்கும் புனிதப் படிவம், அடியானுக்கு சித்தியாகும்போது தான், வரப்பிரசாத மான பயபக்தியும், உன்னதமான முடுகுதலும் அவனகத்தே ஒழுங்குபட முடியும். ரப்பின் மீது வைக்கப்படும் பேரின்பம் சித்தியானவன், இறைவனிடம் எக்குறையும் காணான்.

உன் ஜீவியத்தில் நீ எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும், புதைகுழியை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. "இறைவனின் அருள் ஞானம் சித்தியான மெய்ஞ்ஞானி (ஆரிப்) படைப்புகளின் புகழ், இகழ், அதிருப்தி எதையுமே லட்சியம் செய்வதில்லை" என்பது ஞான மகானொருவரின் அமுத வாக்காகும். அடியானின் களங்கமான மனம் விலகியதும், அந்தப் படிவத்தில் அல்லாஹ்வின் மகத்தான

ஆணைதான் அமரும். (முன்னர் கீழான இச்சையின் தூண்டுதலின்படி செயல்பட்டு வந்த அடியான், இப்போது இறைவனின் ஏவலுக்கொப்ப புனிதமாக இயங்குவான்.) இம்மை(யின் பாசம்) அடியானை விட்டுச் சம்பூர்ணமாக விலகியதும், அந்த நிலையில் அல்லாஹ்வின் தூய முடுகுதல் அவனில் அமர்ந்து, அதன் மகிமையால் மகத்தான துணை கடாட்சமாகிறது. அதைக் கொண்டே உண்மை அடியான் சாந்தி அடைகிறான்.

- 5 -

தொழுகை உன்னை (மெய்ஞ்ஞான வழியில்) பாதி தூரம் வரை இட்டுக் செல்கிறது. நோன்பு மீதி வழியையும் கடக்கத் துணை புரிந்து, ரப்பின் திருவாயில் வரையும் கொண்டு சேர்க்கிறது. சதக்கா (தான தர்மம்) உன்னை இறைவனின் திருமுன் வரை அழைத்துச் சென்று அமர்த்துகிறது.

"இறைவனை அடையும் மகத்தான பாதையில் விரைந்தேகத் தொழுகையையும், பொறுமையையும் சம்பூர்ணமாகக் கடைப்பிடித்து சகாயம் தேடு" என்று மகாத்மாக்கள் சிலர் அருளியுள்ளனர். இறை சாந்நித்தியத்தைத் தேடியலையும் நல்லடியானுக்குத் தனிமையும், பிரயாணமும் மிதமிஞ்சிய வேதனை தரும். ஏனெனில், அப்படிவத்தில் அவனுக்கு எந்தத் துணையும் கிடைப்பதில்லை. (சில விஷயங்களை மறைக்க வேண்டுமென்று) ஷரீஅத்தின் நியதி மட்டும் இல்லாவிடின், யூசுப் (அலை) அவர்களின் மரக்கால் கூட உங்கள் மர்மங்களையும், பித்தலாட்டங்களையும் வெளிப்படுத்திக் காட்டிவிடும். ஷரீஅத்தோ (சன்மார்க்க ஏவல், விலக்கல்) அல்லாஹ்வின் புனித நாட்டத்தின் கீழுள்ளது; அவனுடைய பிணைப்பிலுள்ளது. அவ்வாறு இறைவனின் மகத்தான பிணைப்பில் மட்டும் அஃது இல்லாவிடில், (படைப்புகளின் மர்மங்கள்) உடனுக்குடன் வெளியாகிவிடும். (ஷரீஅத்து, அல்லாஹ்வின் மகத்தான ஞானத்தின் கீழ் இருந்து கொண்டிருந்ததால் தான், அவனது ஆணைக்கிணங்க யூசுப் நபியின் சகோதரர்களின் வஞ்சகச் செயல்கள் அத்தனை நாட்கள் மறைந்து

கிடந்தன) இறைவனுடனே தன்னை உண்மையாகப் பிணைத்துக் கொண்ட மகிமை தனக்குக் கடாட்சமான அடியான், இம்மையின் செல்வங்கள் மீது கூடச் சில சமயங்களில் ஆசை கொள்வதில்லை. ஆகவே, இம்மையின் செல்வங்களின் மோகத்தில் மட்டும் உங்களை நீங்கள் பிணைத்துக் கொள்ள வேண்டாம்!

சௌபாக்கிய சம்பத்துக்களைப் பொழிந்த அல்லாஹ்விடமே உத்தம அடியான் புனிதமாக ஐக்கியப்பட்டு விட்டால், இறைவன் அவனுக்கு தனது ஒப்பற்ற முடுகுதலை அருளி, மீண்டும் படைப்புகளையே அவனுக்கு வசப்படுத்திக் கொடுக்கிறான். (அதன் மகிமையால் நல்லடியான் இப்பூவுலகையே ஆட்டிப்படைக்கலாம்) உன் தயவை நான் பரிபூரணமாகப் புறக்கணித்து விட்டு, உன் அலட்சியத்தை உன் பக்கம் சம்பூர்ணமாகச் செலுத்திய பின்னரே, உனக்கு ஞானோபதேசம் புரியும் இந்த மகத்தான நிலை எனக்குச் சித்தியானது. அதனால் தான் நீ மோகித்துக் கிடக்கும் இந்த இம்மையின் பாசங்களென்ன, மறுமையை (ஆகிரத்தை)க் கூடக் கடந்து முன்னேறிச் சென்றுவிட்டேன். (இரட்சகனே எனது புனித லட்சியமாவான்.) உன் கீழான நிலையை நான் நன்றாக ஆராய்ந்தேன். கொடுப்பதோ, மறுப்பதோ, லாபமோ, நட்டமோ, எதையும் யாருக்கும் உன்னால் உண்டாக்கி விட முடியாதென்பதை நன்கறிந்து கொண்டேன். இறைவனே உன்னை இயக்குகிறான். ஒருவனுக்கு (அவனைச் சோதிப்பதற்காக)த் தீமை விளைய வேண்டும் என்று இறைவன் நாடினாலன்றி, உன்னால் யாருக்கும் எந்தத் தீமையும் செய்துவிட முடியாது. இந்த இறை ஞானப்பிரகாசம் எனக்குச் சித்தியான பின்னரே மகாத் தூயவனான ஏக வல்லோனின் திக்கில் என்னைப் புனிதமாகத் திருப்பிக் கொண்டேன்.

இம்மையின் சுகபோகங்கள் அழிந்து, நாசமுற்று, ஏமாற்றமளித்து விட்டு, முடியும் பண்பு உடையவை ஆகையால், அவற்றின் மீது என் உள்ளம் (பாதின்) பிணைந்து கொள்ளவில்லை. அதை உறுதியுடன் பற்றிக் கொள்ள என் மனம் விரும்பவில்லை. மறுமையோ-? அதனிடமும் சிறிது தங்கி ஆராய்ந்து பார்த்தேன்.

அதிலுள்ள குறைகளும் எனக்குப் புலப்பட்டன. அதுவும்கூட ஒரு சமயம் இல்லாதிருந்து, பிறகு உண்டானது தானே! இந்த வகையில் இம்மை, மறுமை இரண்டும் சமமானவையே. மேலும், இறைவன் அங்கும் கண்களுக்கும் மற்ற புலன்களுக்கும் இன்ப மூட்டும் சம்பத்துக்களை படைத்துள்ளான். "ஆத்மாவும், கண்களும் சுவைத்து இன்புறும் பொருள்களைச் சுவர்க்கத்தில் வைத்திருக்கிறேன்" என்பது இறைவனது திருவசனமாகும். ஆகவே, தூய உள்ளம் மட்டும் ஆசிக்கும் அப்புனிதச் செல்வம் எங்கே, எங்கே என்று தேடினேன். பின்னரே, இவைகளனைத்தையும் புறக்கணித்துவிட்டு, இந்த அருட்கொடை களையெல்லாம் படைத்த கருணையாளனிடமே திரும்பி விட்டேன்.

பரமன்மீது அடியானுக்குப் பரிசுத்தமான உள்ளச்சமும், பயபக்தியும் உண்டானதும், அவற்றின் மகிமையால் அவனுடைய அஞ்ஞானம் (ஜஹ்லு) அகன்று, அக ஒளி உண்டாகிறது. தூரம் விலகிப் புனித முடுகுதலும், மௌனம் மாறி இறைவனின் திருநாமத்தை (திக்ரு) உச்சரிப்பும், தனிமைபோய் உன்னதமான நட்பும், இருளகன்று ஞானஜோதியும், அவனுக்கு மகத்தான வரப்பிரசாதமாகச் சித்தியாகி விடுகின்றன. ஆத்மாவே! தீய நாட்டமே, சுபாவச் சேட்டைகளே, (கவனமாய்க் கேளுங்கள்), இரட்சகனின் ஏகத்துவத்தை(த் தௌஹீதை)ப் புனிதமாக்குவீர்களாயின், படைப்புகள் அனைத்தையும் சம்பூர்ணமாக ஒதுக்கி விட்டு, அல்லாஹ்வையே உயர்வாகப் பற்றிக் கொள்வீர்களாயின், அவனில் மட்டுமே உங்கள் பொருத்தம் அமர்ந்து விடுமாயின், அவனது புனித உத்தரவு இல்லாமல், ஒரு கவள அன்னமும் அருந்த மாட்டோமென்று நீங்கள் சபதமேற்பீர்களாயின், நானும் உங்களுக்காக, என் கடமையைச் செய்ய ஆயத்தமாவேன். நீங்கள் (பசியாலும், தாகத்தாலும்) இறந்துவிட்டால், நான் (உங்களை) முற்றும் புறக்கணித்துவிட்டு, என் புனித உள்ளத்தின் மகிமையால் இறைவனிடம் பறந்து சென்று விடுவேன்.

- 6 -

அந்தோ கைசேதமே! எம்பெருமான் (ஸல்) அவர்களின் புனித சன்மார்க்கத்தின் சுவரில் விரிசல் கண்டு, அது விழுந்து விடும் நிலையில் தன்னை யாரேனும் சீர்படுத்துவாருண்டோ என்று அலறிக்கொண்டிருக்கிறது. அவர்களின் ஞானமுத நதி வரண்டு சுருங்கிக் கொண்டிருக்கிறது. இறைவனுக்காகவே செய்யப்படும் வணக்கங்களோ, அரிதினும் அரிதாகி விட்டன. சிலர் பிறர் பாராட்டைப் பெறுவதற்காகவே வணக்கத்தைக் கடைபிடிக்கின்றனர். இடிந்து நாசமுறும் சன்மார்க்கச் சுவரை சரி செய்யவும், வரண்டு சுருங்கும் ஞான நதியை அகலப்படுத்திப் பெரிதாக்கவும், சன்மார்க்க மெய் வணக்கங்களில், நயவஞ்சகம் (முனாபிக்குத்தனம்) புரிவேரை எச்சரித்துத் திருத்தவும், நான் முனைந்துள்ளதில் எனக்கு ஒத்தாசை புரிய உங்களில் வாலிபர்கள் இல்லையா? மகத்தான (புனித அகமியங்களைத் தன்னுள் கொண்டிருக்கும்) மெய்ஞ்ஞானத் தத்துவங்களை உங்கள் முன் கூறிக் கொண்டிருக்கிறேன். அவை களை விரித்துச் சொல்வதற்கு எனக்கு தீராணி இல்லை. மேலும், இந்தப் புனிதமிக்க மெய்ஞ்ஞான மர்மங்களை அமரர்களிடம் கூடச் சொல்லமாட்டேன். (நான் விரித்துக் கூறிவிட்டால்) அவர்கள் வேறு யாரிடமாவது சொல்லி விடுவார்களோ என்றும் அஞ்சுகிறேன்.

உன் தூய இதயத்தைப் புனிதமிக்க சீனாய்மலை (மூஸா நபி இறைவனின் திவ்விய ஜோதியைத் தரிசித்த சீனாய் மலை)யாகப் பண்படுத்தி உன்னதப்படுத்திக்கொள்! அதன் மீது ஷைத்தானின் பார்வை தோசம் விழுந்து களங்கமடைய விடாமல் சீர்படுத்திக்கொள்! அல்லாஹ் தன் விசுவாச நேயரான மூஸா நபி (அலை)யோடு அந்தத் திருமலையிலிருந்து ஞான அகமியங்களை வசனித்ததுடன், தன் திருக் காட்சியையும் காட்டிக் கருணைபுரிந்த பாக்கியத்தால்தான், அவன் தன் திருவேதமாம் குர்ஆனில், அம்மலையின் புனிதத்தின் மீது ஆணை யிட்டுக் கூறுகிறான். (இத்தகைய பாக்கியத்துக்கு உன் இதயத்தைப் புனிதப்படுத்துவது மேலல்லவா?) இறைவனை அறிந்து கொள்ளும் ஞானோதயப் பாக்கியம் உனக்கு உயர்வாகச் சித்தியாகி விட்டால்,

அவன் உன் இதயத்தை மனித ஜின் குலங்களும், வானவர்களும் சேர்ந்து வசிக்கும் அளவுக்கு விசாலமானதாக ஆக்கிவிடுவான். இந்தப் புனிதப் படிவத்தில் உன் இதயம் இவைகளைத் தரிசிப்பதைத் தடுக்க, இவ்வுலகத்தில் எந்தப் படைப்புக்கும் சக்தியில்லை. உன் இதயமும் (இறைவனையன்றி) எதையும் நோட்டமிடாது. காருண்யனான இறைவனும், அப்போது, அதில் தன் தரிசன பாக்கியத்தை வரப்பிரசாத மாகத் தந்தருள்வான். கைத் தடிகளும், கயிறுகளும் எறியப்பட்ட சமயம் மூஸா நபி (அலை) அவர்களின் ஊன்றுகோல் என்ன ஆயிற்று என்ற சம்பவத்தை நீ தெரிந்து கொள்ளாமலா இருக்கிறாய்?

- 7 -

(புனிதமான சன்மார்க்கத்தின் வெளிப்படையான ஞானத்தில் தேர்ந்துள்ள அறிஞர் (ஆலிம்) ஒருவரிடம் உன்னதமான 'துறவு நிலை' காணப்படாவிட்டால், அவர் காலத்தவர்மீது அல்லாஹ்வின் சோதனைகளும், வேதனைகளும் இறங்குவதற்கு அந்த ஆலிமே காரணமாய் விடுகிறார்'' என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்களே, அதன் விளக்கமென்ன என்று காமிலுல் மல்லாஹ் என்ற ஞானிகள் நாயகமாருவர், ஹஜ்ரத் கௌதுல் அஃலமிடம் வினவியதற்கு, அவர்கள் விடை கூறிப் பேசினார்கள்:)

அப்படிப்பட்ட அறிஞரின் மெய்வணக்கங்களில் சித்த சுத்தி (இக்லாஸ்) இருப்பதில்லை. அதனால் அவருடைய உபதேசங்கள் மக்களின் இதயத்தில் உறைப்பதில்லை. அவர்களின் பிரசங்கங்களை மக்கள் செவி சாய்த்துக் கேட்டாலும், அதன்படி நடப்பதில்லை. (கேட்டும், நல் வணக்கம் புரியாத காரணத்தால் இறைவனின் முனிவு (அதாப்) அவர்கள் மீது இறங்குகிறது) இதயம் புனிதம் பெற்று, அங்கே ஞானோதயம் பிரகாசித்து விட்டால், 'எரிராத்துல் முஸ்தகீம்' (நேரிய சுருக்கமான) பாலத்தைக் கடக்கும் தருணம் மெய்விசுவாசியின் (மூமினின்) ஞானஜோதியின் மகிமையால், நரக அக்கினி

தணிந்துவிடுவது போன்று, அந்தப் பவித்திரமான சோதியால் பாவமென்ற நெருப்பும் தணிந்துவிடும்.

" கீழ்த்தரமான மனத்துக்கும், இச்சா பாசங்களுக்கும் முற்றும் மாறு செய்பவனாகி, மறுமைக்கான வழிகாட்டியையும் பெற்ற பின்னரே, உனக்கு மகத்தான ஏகாந்தம் சீர்படும்" என்பது மகான்களின் ஞானபோதமாகும். ஏகாந்தமென்பது மறுமைக்கான புனிதப் பாதையாகும். (வழித் துணை அவசியம்) கீழான மனத்திடமோ, மறுமைக்கு ஒளிகாட்டும் உயர்ந்த பண்பு இல்லை. அஃதே போல் இச்சாபாசங்களை இறைவன் வழித்துணையாய் ஏற்றுக் கொண்டால், அடியான் நிச்சயம் வழி தவறித்தான் விடுவான். வைத்தானும், இம்மையின் போதங்களும், மறுமைக்கான மகத்தான பாதையில் நீ நடக்கப் பெருந்தடைகளாகும்.

உன் ஆத்ம பாசங்களை முழுமையாக வாயிலிலேயே நிறுத்திவிட்டுத் தூய இதயத்துடன் ஏகாந்தத்தில் பிரவேசித்தால்தான், உன் விசுவாசத்திற்குரிய நேசனாம் வழிகாட்டியைத் தரிசிப்பாய். தங்களுக்கு ஞானோபதேசம் செய்யும்படி ஈஸா நபி (அலை)யிடம் அப்போசுத்தலர் (ஹவாரியூன்)கள் மன்றாடியதற்கு, மெய்ப்பொருளான அல்லாஹ்விடம் பயபக்தியுடன் நடந்து, அவன் கட்டளையான தீர்ப்பையும், விதிப்பையும் புனிதமாக ஏற்பதன் மூலம், அவனிடம் உண்மையான விசுவாசம் கொள்ளுங்கள்" என்று உபதேசம் அருளினார்கள். நீ தான் அல்லாஹ்வை மறுக்கும் நாத்திகனாய் திரிவதுடன், நடிப்புத் துறவியாய்ப் போலி ஏகாந்தத்தில் அமர்ந்து, பாவச் செயல்களைப் புரிந்துவிட்டு,வெளியில் வரும்போது தூய துறவி போன்றும், தவயோகி போன்றும் நடிக்கிறாயே! பின்னால் உனக்கு வரும் மகாப் பயங்கரமான முடிவைக் குறித்து நீ சிறிதும் அஞ்சுவதில்லையே!

அந்தோ பரிதாபமே! (உனக்கு வரமான செல்வத்தை இரட்சகன் முன்னரே ஒதுக்கிவிட்டிருந்தும், அதைச் சேகரித்துக் கொள்ள விழுந்தடித்துக் கொண்டு பறக்கிறாய்!) குராசானைச் சேர்ந்த ஒருவனின்

உறவினன், ஈராக்கில் இறந்து, அவன் சொத்துக்கு அங்கே யாரும் உரிமை கொள்ள ஆளில்லாவிட்டால், "குராசானிலுள்ளவனின் சொத்துத் தானே அது! எனவே, அது அவனிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்" என்று ஈராக் அரசாங்கம் அதை, அவனுக்கு அனுப்பி வைக்கிறது. இம்மாதிரியே தான் இறைவனும் தனது படைப்புகளுக்கு இரணத்தைப் பகிர்ந்து வைத்திருக்கிறான். (நீங்கள் விரும்பா விடினும்,அது உங்களை வந்து அடைந்தேவிடும்.) உண்பதும், உடுப்பதும் தவிர, வேறெந்த விவகாரத்திலும் உங்களுக்கு நாட்டமில்லை. (இரட்சகனின் திவ்விய சமூக மகத்துவத்தைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்?) சில சமயங்களில் ஞானோதயப் பிரகாசம் என்னையும் மீறிவிடுவதால் தான், அல்லாஹ்வின் மகிமைமிக்க திரு முடுகுதலைக் குறித்து உங்களிடம் பேசிவிடுகிறேன். (அதை நீங்கள் எங்கே விளாங்கிக் கொள்ளப் போகிறீர்கள்?)

தூய இதயத்தால்தான் ஆத்மாவைப் பற்றிப் பிடித்துள்ள களங்கமான ஆசாபாசங்களை அழிக்க இயலும். அதன் பாக்கியத்தால் தான் இறைவனின் திவ்விய சமூகத்தின் பக்கம் உத்தம நேசர்கள் சாய முடியும். உன் இதயத்தில் ஒருவர் மீது அன்பும், மற்றவர் மீது பகையும் நிலைப்பெற்று விட்டபோது, நீ என்ன செய்கிறாய்? நீ பிரியப்பட்டு அன்பைப் பொழிகிறாய்; நீ பிரியப்பட்டே பகையையும் வாரிக் கொட்டுகிறாய். இவ்வாறு உன் கீழான மனத்துக்கு வழிப்பட்டுச் செயல் புரிவதில் நலமொன்றுமில்லை. அன்பு சொரிவதையும், குரோதங் களைக் கொட்டுவதையும், திருகுர்ஆன், ஹதீஸின் தீர்ப்புக்கு விட்டு விட்டு அதன் போதனைக் கொப்ப நடந்துவா! உன் கோபதாபங்கள் திருக்குர்ஆன், ஹதீஸின் சம்மதத்தை ஒட்டியவையாய் இருப்பதே சிறப்பானதாகும். இன்றேல் சும்மா இருந்துவிடு! திருக்குர்ஆனும், ஹதீஸும் ஒரு விசயத்தில் தீர்ப்புக் கூறிவிட்டபின், உன் புனித இதயத்திடமும் கேட்டு (அதுவும் அவ்வாறே கூறினால்), அதன்படி பின்பற்றி நட! திருக்குர்ஆனையும், ஹதீஸையும் உன் தூய இதயம் பரிபூரண விசுவாசத்துடன் ஏற்று நல்அமல் புரிந்தால் தான், நீயும் இறைவனின் திருச் சந்நிதி வரை உயரமுடியும். அவன் திருச்

சந்நிதியின் தரிசன பாக்கியம் சித்தியாகிவிடின், பேரின்பமென்ற மெய்ஞ்ஞான ஜோதியின் மகிமையால் சத்தியம் எது, ஷைத்தான் சேட்டைகள் யாவை, இறைவனே உண்டாக்கும் ஊசாட்டங்கள் யாவை என்பவற்றையும், அவனை நீ அணுகி விட்டதையும், அவன் உன்னை அணுகியுள்ளதையும் தெளிவாய்க் கண்டுகொள்ள முடியும். இந்த அருட்சக்தி கிட்டியுள்ளவர்களே அல்லாஹ்வுடன் ஒன்றித்திருக்கும் பாக்கியசாலிகளாவர். இந்த உத்தமோத்தம மகான்களே இரட்சகனின் கிருபா கடாட்சங்களை வரப்பிரசாதமாகப் பெற்று படைப்புகளுக்கு வாரி வழங்கும் புனிதம் பெறுவார்கள்.

- 8 -

ஞானபோதம் பெற்ற இத்திருச்சபைக்கு நீ வருவதனால், நீ கற்றுக் கொண்ட (வெளிப்படையான) கலைஞானங்கள், (போலியான) பயபக்தி, நடிப்புத் துறவு, அனைத்தையும் பரிபூரணமாகக் களைந்துவிட்டு வா! வெளி வேசமான வணக்கத்துடன் இச்சபையில் புகுந்துகொண்டாலும், அநேகமாக என்னை நீ நெருங்கிவிடாமல், அவை என்னை மறைத்துக் கொள்ளவுங்கூடும். ஆகவேதான், அவைகளைக் கட்டோடு அப்பாலாக்கிவிட்டுப் புனிதமாக வந்து, இங்குள்ள சௌபாக்கியங்களையெல்லாம் அமோகமாக வாரிக்கொள் என்கிறேன். அப்படியானால் தான் அவைகளும் (முன்னால் உன்னிடமிருந்த பயபக்தியும், கலா ஞானங்களும்கூட) உன்னிடமே தங்கிப் புனிதமடையும். பிறர் மனங்களில் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் விசயங்களையெல்லாம் வெளிப்படுத்திக் கூறும் ஒரு மாபெரும் மகாத்மாவிடம் சென்று ஞானபோதம் பெற்றுக் கொண்டிருந்தேன். ஒரு தினம் மகானவர்கள் "என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாயா?" என்று என்னிடம் வினவினார்கள். நான் "ஆம்" என்றதும், மகானவர்கள், "நான் சாயிமுத் தஹ்ர்" (வருட முழுவதும் நோன்பு நோற்பவன்). எப்போதும் இரவின் இறுதிக் கட்டத்தில்தான் நோன்பை விடுவேன்; நீயும் இவ்வாறு செய். இந்த நகரின் உணவு சுத்தமானதல்ல. ஆகவே, இதைத் தவிர்த்துக் கொள் இந்த நிலை சித்தியாகும்" என அருளினார்கள்.

மக்களுக்கு ஞானோபதேசம் புரியும்படி ஹஜ்ரத் சிர்ரிசிக்தி (ரஹ்) அவர்கள், மகான் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களைப் பன்முறை ஆக்ஞாபித்தும், ஜுனைத் அவர்கள் (தங்கள் பணிவின் காரணமாக) அதை ஏற்றுக் கொள்ளாமலேயே இருந்தார்கள். இதற்கிடையில் ஒரு சமயம் மகான் ஜுனைத் கனவில் நபிபெருமான் (ஸல்) அவர்கள் தோன்றி, ஞானோபதேசம் செய்யும்படி அவர்களுக்கு உத்தர விட்டார்கள். இச்சுபச் செய்தியை ஜுனைத் தங்கள் குருமகானிடம் கூறியதும் ஹஜ்ரத் சிர்ரி சிக்தியவர்கள், "ஜுனைதே! ஞானபோதம் புரியும்படி நான் உங்களை ஏவினேன்; அதற்காக நம்பெருமான் (ஸல்) அவர்களிடமிருந்து புனித ஆணை வரட்டுமென்று காத்திருந்தீர்கள்" என்று அன்புடன் கூறிப் போற்றினார்கள்.

அந்தோ கைசேதமே, உன் நல்வணக்கங்களே இன்னும் புனிதப்படவில்லையே, நீயா மக்களுக்கு உபதேசிக்கக் கிளம்புகிறாய்? இப்பூவுலகிலோ, வானத்திலோ, இம்மை, மறுமை, எதிலுமோ, இறைவனையன்றி வேறு எவரைக் கண்டும் நான் அஞ்சமாட்டேன்; என் தேவைக்காக எவரிடமும் தேடியலையவும் மாட்டேன். ஞானநாதர் ஒருவரை சந்தித்து, "நீங்கள் இறைவனைத் தரிசிக்கிறீர்களா?" என்று ஒருவர் வினவியதற்கு அவர்கள், "நான் இறைவனைத் தரிசிக்காமல் இருந்தால், இங்கே வெடித்துத் துண்டு துண்டாக ஆகிவிடுவேன்" என்றதும், "அவனை எவ்வாறு தரிசிக்கிறீர்கள்?" என்று அம்மனிதர் மீண்டும் வினவினார். மகானவர்கள், "இறைவனின் சத்திய 'உள்ளமை' என் கண்களை மறைக்கிறது. பின்னர் சுவர்க்கத்தில் தனது சிறந்த அடியார்களுக்குத் தனது பவித்திரமான தரிசனத்தை (லிகா) கடாட்சிப்பது போல், இறைவன் தனது புனித உள்ளமையை என் கண்கள் தரிசிக்க அருள் புரிகிறான். தான் நாடியபடி தனது தரிசனத்தையும், தனது (ஸிபாத்து) கல்யாண குணங்களையும் காட்டிக் கடாட்சிக்கிறான்; அருட்கொடையை (இஹ்ஸான்) என் மீது பொழிகிறான்; பேரின்பத்தையும், சௌபாக்கிய சம்பத்துக்களையும், முடிவிலாக் கீர்த்திமிக்க கருணையையும் தரிசிக்கச் செய்கிறான்" என்று பதில் உரைத்தார்கள்.

அடியான் (தான் தானென்னும்) தனது உள்ளமையின் கட்டளையிலிருந்தே புனிதமாகி, தனக்கும் தனது இரட்சகனுக்கு மிடையில் தூய இதயத்தைத் தூதாக நியமித்துக் கொண்ட பின்னரே, எம்பெருமான் (ஸல்) அவர்கள். அவன் கனவில் தரிசனை தந்து ஞான போதமருளிச் சன்மார்க்க ஏவல் விலக்கல்களின் அகமியங்களைத் துலக்கி வைப்பார்கள். (இந்த நிலையான பதவி சித்தியான பின்னரே) அந்த உத்தம சீலனான அடியானுக்கு உன்னதமான 'கூபி'த்துவம் சீர்படும்; அவனுடைய தூய இதயம் பவித்திரமடையும். சர்வலோக இரட்சகனான அல்லாஹ்வின் திவ்விய சமூகத்தில் கண்ணியத்துடன் அமரும் பாக்கியம் கிட்டும். மகிமையுள்ள கூபியின் கரங்களே எம்பெருமான் (ஸல்) அவர்களோடு தொடர்பு கொள்ளும் பெருமைக்கு உரியவையாகும். முதன் முதலாக ஹஜரத் ஆதம் (அலை) பேசிய சுர்யானி மொழியிலேயே மறுமையில் கேள்வி கணக்குக் கேட்கப் பெறுமாயினும், சுவர்க்கம் புகுந்தபின் எம்பெருமான் (ஸல்) அவர்கள் பேசி வந்த மொழியில் அங்கே உரையாடல்கள் நடைபெறும்.

அடியான் இறைவனுக்குப் பூரணமாக அடிபணிந்து நடந்து வந்தால், இறைவனும் அந்த அடியானுக்குச் சர்வ ஞானங்களையும் கடாட்சித்துக் கருணை புரிகிறான். அந்த அடியான் தனக்கு மாறு செய்தாலும் கூட, இறைவன் அவனுக்கு அருளியுள்ள ஞானங்களை அவனிடமிருந்து பறித்துக் கொள்வதில்லை. ஏனெனில், மறுமையில் அவன் "எனக்குச் சரியான ஞானமில்லை; அதனாலேயே நான் மெய் வணக்கம் புரியவில்லை" என்று வாதாட இடம் உண்டாகி விடக்கூடாதல்லவா!

- 9 -

உண்மை விசுவாசியின் புனித இதயத்தில் அமரத்துவ (மலக்கூத்தின்) உணர்வு பாய்ந்ததும், அது அங்கேயே தரிபட்டு "நீ யார், எங்கிருந்து வந்தாய்?" என்று இதயத்தை விளிக்கும். அதற்கு, "நான் தீர்க்கதரிசனத்தில் (நுபுவத்தில்) உன் அம்சமாவேன். உள்ளும், புறமும் அறிந்த சர்வ வியாபியான இறைவனின் புறத்தாலாகிப் புனிதமான நெறியில் நடந்து, அன்பனின் சந்நிதியிலிருந்து வருகிறேன்" என்று

இதயம் கூறும். பிறகு அந்த அமரத்துவ உணர்வும், மெய் விசுவாசியின் அகத்தையும், கண்களிலும், காதுகளிலும் பாய்ந்து ஊடாடும். அப்போது அந்தப் புனித இதயம், அகத்தையும் அப்பாலாக்கிவிட்டு, ஏகாந்தத்தை (கல்வத்) ஏற்றுவிடும். உத்தமோத்தம சீலர்களான நாதாக்களே, அந்த நிலையின் மகிமையைப் பெற்றுச் சுகிக்க முடியும். பின்னரும் புனித மெய் விசுவாசியின் இதயத்தில் அகமியங்கள் சில விளங்காத நிலைமைகளும் தோன்றிய பின், எல்லாம் அப்பாலாகி, அமர சாந்தி சித்தியாகிவிடும். இப்புனித படிவம் அடியானுக்குக் கைவல்யமானதும் அவன் ஊரையும், உத்தமர்களையும் புறக்கணித்துவிட்டுத் 'தனிமை' (கல்வத்)யை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லாது போகிறது. சதாவும் அவன் இதயம் ஞான அகமியங்களுடன் கலந்து, யாருடனோ சம்பாஷிப்பது போன்றும், எதையோ கேட்டுக் கொண்டிருப்பது போன்றும் நிகழ்வதைக் காணலாம்.

(இந்தச் சமயம் ஒருவர் எழுந்து நின்று, ஏதோ கேட்கவே, ஹஜ்ரத் கௌதுல் அஃலமவர்கள் மேலும் தொடர்ந்து பேசியதாவது:)

மனிதனே! இம்மை, மறுமை இரண்டின் வேட்கைகளையும், தூய்மையாக (உன் இதயத்திலிருந்து) அப்பாலாக்கிவிட்டு, இரட்சகனிடமே கேள்! (உனக்கு சிலாக்கியமானதை அருளுமாறு இறைஞ்சு.) இறைவனே உனக்குச் சௌபாக்கிய சம்பத்துக்களை அருளினாலும், (அதனை மோகித்து எடுத்துக் கொள்ளாமல்) அன்பளிப்பு என்ற வகையில் ஏற்றுக் கொள். அதைக்கூட விரும்பாத சம்பூர்ணப் பண்புடன் உன் துறவு நிலையைப் பரிசுத்தப் படுத்திக்கொள்! "ஈஸா நபியே, நான் உம்மைப் புறக்கணித்து அப்பாலாகி விடாத வகையில் பரிபூரண பயபக்தியுடன் ஒழுகிக் கொள்வீராக!" என்று ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் உத்தரவிட்டுள்ளான். ஒரு சமயம் மூஸா நபி (அலை) "ஏ இரட்சகா எனக்கு மகத்தான அகமியங்களை உபதேசி!" என்று பிரார்த்திக்க, "என்னைத் தேடி அடைந்து கொள்ளும்!" என்று இறைவன் உத்தரவிட்டான். இவ்வாறு மூஸா நபி நான்கு தடவை பிரார்த்தித்தும், இறைவனும் அதே பதிலையே அளித்துள்ளதைச் சிந்தித்துப்பார்!

உன் கீழான மனம் என்ற பகைவனை வீழ்த்திவிட்டு, (உன்னைச்) சன்மார்க்க நெறிமுறை (ஷரீஅத்) என்ற போர்வையால் போர்த்திப் போசிக்கவேண்டும். பின்னரே நீயும் ஞானபோதகனாகும் தகுதி பெறுவாய். அதன் பின்னரே இரட்சகன் கருணை என்ற அமுதை அருந்தும் மகத்தான நற்பேறு உனக்குக் கிட்டும். அம்மகத்தான வரப்பிரசாதத்தை முதலில் உன் கீழான மனத்துக்கு ஊட்டிவிடாமல் மற்ற படைப்புகளுக்கே ஊட்டும் மகிமையும் பெறுவாய்.. படைப்புகளின் ஆத்ம ஞான வேட்கையும் தணியும். புனித ஷரீஅத்தின் சிறப்பான ஏவல் விலக்கல்களை உயர்வாகக் கடைபிடித்து மெய்வணக்கங்களால் உறுதி பெற்றபின். பேரின்பமான (இரட்சகனின்) திவ்விய தரிசனமும், மெய்ஞ்ஞான அகமியங்களும் பிரத்தியட்சமாகின்றனவா. இல்லையா என்பதைப் பார்! அறியாமை மிகுந்த சாதாரண மக்கள் (அவாமுன்னாஸ்கள்) தாம் உண்டியிலும். சிற்றின்பத்திலும் பிரியமுள்ளவர்களாய்த் திரிகின்றனர். (இரட்சகனின் முடுகுதல், மெய்ஞ்ஞான அகமியங்களை அறிதல் பற்றியெல்லாம் இவர்கள் எதுவும் அறியமாட்டார்கள்) என் முன் அமர்ந்திருப்போர்களே! உங்களையும், பூமி, வானம் அனைத்தையும் படைக்கப் படாதவைகளைப் போன்றே கருதிக் கொண்டும், இறைவனைத் தவிர வேறு எந்தப் படைப்பும் எனக்கு லாபமோ, நட்டமோ உண்டாக்கி விடாது என்பதை மெய்யாகவே உணர்ந்து கொண்டே நான் உங்களுக்கு உபதேசம் புரிகிறேன்.

- 10 -

('முரீதை முன்பே தடுத்துச் சீர்படுத்து' என்ற ஞானநாதர் ஒருவரின் அருள்வாக்கின் விளக்கமாக ஆண்டகை அவர்கள் பேசியதாவது:)

அல்லாஹ்வின் திவ்விய தரிசனத்தையும், அதனாலுண்டாகும் பேரின்பங்களையும் சாதகன்-முரீது ெசவ்வையாக உணரத் ெதாடங்கு முன்பே, அவனைத் ெதாழுகை, நோன்பு, ஆத்மப் புனிதத்துக்கான ெமய்வணக்கங்களைச் சரிவரக் கடைப்பிடித்தல் ஆகியவற்றில் கண்டிப்பான முறையில்

ஈடுபடுத்து. ஏெனனில், சாதகன் (ஷரீஅத்தின் நடைமுறைப் பழக்கமின்றி, எடுத்த எடுப்பிலேயே) இறைவனின் தரிசன பாக்கியப் பேரின்பத்தில் மூழ்கிவிட்டால், கடமையான ெமய் வணக்கங்களைக் கடைப்பிடிப்பதில் சோம்பல் காண்பித்து விடுவான். அதனால் சம்பூர்ணமான பேரின்பத்தைச் சுவைக்க இயலாது போய்விடும். ஆகையால்தான், முதன் முதலாக உன் ஆத்மயோக (ஷரீஅத்தின் கடமையான நல் அமல்கள் என்ற) உணவைச் சாத்தானுக்கு ஊட்டிப் போசிக்க வேண்டும். இவ்வாறு அவன் ஆத்மயோக சித்தியில் (ஷரீஅத்தின் அமல்களைக் கடைப்பிடித்துச்) சீர்படடா முன்பே, 'தரிசன பாக்கியம்' என்ற படியில் ஏறிக் ெகாண்டால், உன் ப்யிற்சியால் பூரணமாகச் சீர்படாமல் ஒரே திசையில் மட்டுமே சிந்தையைச் ெசலுத்தி விடுவான்.

அந்தோ பரிதாபம். ஒவ்வொருவனும் (இம்மையின் தீய பாசங்களில்) மூழ்கிக் கிடக்கிறான். ஒருவன் பதவிப் பித்தனாயிருந்தால், மற்றவன் செல்வ சம்பத்துக்களைத் தேடியலைகிறான். வேறொருவன் மன்னனாக ஆவல் கொண்டால், பிரிதொருவன் ஆடை அணிகளில் மோகம் கொண்டு அலைகிறான். ஒருவன் நோன்பு நோற்பதை மட்டும் கடமையாகக் கொண்டிருந்தால், மற்றவன் தொழுகையில் மட்டும் சிந்தனை செலுத்துகிறான். ஒருவன் ஏகாந்தத்தில் மட்டும் அமர்ந்து விட்டால், மற்றொருவன் நரக நெருப்பை நினைத்து வருந்துவதோடு நின்று விடுகிறான். (அதைத் தவிர்க்க அமல் புரிவதில்லை) இன்னொருவனோ சுவர்க்கத்தில் நுழைந்து விடத் துடிக்கிறான். ஆனால், ஒரேயொரு அடியார் மட்டும் (இவர்களுக்குப் புறம்பாகத்) தன் தூய உள்ளத்தை இறைவனின் மகத்தான நேசத்துக்காக அர்ப் பணித்து, அவனுடன், தன்னைப் புனிதமாகப் பிணைத்துக் கொண்டு, பிற படைப்புகளின் மோகப் பாசங்களை(த்தன் இதயத்திலிருந்து) அப்பாலாக்கி விட்டு, படைத்தவனின் பவித்திரமான பாதையாம். சன்மார்க்க நெறிமுறையின் புனருத்தாரணத்துக்காகச் சகாயம் புரிவதில் கருத்தாவார். எனவே, இம்மையின் தீய

பாசங்களைப் பரிபூரணமாக அப்பாலாக்குவதன் மூலம், புனிதம் பெற்ற,அத்தகைய ஞான நாதர்கள் உனக்குக் கிடைத்தால், அவர் களோடு உன்னை மகத்தான உறுதியுடன் பிணைத்துக்கொள்.

மெய் விசுவாசியானவனுக்கு(ப்புனித மூமினுக்கு) மகிழ்ச்சி, அவன் வதனத்தில் மட்டும் நிலவும். அவனுடைய இதயமோ, (இறைதரிசன பாக்கியத்தைத் தேடிக்) கவலைபட்டுக் கொண்டிருக்கும். இந்தப் பாக்கியம் சித்தியான பின்னரோ மகிழ்ச்சி இதயத்திலும், கவலை வதனத்திலுமாக மாறிவிடும். பரமனின் விதிப்பு, தீர்ப்புகளின் அகமியங்களை அறிந்து கொண்ட பூரிப்பால் இதயத்தில் மகிழ்ச்சியும், படைப்புகளை எவ்வாறு புனிதப்படுத்தி, முக்தி மார்க்கத்தைக் காட்டுவதென்ற வியாகூலத்தால் முகத்தில் கவலையும் உண்டா கின்றன. இம்மை உன்னத மெய்விசுவாசியின் சிறைக்கூடமாகும். வாயளவில் மெய்விசுவாசத்தின் (ஈமானின்) படிவத்தில் மட்டும் நின்று விடுபவர்களுக்கு இம்மை, சிறையாகத் தான் தோன்றும். பரிபூரண உள்ளச்சம் (தக்வா) அவனில் நிறைவு பெற்ற பின்னர் தான், இம்மை (சிறை)யின் ஆசாபாசங்களை விட்டும் விடுதலையான முக்தி நிலை அருளப்படும். இதையே தான் இரட்சகனும், "சத்தியமாக இறைவனுக்கு அஞ்சி நடந்தவனுக்கே (முக்தி) மார்க்கத்தைத் துலக்கி, அவன் நினையாத புறத்திலிருந்து அவனுக்கு உணவளித்துப் பாதுகாக்கிறான்" என்று எச்சரித்துள்ளான். (உண்மையான பயபக்தியின் மகிமையால் தான்) அடியானின் 'தானே'என்ற உள்ளமை அழிந்து மெய்ஞ்ஞான அமுதின் பேரின்பத்தைச் சுவைக்கும் பாக்கியம் கிட்டுகிறது. அதனாலேயே இறைவனின் திரு முடுகுதல் என்ற கரம், அடியானை நெஞ்சுடன் அணைத்துக் கொள்கிறது. மேலும், பயபக்திதான் அவனுக்கு விரிப்பாகவும், அமுதங்கள் நிறைந்த தட்டங்களாகவுமாகி, அவன் தனக்கு வேண்டியவர்களுக்கு வேண்டிய மட்டும் அருட்கொடைகளைப் பொழிய கருணை புரிகிறது.

ஏ! அஞ்ஞான மிகுந்தவனே, (ஈமானின்) பிரகாசம் உன்னிடம் (நிலையற்ற) மின்னலைப்போல் இங்கே தோன்றி கணப் பொழுதில் அங்கே மறைந்து விடுகிறதே! நீ ஆயிரம் தடவைகள்,

இருந்தும்,இல்லாமலாகிய (பனாவாகிய) பின்னரே உனக்கு நற் சாந்தி சாத்தியமாகும். இரவும், பகலும் மாறி மாறி வந்து போனாலும், அதில் பேதம் காணப்படாதது போலவே, நீயும் (கால மாற்றத்தால்) சீரழியாமல் (ஞான அமுதால்) போதனை பெற்றும் ஏழு உலகங்களுக்கும் நடுநாயகமாய், உறுதியான விருட்சம் போல் ஆகி விட்டால் தான், உன் நிழலிலும் படைப்புகள் அமரும் பாக்கியம் பெறுவர். அர்த்தமற்ற உளறல்களையும், (மகான், ஞானி என்று நீயே உனக்குப் பட்டம் சூட்டிக் கொள்ளும்) பித்தலாட்டங்களையும், மெய்யாகவே விட்டுவிடு; ஏனெனில், கேவலம் அற்பக் கொசு ஒன்று உன்னைக் கடித்துவிட்டாலும், ஒரு வேளைக்குரிய உன் உணவு உனக்கு கிடைக்காவிட்டாலும் (பொறுமை இழந்து) இறுதி நாளே வந்துவிட்டது போல அலறித் துடிக்கிறாயே! மெய்ஞ்ஞான உணர்வை உள்ளத்தில் (பாத்தினில்) புகுத்தி இதயத்தோடு கலக்கச் செய். அதனால், ஞானப் பிரகாசமென்ற சிசு ஜனித்து, வளர்ந்து, உன் தூய உள்ளம் என்ற மென் மாடத்துக்குச் சென்று அமர்ந்து, சீர்பட்டு, தரை, தண்ணீர், கிழக்கு, மேற்கு அனைத்துலகிலும் சுற்றி உலாவிப் புனிதம் பெறட்டும்.

"மனிதர்கள் தூங்குகின்றனர், மரணம் வந்தால் விழித்துக் கொள்வார்கள்" என்ற எம்பெருமான் (ஸல்) அவர்களின் அமுத மொழிக்கொப்ப, நீ இம்மையின் மோக பாசமென்ற சேற்றில் உழல்கிறாய். மரணித்த பிறகு கண்விழிக்கும் கடையர்களைப் போன்றவர்கள் எப்படிப்பட்டவர்கள்! இரட்சகனின் திவ்விய சமூகம் வரை சென்று மெய்ப்பொருளின் முடுகுதல் என்ற திருவாயிலை அடைந்து புனித விசுவாசமென்ற கால்களால் ஓடுவதன் மகிமையால் இம்மை, மறுமை, தன்உள்ளமை, படைப்புகளின் மோகம் அனைத்தையும் உதறி விட்ட பின்னரே பக்கீருக்குரிய உடையுடுத்தி, ஜீவனோபாயத்துக்கான வழிகளை விட்டுவிட்டுப் பரஞ்சாட்டுதல் (தவக்குல்) மீது அமரவேண்டும். (இப்படிப்பட்ட மகிமைக்குரிய பக்கீர்களுக்கே இறுதியில்) அல்லாஹ்வின் புனித சகாயமும், கருணையும், பரிவும், நேசமும் கிட்டும். அமரலோகத்தில் (ஆலம் மலக்கூத்தில்) உரையாடும் பேறு கிட்டுவதுடன், நபிமார்கள்,

ரசூல்மார்கள், வானவர்களின் புனித ஆத்மாக்கள் சோபனம் கூறி வாழ்த்தி இரட்சகன் திருச் சந்நிதிவரை அழைத்துச் செல்லும் நற்பேறும் கிடைக்கும்.

ஏ! இதயம் செத்தவர்களே! நீங்கள் (இறைவனைப் புறக்கணித்து அவன் படைப்பான) சுவர்க்கத்தை மட்டும் ஆசிப்பதால்தான் (உங்களால்) மெய்ப்பொருளான அவனைத் தரிசிக்க முடியாமல் போய் விட்டது. திரும்புங்கள்! முழுமையாகத் திரும்புங்கள்!! இம்மையின் பாசங்களைக் குறைத்துக் கொண்டால்தான், இதயத்துக்கு இறைவன் முடுகுதலும், படைப்புகளின் பாசத்திலிருந்து சம்பூர்ணத் தூய்மையும் உண்டாகும். இந்த மகிமையால் சீர்பெற்ற உள்ளம், இறைவன் அருகில் மகிமையுடன் அமரும். இரட்சகனின் தீர்ப்பான விதி வசங்களையும், காலத்தையும், நேரத்தையும், நாழிகை வினாடி களையும், வரி வரியாக, வார்த்தை வார்த்தையாக, எழுத்தெழுத்தாக அறிந்து கொள்ளும் அருட்பேற்றையும் அடையும். இத்தகைய பேறுகளை நீங்கள் அடையும் தருணமே சாந்தி பெருகும் சுப வேளை யாகும். அப்போது உங்கள் ஆயுள் குறைந்து விட்டதையோ, அன்றி நீண்டு செல்வதையோ, இறுதிநாள் வருவதையோ, வராததையோ, படைப்புகள் உங்களை நேசிப்பதையோ, பகைப்பதையோ, அவை உங்களுக்கு இன்பமளிக்குமா, துன்பமளிக்குமா என்பதையோ பற்றியெல்லாம் உங்களுக்குக் கவலையின்றிப் போய்விடும்.

(இதன் பின் ஆண்டகை அவர்கள் ஒருவிதமாகச் சப்தமிட்டுக் கொண்டே, எழுந்து ஒருகணம் வாய் மூடி இருந்து விட்டு மீண்டும் தொடர்ந்தார்கள்)

ஏ! பேரின்ப நெருப்பே! (என்னை அதிகம் துடிக்கவிடாமல்) குளிர்ந்து, எனக்குச் சுகமளிப்பதாகிவிடு! இரட்சகா, எங்கள் அகமியம் பொதிந்த புனிதப் படிவங்களை வெளிப்படுத்தி விடாமல், கருணை புரி! (மீண்டும் அமர்ந்து) நம்மைக் குறித்து இறைவனின் ஆதி ஏற்பாடு எப்படி இருக்குமோ என்பதை எண்ணி அழலாமா என்று புலைல் (ரஹ்) அவர்களிடம், சுப்யானுத் தௌரி (ரஹ்) அவர்கள் வினவியுள்ளார்கள். இவர்களன்றோ இறைவனைப் பரிசுத்தமாக

விசுவாசிக்கும் புனித சீலர்கள்! இவர்களன்றோ உலகைப் படைத்தவனின் மகத்தான சோதனைகளை நினைத்துச் சத்தியமாகப் புலம்பும் தவசீலர்கள்! இவர்களே தங்களின் தூய வணக்கங்களை இறைவன் எங்கே அங்கீகரிக்காமல், வாழ்வின் முடிவை அதோ கதியாக்கி விடுவானோ என்ற அச்சமிகுந்து, சதாவும் துடித்துத் தூய்மை பெற்றுக் கொண்டிருப்பவர்கள். 'வாழ்வதோ சொற்ப நாட்கள்; உண்பதும், உடுப்பதுமான சஞ்சலங்களோ எண்ணற்றவை' என்ற இமாம் அஹமதுப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் பொன்மொழியை சிந்தித்துச் சீர்படு!

அன்பு மகனே, படைப்புகளிடம் உதவி தேடுதல் என்ற வாயிலைச் சம்பூர்ணமாகச் சாத்திவிடு, பின்னர் படைத்தவனின் கருணை வாயில், உனக்குத் தானே திறந்து கொள்ளும். (நீ நினையாப் புறத்திலிருந்து இறைவனின் அருட்பேறுகள் உன் மீது பொழியப்படும்.)

(இப்போது ஆண்டகை அவர்கள் எழுந்து நின்று தங்கள் திருக் கரங்களை மார்புமீது வைத்து அழுத்திக் கொண்டு, தன்னை மறந்த (வந்து) நிலையில், வலமும், இடமும் திரும்பிப் பார்த்து விட்டு அமர்ந்து மேலும் தொடர்ந்தார்கள்.)

ஏ! குருடனே! அதோ திறந்து கிடக்கும் திவ்விய வாயிலில் புகுந்து புனிதம் பெறு! இரண்டே வாயில்கள் தாம் உள்ளன. அவற்றுள் ஒன்று மூடியும், மற்றொன்று திறந்தும் கிடக்கின்றன. இதோ திறந்து கிடக்கும் (மெய்ப்பொருளின்) திருவாயிலில் சன்மார்க்க நெறிமுறையைப் புனிதமாக உயிர்ப்பிக்க வேண்டி, சம்பூர்ணமாக நபி பெருமானாரின் முன்மாதிரியைப் பின்பற்றிச் சாதனங்களை அதிகமாகப் பிரயோகப் படுத்து. எம்பெருமான் (ஸல்) அவர்களைப் பரிபூரணமாகப் பின்பற்றுவதன் மூலம் காரண கர்த்தனான காருண்யனின் திவ்விய சந்நிதியின் திசையில் தூய்மையாக முன்னேறு! ஏனெனில், பரஞ்சாட்டுதலை (தவக்குலை) எம்பெருமான் (ஸல்) அவர்கள், தங்களின் புனிதப் படிவமாக ஏற்றிருந்தும் ஜீவனோபாயத்துக்கான ஒரு தொழிலையும் செய்து நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இப்புனித நிலை உனக்குச் சித்தியானதும், தன்னைத் தானே, இருந்தும் இறந்தவன்

(பனா) ஆக்கிக் கொண்டு, முடியுமானால் (அதற்கு மேலுள்ள படிவங்களையும்) அடைந்து பாக்கியம் பெறு!

உடலுழைப்பு என்ற வழியிலேயே இரு. புனித நிலைகளைச் சிந்திக்காதே (அவை தாமே சீர்படட்டும்) எங்கும் நிறைந்துள்ள இரட்சகன் கைவசத்தில் நீ வந்து விட்டால், அவனே உனக்குப் பொறுப்பேற்று, உன்னை அணைத்துத் தன் மகத்தான அருகில் அமர்த்தி, நீ கண்டும் கேட்டுமிராத சர்வ சம்பத்துக்கள் அனைத்தையும் உன் மீது அளவின்றிப் பொழிவான். அவனது கிருபா கடாட்சங்களைக் குறித்து, "அதன் மகத்துவங்களை அல்லாஹ்தான் நன்கு அறிந்தவன்; நீங்கள் அறியமாட்டீர்கள்" என அவனே கூறியுள்ளதை சிந்தித்துப் பார்! இரட்சகனின் ஆதி ஏற்பாட்டின் அலைகளில் பணிவோடு படுத்துவிடு! அவை உன்னை எங்கு கொண்டு ஒதுக்கினாலும், அங்கே அவனது கருணை என்ற அமுதத் தானியங்களை அள்ளி உண்பாய்; எங்குத் திரும்பினாலும், அவனுடைய தரிசனத்தையே காண்பாய்; அவனது மகத்தான அரவணைப்பையும், அருகிலாதலை யும் பெறுவாய். போதுமென்ற பண்பு (கினாஅத்) பாக்கியமானவனுக்கு உதாரணமாவது; அறுசுவை அமுதங்கள் நிரம்பிய தட்டுக்களை (அவை எங்கிருந்து வந்தன என்று அறிந்து கொள்ளமுடியாத) பிறவிக் குருடனுக்கு முன் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவை எங்கிருந்து யாரால் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவன் அறிந்து கொண்டால், தன் சர்வ புலன்களையும் அடக்கிக் கொண்டு, அவைகளைக் கடாட்சிப்பவனின் பக்கமே கவனம் திரும்பியவனாகி விடுகிறான். போதும் என்ற இயல்புடையவன் மனநிலையும் இதுவே தான். அல்லாஹ்வே சர்வ சஞ்சலங்களையும் நீக்கி சௌபாக்கியங்கள் அணைத்தையும் அருளச் செய்து,சர்வ சாதனங்களையும் அளித்துக் கருணைபுரிபவன் என்பதைத் தீரிகரண சுத்தியாய் அறிந்து கொண்டவர்கள் தங்களின் தூய இதயத்தை இரட்சகனுடன் திவ்வியமாகப் பிணைத்துக் கொள்கின்றனர்.

உன் கீழான மனத்தையே (நப்ஸையே) மோகித்துக் கிடக்கிறாயே, அது தான் உன்னைப் பாழ்படுத்திச் சீர்குலைக்கும்

மெய்யான பகைவன் என்பதை நீ அறிந்து கொண்டால், நிச்சயம் அதற்கு நீ வழிப்படாமல், மாறு செய்வதுடன்,அவசியம் தேவையான அளவுகூட அதற்கு உணவளிக்கவும் மாட்டாய். புனித ஏகாந்தத்தை விட கடைத் தெருவையே மிகவும் நல்லதாகக் கருதுகிறாய். இறைவனின் மகத்தான ஞான அகமியங்களைத் தரிசிக்கப் பாக்கியமில்லாதவன் நீ. மெய்ப்பொருளின் ஞான அகமியங்களை அறியும் ஞானோதயம் பெற்றுள்ள உத்தம மகான்கள் நாவற்ற மௌனிகளாய்த் திகழ்வர். தங்களுக்குக் கடாட்சமாகியுள்ள மெய்ஞ் ஞானக் கருணையை மறைத்து வைத்துக் கொள்ள திராணியற்ற, சித்தி பெற்ற புனித சீலர்கள் படைப்புகளைப் புறக்கணித்து விட்டு வெளியேறிவிட வேண்டும். சன்மாக்கக் கடைப்பிடிப்புகளையும், ஆத்ம ஞானப் பாதையையும் சம்பூர்ணமாகப் பின்னிப் பிணைந்து, நல் அமல் புரியத் திராணி பெறாத உத்தம அடியார்கள், காடுகளையும், பாலை களையும்,குகைகளையும், (கடல், நதிக்) கரைகளையுமே தாங்கள் வசிக்கும் தலங்களாகக் கொள்வதே நலமாகும்.

- 11 -

(வறுமையும், பஞ்சமும் மிகுந்திருந்த சமயம், ஆண்டகை அவர்கள் பேசுகையில் சொன்னதாவது)

(இரட்சகன் தன் அடியார்களைச் சோதிக்க வேண்டி விதித்திருக்கும் வறுமை மூலம்) வாழ்வில் நெருக்கடி சம்பவித்து அடியானுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பிக்க ஏற்பட்ட ராச தண்டனை போன்ற கசையடியாகும். அந்தோ பரிதாபம்! இறைவனையே தூய்மையாக விசுவாசிப்பதாக நடித்துக் கொண்டு, இம்மை, மறுமைகளின் ஆசாபாசப் பிரேமைகளில் மூழ்கிக் கிடக்கிறாய்! ஏ அறிவிலி! திருந்திக் கொள்! இறைவனின் புனித சகவாசத்தை மட்டுமே காதலிப்பதாகப் பிதற்றும் நீ, உன்னைச் சோதிப்பதற்காக அவன் விதித்த சிறு கஷ்டங்களைக் கூடச் சகிக்க இயலாது. அவற்றை நீக்கிக் கொள்வதில் பராக்காகி விடுகிறாய்! இகத்தின் போக வாழ்வைத் தேடியலைகிறாய்! ஆகவே, நீ இரட்சகனின் அன்பர்களான உத்தம மகாத்மாக்களின் அணியில் அமர அருகதையற்றவன்; படைப்புப் பொருள்களின் அடிவருடி; மாசுபடிந்த கீழான மனத்தின் (நப்ஸின்) ஊசாட்டங்களுக்குப் பணிந்து பாழாகும் அடிமை.

உன்னைப் பரிசோதித்துப் பார்க்கும் உரைகல் என்னிடம் இருக்கிறது. உன்னைத் தேய்த்தும், சுண்டியும் பார்க்கும் (மெய்ஞ் ஞானிகளான) நாதாக்கள் என்னிடமிருக்கிறார்கள். (இறைவனையே நேசிப்பதாகப்) பொய் கூறித் திரிபவனே, உன் வாதம் அர்த்தமற்றது. இடமில்லாத இடத்தில் உரையாடுகிறாய். இறைவன் கடாட்சத்தைத் தேட ஒரு சிறந்த இடமும், வேளையும் உண்டு. சம்பாஷிக்க ஒரு புனித நேரமும், மௌனமாயிருக்க வேறொரு தருணமும் உண்டு. தரிசிக்கும் தருணம் வேறு, கண்களை மூடி அமர்ந்துவிடும் நேரம் வேறு, புனிதமான மெய்வணக்கங்களை உன்னதமாகப் புரியும் உத்தம மகான்கள் எங்கே? அந்தத் தவசீலர்களையே நம் புனித சகவாசத்தில் அமர்த்திக் கொள்ள விரும்புகிறோம். எங்கே மெய்விசுவாசிகள்? அம்மகாத்மாக்களுக்கே நமது நன்றியைப் பொழிவோம். அந்த மகான்களின் மெய்வணக்கங்கள் அபாரமாகப் பெருகிச் சதாவும் அவர்களுக்கு மகத்தான கருணையைப் பொழியச் செய்யும். அவர்களே இரட்சகனின் அருட்கொடைகளைக் கண்ணிய மாக மதித்து, அவற்றுக்குப் பதிலாக நல் அமல்களையும், களங்கமிலா நன்றியையும் இறைவனின் சமூகத்தில் சமர்ப்பிக்கின்றனர்.

ஆகுமான (ஹலாலான) செல்வங்களையே - அவற்றிலும் சொற்ப அளவையே - உன் உபயோகத்துக்காக நீ எடுத்துக் கொள்ள அனுமதியுண்டு. ஆகுமானது தானே என்று அளவுக்கு அதிகமாக உபயோகித்தாயோ, அது உன்னைச் சாமான்யர்களின் படிவத்தி லேயே அமர்த்திவிடும். அத்துடன் சில சமயங்களில் (ஹலாலா, ஹராமா என்ற) குழப்ப நிலையில் உன்னைக் கொண்டு போய் நிறுத்திவிடும். சில சமயங்களில் தடுக்கப்பட்டதிலும் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அதனால் நீ நரக நெருப்பின் வேதனைக்கு ஆளாகவும் நேரும். ஆகுமான சம்பத்து, பாக்கியங்களைக்கூட, அளவுக்கு அதிகமாக அநுபவிக்காதவனே மெய்யான துறவி (ஜாஹித்) ஆவான். விலக்கப்பட்டதை விட்டு விலகிக் கொள்வது தான் அனைவருடைய புனிதக் கடமையாயிற்றே! ஆகவே தான், ஆகுமானவற்றில் கூட நீ பவித்திரமான துறவுப் பண்பை மேற்கொண்டாக வேண்டும். சில சமயங்களில் எனக்கு ஒரு துயராமன மனநிலையுண்டாகிறது.

அப்போது நான், தன் அருமை மகன் இறந்த துயரச் செய்தியை கேட்டுத் துடிதுடிக்கும் தாயைப் போல் வேதனையடைகிறேன். (ஆண்டகையவர் களுக்கு ஏற்படும் 'வஜ்து' நிலையில் சில சமயங்களில் இப்படி உண்டாவதுண்டு.)

இறைவனிடம் பிரார்த்தனை புரிவதில் மட்டும் நாம் சாதாரணமாக மக்களைப் போன்றே தாழ்ந்தப் படிவத்தில் இருந்து கொண்டு, அவனது மகத்தான நன்மாராயங்களையும் காருண்ய மான அருளையும், அடையத் துடிப்பது வீணாசை அல்லவா? உன் மனதும் அகத்திலுமுள்ள ஆசாபாசங்களையும், (பேராசை மிகுந்த) நாட்டங்களையும், அப்பால்போக்கி விட்டுச் சீர்பட்டால் தான் உன் நாவு இரட்சகனுடன் பேசவும், காது அவன் குரலைக் கேட்கவும், உன் கண்கள் அவனைத் தரிசிக்கவுமான வரம் உனக்குப் பிராப்தமாகும்; வியக்கத்தக்க போரின்பங்களும், கிருபா கடாட்சங்களும் உனக்குச் சித்தியாகும்; உன் உள்ளத்தில் ஒளி, கனிவார்க்கங்களாகவும், முத்து மாணிக்கங்களாகவும் திகழும்; உன் பணியை நிறைவேற்ற ஊழியர்களும், பணியாட்களும் நியமிக்கப்படுவர். அனைவரும் உன்னைப் போற்றிப் புகழ்வதுடன் இறைவனும் எல்லாப் படைப்புகளிலும் உன்னைக் கண்ணியத்துடன் புகழ்வான். இதுவே மெய்யான விசுவாசத்திற்கு பொருத்தமான மார்க்கம்.

"எனது திருத் தூதர் உங்களுக்குத் தருவதை மகிழ்வுடன் ஏற்று, அவர் விலக்கியுள்ளதைத் தூய்மையாக ஒதுக்கி விடுங்கள்" என்ற இறைவனின் கட்டளையைக் களங்க மற்று ஏற்று இறைவனுக்கும், அவனுடைய திருத்தூதருக்கும் மெய்யாகப் பணிந்து நல் அமல் புரி. இந்த உன்னதமான பாதையில் (அப்பட்டமாகக் கடைப்பிடிப்பதில்) நானும், நீயும் நிச்சயமாக சமமானவர்கள். நீ, நீதான்; (நான், நான்தான்). அவனே (இறைவனே) ஆதியும், அந்தமும், உள்ளும் புறமுமானவன்.

- 12 -

('வஸ்ஸமாயி. வத்தாரிக்' என்ற திருக் குர்ஆன் வசனத்தின் விளக்கமாக ஆண்டகையவர்கள் பேசும்போது கூறியதாவது:)

வானத்தையும், அதைப் பார்த்த புனித அடியாரையும் பற்றி இறைவன் ஆணையிட்டுக் கூறுகிறான். வானத்தை முதலில் நபி பெருமானார் தங்கள் புனித இதயத்தால் தட்டித் தரிசித்தார்கள். பின்னர் (மிஃராஜின்போது) உயர்வான தங்கள் திருமேனியோடு ஏழு வானங்களையும் கடந்தார்கள். இரட்சகனைத் தரிசிக்கும் பாக்கியத்தையும், அவனோடு வசனிக்கும் பேற்றையும் பெற்றார்கள். பூமியில் இருந்தபோது, அகக் கண்ணாலும், வானலோக யாத்திரையின்போது முகக்கண், அகக்கண் இரண்டாலும் தரிசித்தார்கள். அவ்வாறே, இதயம் புனிதம் பெற்றுச் சீர்பெற்ற உத்தம சீலர்களுக்கும், வானத்துக்கும், அவர்களுக்கும் இடையிலுள்ள (அகமியத்) திரைகள் அப்பலாக்கப்பட்டு, அகக் கண்களால் தரிசிக்கவும், வானயாத்திரை சென்று இரட்சகன் திருவாயிலைத் தட்டவும், பாக்கியம் உண்டாக முடியும். சத்திய சீலர்களான அடியார்கள் (சித்தீகீன்கள்) இறைவன் பக்கம் அகமியப் பிரயாணம் செய்கின்றனர். அவர்களுடைய புனித இதயங்களின் மீது அல்லாஹ்வின் அகமியங்கள் (அஸ்ராக்கள்) பிரகாசிப்பதால் அவை ஒளி பெற்று விளங்குகின்றன.

மெய் விசுவாசிகளான நேசர்களின் அகப்பார்வையின் தீட்சண்யத்தைக் கண்டு, நீ மிகவும் அஞ்சி நடந்துகொள்: தூய இதயம் (கல்பு), இறைவனின் புனித முடுகுதலைப் பெற்றுக் கொண்டதும் ஒரு வானமாகச் சமைந்து அதில் மெய்ஞ்ஞானமென்ற தாரகைகளும், இறை அறிவு என்ற சூரியனும் பிரகாசிக்கத் தொடங்குகின்றன. அந்த உன்னத ஒளியில் அமரர்களும் ஒளி பெற்றுப் பிரகாசிக்கின்றனர். ஷைத்தானின் களங்கமான ஊசாட்டங்களால் இதயம் நாசமாகாமல் இருப்பதற்காக, அவை அனைத்திற்கும் இறைவன் காவலாளிகளை நியமித்திருக் கிறான். அவனது உவப்புக்குரிய உத்தம நாதர்களுக்காக, காவலாளிகள் பலரை அணிவகுத்து நிறுத்தி, அவர்களிடம் ஷைத்தான்

நெருங்க விடாமல், காத்துப் புனிதமளிக்கிறான். எனினும், இறைவனின் புனிதக் கார்மானமே அடியானுக்கு மிகவும் உயர்ந்த தாகும். நீயோ, அர்த்தமற்ற சொல்லழகிலும், நயத்திலும், சொக்கி உன் புனிதமான இதயத்தை(க் கல்பை) நாசப்படுத்தி, இருந்த இடத்திலேயே செக்கு மாடுகள் போன்று சுற்றிக் கொண்டிருக்கிறாய். "உன் அகக் கண்கள் குருடாகக் கடவது" என்று உத்தமமான ஒலியுல்லாஹ் சபித்து விட்டார்கள் போலும்! உன்னை அணுகி வந்த இறையருளை, நீ தான் உன் கைகளால் தூக்கி எறிந்து விட்டாய்! அதனால் தான் இறைவனும் உன்னை அப்பாலாக்கி நாசப்படுத்தி விட்டான். உன் மகத்தான லட்சியத்தை அடைத்துக் கொண்டு, இம்மையின் பாசங்கள் தடுத்துக் கொண்டு நிற்கின்றன. எண்ணற்ற (இம்மையின்) விசாரங்கள் உன் லட்சியத்தின் இறக்கைகளை வெட்டி விட்டிருக்கின்றன.

இம்மை, மறுமைக்கிடையில் நீ புனிதமிழந்த ஒரு சதைப் பிண்டமாயிருப்பதால், உன்னை நீயே சம்பூர்ணமாகத் தண்டித்துச் சீர்செய்து கொள். பின்னர் மகாத்மாவான சத்தியநேசர் ஒருவரின் மகத்தான நல்லாசியைப் பெறு. ஆகவே, விசுவாசிகளான மகான்களின் சீர்மிகுந்த சகவாசத்தைத் துணையாகக் கொள். பிறகே இரட்சகனின் அமரர்களான வானவர்களின் தொடர்பு சித்தியாகி உனக்கு வேறொரு திருவாயில் திறக்கப்படும். மானிடப் படைப்புகளின் விசுவாசத்தில் நீ நிறைவு கண்டதும், அதுவும் மூடப்பட்டு ஜின்னுலக வாயிலிலும் புகுந்து அதைக் கடந்து அமரர்களின் மகத்தான சந்நிதிக்குள் செல்வாய். அங்கே உன்னை எப்பொருளின் தீங்கும் தொடாது. நீரோ, நெருப்போ, எதற்கும் நீ அஞ்ச வேண்டியதில்லை. ஏன், இப்ராஹிம் நபியை நம்ரூதின் நெருப்பு தீய்த்ததா? ' சமந்தல்' என்ற பிராணியைக் கூட நெருப்பால் எரிக்க இயலாதிருந்ததைச் சிந்தித்துப் பார்!

உன் மெய்வணக்கங்களில் கலப்பறுதல் (இக்லாஸ்) சம்பூர்ணமாகச் சித்தியானால் தான் படைப்புகளின் மோகப் பாசங்களைப் பூரணமாக அப்பாலாக்கும் மகிமை உனக்குக் கடாட்சமாகும். அவைகளின் பிடியிலிருந்து தூய்மையுடன்

விலகுவாய்; படைப்புகளின் பாசங்களை அடியுடன் விலக்கி, மெய்பொருளான இறைவனைக் களங்கமற்ற விசுவாசத்துடன் தேடுவதே அவனது திவ்விய சமூகத்துக்குச் செல்லும் நேரான வழியாகும். நீ அவனைத் தேடிக் கண்டதும், உன் நிலை எப்படி இருக்கும் தெரியுமா? ஒரு பிரயாணி, வேறோர் ஊரிலிருக்கும் தனது நேசனை தெருத் தெருவாக அலைந்து தேடுகிறான். சில சமயங்களில், நண்பனின் வீடுவரையும் சென்றுகூட, உள்ளே நுழையாமல் மீண்டும் அலைகிறான். தன் நேசனைப் பார்க்க முடியாது குழம்பித் தவிக்கும் நிலையில், எதிர்பாராமல் அவன் அகப்பட்டுவிட்டால், இருவரும் கட்டித் தழுவிப் பரவசமடைவது உண்டல்லவா! அஃதே போல் தான் இருக்கும், நீ உன் இரட்சகனைத் தரிசிக்கும் நிலையும். யூசுப் நபியும் அவர் சகோதரர் புன்யாமீனும் (தனிமையில்) கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்ட சமயம், யூசுப் நபி (அலை) "நான் உன் சகோதரன் யூசுப் தான்" என்று ரகசியமாகப் புன்யாமீனின் காதில் கூறினார்கள். அதுபோன்றே உனக்கும் இறைவனின் தரிசன பாக்கியம் சித்தியாகும்.

மெய்ஞ்ஞானமும், உள்ளொளியும் நிறைந்த தூய இதயம் அல்லாஹ்வுக்குப் பிரியமான தலமாகும். அந்த மகாப் பேற்றினுக்குரிய இதயத்தை அவன் தினமும் முந்நூற்று அறுபது தடவைகள் கடைக்கணிக்கிறான். இவ்வாறு கடைக்கணிப்பதன் மூலம், அந்தப் புதிய இதயத்துக்கு இறைவன் சாந்தியை மட்டும் கடாட்சிக்காது இருந்து விட்டால், அந்த இதயம் துண்டு துண்டாக வெடித்துச் சிதறியல்லவா போய்விடும்! தூய இதயம் சீர்பெற்று இறைவனைச் சத்தியமாகத் தேடும் மகத்துவம் சித்தியான பிறகே படைப்புகளைச் சீர்படுத்த வேண்டி அத்தூய இதயம் என்ற பூமியில் மெய்ஞ்ஞானம், அகப்பிரகாசம் என்ற நதிகள் பாயவிடப்படுகின்றன. சன்மார்க்கத்தை உயிர்பித்து வைக்க, இத்தகைய சத்தியசீலர்களையே இறைவன் மலைகளாக நியமித்துள்ளான். இம் மகத்தான பணியில் எம்பெருமான் (ஸல்) அவர்களே மிக மிக உன்னதமானவர்கள் ஆவார்கள். அவர்களை அடுத்து சஹாபாக்களும், பின்னர் தாபியீன்களும், அந்தப் புனிதப்

படிவத்தில் திளைப்பவர்களாய் விளங்குகின்றனர். ஞான நாதாக்களான அனைவரும் எம்பெருமான் (ஸல்) அவர்களின் சொல், செயல் அனைத்தையும் வெளிப்படையாகவும், அந்தரங்க சுத்தியோடும் ஏற்று, நல் அமல் புரிந்ததன் மூலம், நபிமார்களின் நேத்திரங்களைக் குளிர வைத்து, வானவர்களின் சபையில் இறைவனே, இவர்களைக் குறித்துப் புகழ்ந்து பேசும் அளவுக்குப் பாக்கியமுடையவர்களாக ஆகிவிட்டனர். இவர்களைப் புனிதமாகப் பின்பற்றி நடந்து, சீர்பட்ட நல்லோர்களுக்கே சோபனம் உண்டாகட்டும்! இத்தகையவர்களின் இகலோக வாழ்வின் சுமைகளை வல்லான் இலகுவானவையாக்கிக் கருணை புரிவானாக!

- 13 -

இம்மையின் விசாரங்களைத் தூய்மையாக அப்பாலாக்கிக் கொண்டு, படைப்புகளின் நன்மைக்காக உழைப்பதே உத்தம மகான்களின் சிறந்த பணியாகும். அவர்கள் படைப்புகளை (மனித குலத்தைத்)த் தங்கள் பிள்ளைகளாகவே ஏற்றுக் கொள்கின்றனர். பற்றற்ற மகான்கள், தங்களை இகலோக பாசங்களோடு பிணைத்துக் கொள்ளாததால் தான், இம்மையின் (போக பாக்கியங்கள்) அவர்கள் மீது பொழியப்பட்டாலும், அதை மகத்தான வகையில் புறக்கணித்து விட்டுச் சீர்படுகின்றனர். உங்களிடமுள்ள (செல்வங்களும், போக பாக்கியங்களுமான) இவை உங்களுக்கு மட்டுமே சொந்தமல்ல; யாவருக்கும் பொதுவுடமையாகும். உங்கள் அயல் வீட்டுக் காரனுக்கும், அவற்றில் உரிமை (ஹக்கு) உண்டு. உங்கள் உழைப்பால் நீங்கள் சேகரித்து வைத்துள்ள செல்வங்களைப் பேணி, உரிமையுள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவே, இவை உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. "உங்களிடம் அல்லாஹ்வால் ஒப்படைக்கப்பட்ட செல்வ சம்பத்துக்களைச் செலவிடுங்கள். ஆகவே, நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதை அல்லாஹ் பார்த்துக் கொள்வான்" என்ற திருகுர்ஆனின் எச்சரிக்கையைச் சிந்தியுங்கள்.

உங்கள் அயலகத்தாரைப் பரிவுடன் உபசரியுங்கள். ஏழை, அனாதைகளின் பசியை அகற்றுங்கள். மெய் நேசர்களின்

(ஸித்தீக்குகளின்) வீடுகள் வெளிப் பார்வையில் நெருக்கடியானவை யாகக் காணப்பட்டாலும், அந்தரங்கத்தில் அவை மிக மிக விசால மானவை. படைப்புகளின் மோக பாசமென்ற வாயிலை அடைத்து விட்டும். இம்மையின் சாதனம் சம்பத்துக்கள் அனைத்தையும் இரட்சகனுக்காகவே புனிதமாக அர்ப்பணித்து விட்டும், பரமனின் திருச் சமூக வாயிலில் தூய்மையாக வந்து நின்றுவிட்ட உத்தம சீலர்கள் எங்கேயுள்ளனர்? சாதனங்களையே நம்பும் நிலையை புறக்கணித்து விட்டு, பிறகு நிகழும் மகத்தான திருக் காட்சிகளைக் கண்டு ஆனந்தப்படு. அவனது திவ்வியமான தர்பாருக்குள் வந்து விடு. சஞ்சலங்களும், விசாரங்களும் உன் மீது இறங்கும் போது, அழகிய பொறுமை, சகிப்பு என்ற திண்டின் மீது நீ ஆரோகணித்துவிட்டால், இறைவனின் விதிப்பும், தீர்ப்பும் உன் தசைகளைக் கடித்தாலும் உனக்கு வேதனையுண்டாகாது. இம் மகத்தான படிவத்தில், நீ முன் எப்போதும் கண்டிராத திருக் காட்சிகளையெல்லாம் தரிசிக்கும் மகிமை சித்தியாகும். பிரபஞ்சம் உன்னை எவ்வாறு மேன்மைப்படுத்திப் போசிக்கிறது. அவனுடைய அன்பு உன்னை எப்படி மாண்புறச் செய்கிறது என்பனவெல்லாம் காண்பாய்.

உனக்கு முக்கியத் தேவை ஏற்பட்ட சமயங்களில்கூடப் பதறிவிடாமல் (இரட்சகன் மீது நம்பிக்கை வைத்து) மௌனமாயிருப்பதன் மூலம் தான், புனிதமான இறை சகாயம் கிடைக்கும். இப்புனித படிவங்களைச் சித்தியாக்கிக் கொண்டதால் தான், தன் மெய்நேசர்களை இறைவன் போற்றிப் புகழுகின்றான். மூஸா நபிக்கு வேறெந்தத் தாயின் மார்பினின்றும் பாலூட்டாமல், அவர்களை அவர்களின் மாதாவின் மார்பின் பக்கமே திருப்பப்பட்டது போன்றும், மெய்யன்பர்களுக்குப் படைப்புகளின் சகாயம், பொருள்களின் தேவை என்ற மார்புகளை ஆகாதவையாக (ஹராமானவையாக) ஆக்கி, அவர்களைத் தன் திவ்விய சமூகத்தின் பக்கமே திருப்பிக்கொள்வான். இறைவன் (லுத்பு என்ற) பேரின்ப மடியில் அமர்ந்து விட்டால், அந்த மிகுந்த வாசனைக்கு முன் இம்மையின் விசாரங்கள், சுகபோகங்கள் அனைத்தும் ஒரு

பொருட்டாகவே தோன்றா. "அமைதியற்ற அடியானின், பொங்கி வரும் புனிதத் துஆவை (முறையீட்டை) ஏற்றுக் கொள்பவன் யார்?" என்று இறைவனே வினவுகிறான். பிரார்த்தனையில் நீ மூழ்கி விடுவதை அவன் விரும்புவதால் தான். தன் திவ்விய சந்நிதியின் திருவாயிலில் மட்டுமே நீ அமர்ந்து விட வேண்டுமென்று, உனக்கு முன்னுள்ள (இம்மையின்) மற்ற வாயில்கள் அனைத்தையும் அடைத்து வைத்திருக்கிறான்.

ஒரு தாய் தன் மகனை வெளியில் விட்டு விட்டு, வீட்டையும் தாளிட்டு அடைத்துக் கொண்டு, அவ்வாறே மற்ற வீட்டுக் காரர்களையும் தன் மகனுக்கு அவர்கள் இல்லங்களில் இடமளிக்காமல் கதவை அடைக்குமாறு திட்டம் செய்து விட்டால், அந்தக் குழந்தை எங்கும் சுற்றியலைந்து, தங்குவதற்கு இடமின்றி, அயர்ந்து உட்கார்ந்து, பின் தாயின் இல்லத்திற்குத் தானே வரும்! அப்போது கிருபையுள்ள அந்தத் தாய் வீட்டைத் திறந்து, தன் செல்வப் புதல்வனை உள்ளே அழைத்துக் கொள்வதே போல், சீர்பெற்ற மெய்யடியார்களுக்கு இரட்சகனின் புனித முடுகுதல் என்ற சிறப்பான திருவாசல், சதாவும் திறந்த வண்ணமே இருக்கும். மெய்நேசர்கள் படைப்புகளின் பாசத்தில் தங்களைப் பிணைத்துக் கொள்ளாமல், தனது திருச்சந்நிதி வாயிலின் பக்கமே திரும்பி வரவேண்டுமென்றே இறைவன், அவர்களுக்குச் சில விசாரங்களையும் விட்டுச் சோதித்துச் சீர்படுத்துகிறான். தனது உணவுக்காக (ரிஜ்குக்காக) விசாரப்பட்டுத் தேடி அலையாமல், பரஞ்சாட்டுவதே மெய்யான பக்கீருக்குள்ள மகிமையாகும். எனினும், வேறு போக்கில்லை என்றால் மட்டுமே, சிறிதளவு தேடிக் கொள்வதில் குற்றமில்லை.

இறைவன் தனது திருச் சந்நிதியில் உன்னை அமர்த்த நாடி, (வறுமை, மிடிமைகளைத் தந்து) பரீட்சித்தால், அகமும், முகமும் மலர்ந்து, மகிழ்வுடன் அதற்கு உட்பட்டுக் கொள். இன்றேல் அந்த விசாரங்களிலேயே நீ மூழ்கிக் கிடக்குமாறு அவன் சபித்து விடுவான். சோதனைகளின் நேரத்தில் நீ சகிப்புக் காட்டாமல் இருக்கக் காரணம், நீ இம்மையின் செல்வங்கள் மீது மோகம் கொண்டிருப்பது தான்.

இறைவன் திருமுன் நெருங்க விடாமல் உன்னைத் தடுப்பதும் அதுவேயாகும். கட்டுக்காவல் இல்லாத நகரம் சீரழிந்து விடுவது போலும், மேய்ப்பாளன் இல்லாத மந்தை (ஓநாய்களுக்குப்) பலியாகி விடுவது போலும், இரட்சகன் மீது அதிகமான பயபக்தி (தக்வா) அற்றவனிடம் மெய்ஞ்ஞானப் பிரகாசமே (அறிவே) இலங்காது. உள்ளச்சம் (தக்வா) தான் சன்மார்க்கத்தின் அடிப்படையாகும். ஆகவே உள்ளச்சமிக்க உத்தம மகான்கள், இருளிலேயே, எழுந்து விடுகிறார் கள், நடந்து, நடந்து எங்கும் நிற்காமல் போய்க் கொண்டே இருக்கிறார் கள். இறைவனின் திருச் சமூகத்தில்தான் அவர்களின் பயணம் முடிவு பெறுகிறது. தூய உள்ளத்தால் செல்லும் (பக்தி) பயணமே மிகவும் சிலாக்கியமானதாகும். (அவ்வாறு செல்லும்) புனித இதயம் (இரட்ச கன்) திருவாயிலை அடைந்து திருச் சபைக்குள் வர அனுமதி பெற்று இறைவனுடன் பிணை கொள்ளவே துடித்துக் கொண்டிருக்கிறது.

எம்பெருமான் (ஸல்) அவர்களின் மகிமை மிக்க இதயமென்ற தாரகை, சந்திரனாயும், சந்திரன் சூரியனாயும் மிளிர்ந்து (அதன் மகிமையால் அவர்களின்) ஏகாந்தம் மெய்ஞ்ஞான ஜோதி இலங்கும் (ஜல்வத்) புனித நேரமாயும் சமைந்து, அவர்களின் (அகத்) தோற்றமே வெளிக் கோலமாயும் (பாத்தினே லாஹிராயும்) மிளிர்கிறது. அடியான் சாயுட்சிய நிலைக்கு (உருஜூக்கு)ம், புனிதப்படாத கீழ்நிலைக்கு மிடையில் ஆழ்ந்து கிடக்கிறான். அவன் சித்த சுத்தியோடு இறைவனின் திவ்விய சமூகத்தில் தன்னை முழுக்க முழுக்கச் சம்பூர்ணமாக அமர்த்திக் கொண்டால், அங்கே (இரட்சகனின் கருணையான) பேரின்ப சாகரத்தின் அடிப்பாதாளத்தில் மண்டிக் கிடக்கும் முத்து மாணிக்கங்களை எல்லாம் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும். அத்துடன் அவைகளை எடுத்துக் கொள்ள அவன் நாடினால், அங்கிருப்போர் மகத்தான அந்த செல்வங்களை வேண்டிய மட்டும் வாரிக் கொள்ளும்படி அனுமதியளிப்பார்கள். இவ்வாறான உன்னத ஞான மகான்களே, இரட்சகனின் புறத்திலிருந்து பூமிக்கும் வானத்துக்கும் நாயகர்களாக நியமிக்கப்படும் பாக்கியம் பெறுவார்கள். அவ்வாறு சீர்பெற்றுப் புனிதமடைந்து விட்ட ஞானநாதர்களை

வரவேற்கவே, எதிர்பார்த்துக் கொண்டு,கருணையாளனின் திவ்விய சமூகத் திருவாயிலில் நான் அமர்ந்து கொண்டிருக்கிறேன்.

என் தூக்கம், விழிப்பு ஆகிய சர்வ நிலைகளிலும், உங்களின் புனிதத்தையே வேண்டி நிற்கிறேன். உங்களின் நன்மைக்காகவே, இந்த நகரமும், மக்களும் தரும் சஞ்சலங்களையும், இடையூறு களையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கவலை, வியாகூலம், சிந்தனை, இரக்கம் முதலியவைகளால் என் காலையை மாலையாகவும், மாலையைக் காலையாகவும் சமைத்துக் கொண்டு விட்டதால் என் சாயுட்சிய நிலை ஓர் அடி முன்னேறினால் (உங்களை விட்டுப் பிரிய மனமின்றி) இறைவனின் புனித ஆணைப்படி மீண்டும் உங்களிடமே திருப்பி விடப்படுகிறேன். ஒரு சமயம் இப்ராஹீமிப்னு அத்ஹம் அவர்கள், இறைவன் சமூகத்தில் (அவனது) மாண்புக்கும், மகிமைக்கும் தகுதி பெற்றுள்ள வகையில் எவ்வாறு பிரார்த்தனை புரிய வேண்டுமென்ற திகைப்பில் ஆழ்ந்து விட்டார்கள். அச்சமயம் இறைவன் புறத்திலிருந்து, "ஏ இப்ராஹீம், நீர் இவ்விதம் என்னிடம் பிரார்த்தியும்; இரட்சகா, உன் விதிப்புக்கு அதிகமாகப் பணிவு காட்டும் பண்பை எனக்கருள்புரி! எனக்கு உண்டாகும் துயரங்களின் இடையிலெல்லாம் சகிப்புக் காட்டும் குணத்தை எனக்குத் தந்தருள்! அடியேன் மீது நீ அருளியுள்ள போக பாக்கியங்களுக்கு எல்லாம் மெய் விசுவாசத்துடன் நான் நன்றி செலுத்திக் கொண்டிருக்க என் மீது கருணை புரி. மேலும், உன் மகத்தான வரப்பிரசாதங்களான அருட் கொடைகளுக்கு நன்றி காட்டி நீண்ட சேமத்தோடும், உன் மீது களங்கமற்ற விசுவாசத்தோடும் இருக்கக் கிருபை செய்!" என்று பிரார்த்திக்கும்படி ஆணை வந்தது.

எம் பெருமான் (ஸல்) அவர்கள் நபிப் பட்டம் பெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன் ஓர் இரைச்சலைக் கேட்டார்கள். உடனே அவர்கள் தாங்கள் இல்லத்திலிருந்து வெளியேறி 'ஹிரா' குகைக்குச் சென்று ஏகாந்தத்தில் அமர்ந்தார்கள். அங்கே இறை வெளிப்பாட்டின் (வஹியின்) புனித வசந்தம் வீசத் தொடங்கி விட்டது. ஹிராவுக்கு அருகிலுள்ள வேறொரு குகையில் அபூ கப்ஷா என்ற தவசீலர் ஒருவர்

இறைவனின் மெய் வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை அறிந்த நாயகமவர்களும், அங்குச் சென்று அம்மகானவர்களுடன் தாங்களும் அமர்ந்து மெய் வணக்கத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். இவ்விதம் அவர்கள் (தன்னை மறந்த நிலையாகிப்) புனிதக் கனவுகள் பல காணும் பேற்றினில் மூழ்கியிருந்த சமயம் சூரியோதயம் போனற தொரு ஒளி தோன்றிற்று. அதே திசையிலிருந்து, "ஏ முஹம்மதே!" என்ற ஒளி எழுந்தது. அது கேட்ட எம்பெருமான் (ஸல்) அவர்கள் திகைத்து, அங்கிருந்து வெளியேறித் தங்கள் வீட்டுக்கு வந்து, வீட்டிலிருந்தவர்களிடம், "என் மீது கம்பளியைப் போர்த்துங்கள்! என்னைத் துப்பட்டியால் மறையுங்கள். நான் ஓர் அதிசயமான குரலைக் கேட்கிறேன்" என்று கூறினார்கள். அப்போது," ஏ முஹம்மதே, கம்பளியைப் போர்த்திக் கொள்வதும், துப்பட்டியில் மறைந்துக் கொள்வதும் இதற்குப் பரிகாரமல்ல. சர்வ சக்தனான அல்லாஹ்வே தனது கருமத்தில் மிக மிக ஜெயசீலனாவான்"என்று கூறப்பட்டது.

மேற்கூரை இல்லாத நான்கு சுவர் மட்டுமுள்ள ஒரு வீட்டு முற்றத்தின் மண் தரையில், விழுந்த ஒரு பாதாங்கொட்டை, மழையானும், சூரிய உஷ்ணத்தானும் உள்ளுக்குள்ளேயே யாருமறியாமல் வளர்ந்துள்ள நிலையில், அதன் கிளைகள் சுவர்களுக்கு வெளிப் பக்கம் வந்த பிறகே அதிலிருந்து வெளியில் விழும் கொட்டைகளை மக்கள் பொறுக்க முடிகிறது. எனினும், நான்கு பக்கமும் சுவர்கள் இருப்பதால், மரத்தின் அருகில் மட்டும் அவர்களால் நெருங்க முடிவதில்லையல்லவா? இஃதே போன்று தான் இறைவன் தன் அடியானின் இதயத்தையும், தான் நாடியிருக்கும் தருணம் வரும் வரை உள்ளுக்குள் வைத்தே அதனுள் உத்தமமான ஜீவனை ஊட்டிப் பாதுகாக்கிறான்.

பாதம் மரம் வளர்ந்து கொட்டைகள் பழுத்து நிற்கும் நிலை போன்று, மகத்தான இறைத் தோழமையும் (விலாயத்) அகத்துள் பழுக்கிறது. அமரர்கள் அந்த இதயத்துள் புகுந்து, சதாவும் அதனுடன் அமர்ந்து, அதைச் சுத்தி செய்து சீர்படுத்துகின்றனர். பினனர், அப்புனித இதயம் இறைவனின் சமீபத்துவத்தைப் பெறுகிறது; வானவர்களும்

சென்று அமருவதற்குப் பாக்கியம் பெறாத, மகத்தான படிவத்தை அது அடைந்து கொள்கிறது. (பின்னரே இறைவன் கட்டளையிட்டிருப்பின்) படைப்புகளுக்கு நல்வழி காட்டும் பணியில் இவ்வித சாயுட்சிய பதவி அடைந்த மகான்கள் ஈடுபடுகின்றனர்.

பேணுதலுடன் உணவருந்தவும், உடையுடுத்தவுமே அன்றி வேறு எதையும் பரம்பொருளான இரட்சகனிடம் யாசிக்க வேண்டாம். அப்படி யாசித்தால் அவனுடைய திவ்விய சந்நிதியை நீ புறக்கணித்து ஓட நேர்ந்துவிடும். இம்மையின் செல்வங்களை அடைவதற்காக மட்டும் அவனுக்கு மெய்வணக்கம் புரிவதாக நடிக்காதே! அருளாளனை அப்பாலாக்கி விட்டு, அருட்கொடைகளைச் சேகரிப்பதால் நீ எதைச் சாதித்து விடலாமென்று நினைக்கிறாய்? இரட்சகா, உன்னையல்லாத படைப்புப் பொருள்களின் பாசங்களை விட்டு எங்களை அப்பாலாக்கிப் புனிதப்படுத்து! உண்மையில் எந்த மதிப்புமற்ற படைப்புப் பொருள்களின் பாசத்தில் எங்களைப் பிணைத்து விடாதே!

(ஆண்டகையவர்கள் இந்தப் பிரார்த்தனையை மிகவும் உணர்ச்சியும், வேகமும் கலந்த தொனியுடன், விறு விறுப்பாகக் கேட்டுவிட்டு, சிறு பொழுது முகத்தை மூடிக் கொண்டிருந்து, பின் உரத்த சப்தத்துடன் எழுந்து நின்று பின் அமர்ந்து, மீண்டும் எழுந்து நின்று பேசலானார்கள்:)

நான் இவ்வாறு செய்ததன் காரணத்தை இன்னும் சில நாட்களில் நிச்சயமாகத் தெரிந்து கொள்வீர்கள். மெய் நேசர்களான உத்தம ஞானநாதர்கள் இகவாழ்விற்கான அற்பப் பொருட்களையும் கூட, இரட்சகனிடம் யாசிப்பதை கடமையாக எண்ணுகின்றனர். தாங்கள் பேராசைக்காரர்களாக ஆகிவிடக் கூடாதே, தங்களை முற்றும் அாப்பணித்து உள்ளதில் குறை உண்டாகி விடக் கூடாதே என்று இவர்கள் அஞ்சுகின்றனர். (இரட்சகன் மீதுள்ள) பேரின்ப (ஷௌக்) மிகுதியால் அவனிருக்கும் திசையை நாடியே மகான்களின் திருப்பாதங்கள் முன்னேறுகின்றன. இம்மையின் மோகமும், பாசமும்

உன்னிலிருந்து பரிபூரணமாக அப்பாலானால் தான், அதை ஆட்டிப்படைப்பது உனக்கு இலகுவானதாகும்.

இறை நேசர்களான (ஔலியாக்களான) ஞான நாதாக்களுக்கே முற்றிலும் சொந்தமான படித்தரங்கள் சில உண்டு. படைப்புகளின் சீர்பாட்டுக்கான பணிகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளாத வரை, அவர்கள் (தங்களையே மாற்றித் தூய்மைப் படுத்திக் கொண்ட) உத்தம சீலர்களாக முடியவே முடியாது. இந்த மேலான ஔழியத்துக்கு அவர்களை அல்லாஹ்வே நியமித்து விடுவதால்தான், அவர்கள் சதாவும் அவனுடைய புனித தரிசனத்திலிருந்து அப்பாலாவதே இல்லை. (படைப்புகளைச் சீர்படுத்தும் பணியான) பொறுப்பு வெளிப் படையில் அவர்கள் மீது இருப்பதுபோல் காணப்பட்டாலும், உண்மையில் இறைவனின் கிருபாகடாட்சம் என்ற திருக் கரங்களிலேயே இருக்கிறது. அன்பர்களே, சத்தியத்தை (தூய்மை யை)ச் சம்பூரணமாக ஏற்கும் சற்குணத்தை உங்களகத்தே வளருங்கள்; அவதூறு பேசும் தூய பழக்கத்தை உங்கள் இதயத்திலிருந்தே அகற்றிச் சீர்படுங்கள்.

- 14 -

('இன்ன நாஷிஅதுல் லைல்லி' என்ற திருவசனத்தை வியாக்கியானம் செய்யத் தொடங்கி, ஆண்டகை அவர்கள் கூறியதாவது:)

இரவில் சிறிது நேரம் தூங்கி எழுந்து பின் தொழுவதே தஹஜ்ஜுத்தாகும். (எனினும், ஞான நாதர்களோ இதற்கு வேறு பொருள் கொள்கின்றனர்.) படைப்புகளையும் (அவற்றின் மோக பாசங்களையும்,) ஆத்ம சேட்டைகளையும், சுபாவ வேட்கையையும், உன் நாட்டம், தீய ஆசை போன்ற இழி குணங்களையும் தூங்க வைத்துச் சாகடித்துவிட்டுப் புனித இதயம் மட்டுமே மீதமிருக்குமாறு செய்து கொள்! (அந்த நிலையில்) இறைவனுடன் அகமியமாய் கலந்திருப்பதே புனித இதயத்துக்கு ஊணாகவும், பானமாகவும் இருக்கட்டும். அவனது திவ்விய சமூகத்திலேயே (கியாம், ருகூஉ, ஸஜ்தா) அடங்கிய தொழுகை நிறைவேற வேண்டும். இம்மையை விரும்பாதவனையும், அதை மதிக்காதவனையும் தான் அது இறைவன் தரிசனத்தை விட்டும் அப்பாலாக்காது என்பதை நீ பார்த்ததில்லையா? இந்த நிலை சீர்பட்டபின் உத்தம அடியார்களுக்கு மறுமையின் மகத்தான சௌபாக்கியங்கள் கூட லட்சியமாகத் தோன்றமாட்டா. மறுமையின் மகத்தான சௌபாக்கியங்களை ருசித்து ருசித்து எங்கே இறைவனையே மறந்து விடுவோமோ என்று அவர்கள் அஞ்சுகின்றனர். மறுமையே இல்லாமல் இருக்கக்கூடாதா என்றும் அவர்கள் ஆசிக்கின்றனர். கருணையாளனின் கிருபா கடாட்சங்களும், வரப்பிரசாதங்களும் மட்டுமே அங்கிருப்பதால் தான் (மகான்கள் மறுமையைக் கூட விரும்புவதில்லை.) தூய கல்பும், புனித உள்ளமும் தான் அம் மகாத்மாக்களுக்கு வதனமாகக் காட்சி தருவதால் அவர்களின் உள்ளங்களில் இருப்பதே வெளிச் சடலத்திலும் காட்சி தருகிறது. (இப்புனிதப் படிவத்தில்) இம்மையில் மறைந்திருந்து (கல்வத்தில்) மெய்வணக்கத்தை நிறைவேற்றவும், மறைவான அகமியங்களோடு பிணைந்திருக்கவும் சில சமயங்களில் இவர்கள் இம்மையை விரும்புவதும் உண்டு.

என் முன் அமர்ந்திருப்போனே! பரம்பொருளான அல்லாஹ்வைப் புறக்கணித்து விட்டு, ஓடிக் கொண்டிருக்கிறாயே! படைப்புகளின் மீதுள்ள பாசங்களை உன் இதயம் புனிதமாகப் புறக்கணித்து விட்டு, அல்லாஹ்வை நீ அணுகும் (உன்ஸ்) தருணம் எப்போது வரும்? இம்மையின் சாவ வாயில்களிலும், நகரங்களிலும், வானங்களிலும், ஓரிடத்தில் கூட நிற்காமல் இறைவனைத் தேடிச் சுற்றிவா! பிறகு உன் தூய இதயத்தின் மீது ஊன்றி, பரம்பொருளான இரட்சகனின் திவ்விய சமூகத்தில் நின்று உன் அமல்களின் பட்டியலைப் படித்துப்பார்! உன்னை, உன் அமல்கள் நரகத்துக்கு ஆளாக்குபவையாகவுமிருக்கலாம். இதே அச்சத்தோடு நீ 'ஸிராத்' எனும் பாலத்தில் நடக்கும் போது, சில சமயங்களில் நரகத்தில் விழுந்து விட்டதாகவே அச்சம் கொள்வாய். சில சமயங்களில் திடீரென்று இறைவன் அருள் கூர்ந்து உன்னைக் கைத்தூக்கி விடுவான். அவன்

இன்னருள் என்ற தண்ணீரால், நரக நெருப்பும் தணிந்து விடும். மெய் விசுவாசிகளின் (மூமின்களின்) புனித ஜோதியால், தன் கொடூரமான சுவாலைகள் ஆறிப்போய் விடுவதாகச் சில சமயங்களில் நரகம் கூட முறையிடும். இங்ஙனமே நரகத்தை வெகு விரைவில் கடந்து விடுவாய். மூவாயிரம் ஆண்டின் தொலைவை ஒரு வினாடியில் நீ கடந்து விடுவாய்.

இங்ஙனமே கடந்து சுவர்க்க வாயிலை அணுகியதும்தான், நீ உன்னதமாக அமர்ந்து கொள்ளும் நேரம் நெருங்கி, அங்கே இறைவன் மீதுள்ள (ஷெளக்) என்ற மெய்க்காதலும், பயபக்தியும், ஏக்கமும் உன்னை ஆட்கொள்ளும். நீ உன் அன்பன் (மஹ்பூப்) இல்லாமல் உள் நுழைய மறுப்பாய். உன் சந்ததிகள் சுவர்க்க வாயிலில் நின்று கொண்டு, எங்கள் மாதா, பிதாக்களும், உடன் பிறந்தவர்களும் சுவர்க்கத்தில் நுழையாதவரை, நாங்களும் நுழைய மாட்டோம் என்று வாதாடுவதையும் நீ காணுவாய். "எங்கே அயலகத்தார்கள், எங்கே மெய்நேசர்கள், என்னுடன் வாருங்கள், சுவர்க்கத்தில் நுழைவோம்" என்று நீயும் அழைப்பாய்.

மெய் விசுவாசிகளே! எம்பெருமான் (ஸல்) அவர்கள்.தங்களின் புனிதக் கரங்களால் தம்மை அணைத்து அன்பனின் (மஹ்பூபின்) திருச் சமூகத்தில் கொண்டு சேர்க்காதவரை, சுவர்க்கத்தில் நுழைய விரும்ப மாட்டார்கள். மெய் நேசர்களான மகான்களுக்கு இப்புனிதப் படிவம் பரிபூரணமாகச் சித்தியான பிறகு, தங்களுக்கென இம்மையில் விதிக்கப்பட்டுள்ள மகத்தான பேரருளை (மக்சூம்) ருசிக்க இம்மையின் பக்கம் திருப்பப்படுவார்கள். ஏனெனில், அப்போதுதான் கூடவோ, குறையவோ முடியாத இரட்சகனின் கருணை பூர்த்தியானதாகும். மேலும், சகல ஆத்மாக்களும் தமக்கு அருளப்பெற்ற பெரும் கருணையின் பங்கை அடைந்து கொள்ளாதவரை, இறைவனும் அவைகளை இம்மையிலிருந்து அப்புறப்படுத்துவதில்லை. எனவே, இறைவனிடமே தூய பக்தியைச் (அச்சத்தை) செலுத்தி, படைப்புகளைப் புறக்கணித்தவர்களாய், இறைவனிடமிருந்தே உங்கள் இரணத்தை (ரிஜ்கை)க் கேளுங்கள், யாசிப்பதிலும் கண்ணியத்தைப் பேணுங்கள்.

படைப்புப் பொருளான சாதனங்கள் (அஸ்பாப்கள்). மெய்யாகவே நீங்கள் சர்வ சக்தனான அல்லாஹ்வின் திவ்விய சந்நிதிக்குள் செல்லாமல் தடுக்கும் திரைகளாகும். அவ்வாறான திரைகள் என்ற சாதனங்களை நீங்கள் களங்கமற அப்பாலாக்கினால் தான் இரட்சகனின் திருவாயில் உங்களுக்காகத் திறக்கப்படும். அடைபட்டிருக்கும் உங்கள் உள்ளத்தின் (பாத்தினின்) புனித வாயிலும் உங்கள் சக்தியோ, முயற்சியோ இன்றித் தானே திறந்து கொள்ளும். அதனால் மெய்ஞ்ஞான உணர்வும் சித்தியாகும். தனது களங்கமான சுபாவத்தின் ஆட்சியிலிருந்து அப்பாலாகித் தனது இரட்சகனின் திருவுளச் சித்தத்துக்கு ஒத்த வண்ணம் பரிபூரணமாக ஒழுகி நடப்பவனே உத்தம மெய் விசுவாசியாவான்.

மெய் விசுவாசிகள் இப்புனிதப் படிவத்தில் எதிர் பாராமல் தங்கள் உயிருக்கோ, உடமைக்கோ ஆபத்துண்டானால், தாங்கள் இழைத்து விட்ட தவறுகளும், பாதகச் செயல்களும், ஷரீ அத்தின் புனித நியதிக்கு மாறாகத் தாங்கள் நடந்து கொண்ட தவறான முறையுமே, அதற்கு காரணம் என்பதை உணர்ந்து (அதற்கான தண்டனையாகவே இந்தச் சோதனை உண்டாகியுள்ளது என்று தெளிந்து) வெறும் பிரார்த்தனையால் மட்டும் நிவாரணம் தேடாமல் இரட்சகனின் புனித சகாயத்தையே யாசித்து நிற்பார்கள். தங்களின் தீய செயல்களை எண்ணி எண்ணி உருகித் தங்கள் மனத்தையே பழித்தவர்களாக, ஏகனின் தூய ஆதி ஏற்பாட்டுக்குத் (தக்தீருக்கு)த் தங்களை உட்படுத்திக் கொள்வார்கள். இந்த உயரிய நிலையில் தான் இவர்கள் இறைவனின் திறந்துகிடக்கும், திவ்விய சமூகத்தை தரிசிக்கும் பாக்கியசாலி களாவார்கள்.

கருணையாளனான அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்தவர்களுக்குத் தான், அல்லாஹ்வும் கடைத் தேறுவதற்கான மார்க்கத்தைக் காட்டியருள்வான். அடியான் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்று சோதிப்பதற்காகவே, இறைவனும் அவன் மீது சோதனைகளை அனுப்புகிறான். "நன்மை, தீமை இரண்டைக் கொண்டும் அவர்களைச் சோதிப்போம்" என்பது அல்லாஹ்வின் திருவாக்காகும்.

நன்மை, தீமை, கண்ணியம், இழிவு, செல்வம், வறுமை ஆகியவை களால், சோதிக்கப்படும் போதுதான், ஆதமின் மகன் சீர்பட்டு சிறந்தவனாகிறான். தனபாக்கிய சம்பத்து (நீஃமத்து)க்கள் அனைத்தையும் அருளுபவன் தயாநிதியான இறைவன்தான் என்பதைப் பூரணமாக உணர்த்தும் அவனுக்கே நன்றி தெரிவிக்கிறான்.

நாவாலும், பிற உறுப்புகளாலும் பிறர் உதவியை நாடிச் செல்லாமலிருந்து, நீ சோதனைகளுக்கும், சஞ்சலங்களுக்கும் ஆளாகும்போது, உன் தவறான நடத்தைக்கான பயன்தான் அப்படி நேர்ந்துள்ளது என்று மனம் பொருந்திக் கொள்!

உன்னுடைய நன்றியறிதல் என்ற பாதமும், சம்பூரணமான பொறுமை என்ற பாதமும் இறைவன் திருவருளால் சம்பூரணமான வையாகி, தீமை என்ற பாதையில் நடந்தது மாறி, நன்மை என்ற பாதையில் நடைபோட முனைந்தது. சர்வ சக்தனான இறைவனின் திருச்சமூக வாயிலை நீ அடைந்து விட்டதைக் காண்பாய். அந்த திவ்விய சபை வாயிலில் நின்றவாறே நீ எப்போதும் கண்டும், கேட்டுமிராத, எவர் இதயத்திலும் கற்பனையாகியுமிராத, திருக்காட்சிகள் அனைத்தையும் தரிசிப்பாய். தீமை என்ற பாதையைக் கடந்து, நன்மை என்ற பாதையில் முன்னேறி விட்டபின் சர்வலோக இரட்சகனோடு நேருக்கு நேர் வசனிக்கும் பாக்கியமும், அவன் அருகில் அமரும் அதிர்ஷ்டமும் உனக்குக் கிட்டும். இராக் வாசிகளே, செக்கு மாடுகளே, இந்த அரும் பொக்கிஷங்களான மணிமொழிகளின் மகத்தான கருத்துக்கள் உங்கள் அறிவில் உறைக்கவில்லையா?

ஏ! அறிவிலியே! உன் தொழுகையிலும், நோன்பிலும், சித்தசுத்தி (இக்லாஸ்) இல்லாதிருப்பதை எண்ணிப் பார்! உன் தொழுகை, மக்கள் உன்னை வணக்கவாளி என்று மெச்ச வேண்டும் என்ற நோக்கத்தோடு நிகழ்த்தப்படும் நடிப்புத் தொழுகையாகல்லவா விளங்குகிறது! நீ நோற்கும் நோன்போ புனிதமற்றுள்ளது. உன் கண்கள் மக்களின் அருசுவை நிறைந்த உணவுத் தட்டுக்களை

நோட்டமிடுகின்றன. நோன்பாளியான நீ பசியோடிருக்கிறாய் என்று மக்கள் உணர்ந்து, உனக்கு உணவளிப்பார்கள் என்று எதிர்பார்த்து, அவர்களின் வீட்டினுள்ள பொருள்களை உன் மனம் கணக்குப் போட்டுப் பார்க்கிறதே!

ஏ சமூகத்தவர்களே! உத்தம நாதர்களான இறைநேசர்களை அணுகாமல், அப்பாலாகியும், சத்திய சீலர்களான மகான்களின் சங்கை பொருந்திய அணிகளில் வராமல் ஒதுங்கியும் சீரழிகிறீர்களே! நான் உங்களைப் புடமிட்டுச் சீர்படுத்திப் புனிதமாக்கக் கூடியவன் என்பதை நீங்கள் அறியாததேன்? வேண்டுமானால் உங்கள் சூட்சி முழுவதையும், முயற்சிகள் யாவையும், என்னைத் துன்புறுத்தித் தொந்தரவுக்குள்ளாக்குவதிலேயே நீங்கள் ஈடுபடுத்திப் பாருங்கள்! எனக்கு இரட்சகன் அருளிய (கிருபாகடாட்சமான) அருளுணவையே பறிக்கவும் முயலுங்கள்! உங்கள் வாளாயுதங்களை என் மீது வீசியும் பாருங்கள்! (எது வேண்டுமோ அதைச் செய்து கொள்ளுங்கள்.) ஆனால், உங்களால் எனக்கு எந்தத் தீங்கும் செய்துவிட முடியாது என்பதை மறந்துவிட வேண்டாம்.

- 15 -

முழு மூடனே, நான் உன் கயிற்றை (ஈமானை)த் திரித்து முறுக்கேற்றுகிறேன்; உன் மீது பரிவு கொண்டு நீ சீர்பெறுவதைத் தான் விழைகிறேன். நீ பொய்யனாகவும், அகந்தையுடையவனாகவும், முகத்துதிப் பிரியனாகவும், தஜ்ஜாலாகவும் மரிக்கக் கூடாதே, நயவஞ்சகர்களுக்கான வேதனை உனக்கும் கிடைக்கக் கூடாதே என்றுதான் கவலைப்படுகிறேன். போதும் விரைவிலேயே நீ மரித்துத்தான் தீரவேண்டுமென்பதை (இதயத்தில்) நிலை நிறுத்து; உன் பாவச் செயல்களை விட்டொதுங்கிப் புனிதப்படு; (பாவ, தோசமென்ற உடையை உதறி விட்டு) பயபக்தி என்ற புனித உடையை உடுத்து. உனக்கும், எனக்கும் இடையில் எந்தப் பகையுமில்லையே! என் சொற்பொழிவுகளின் உன்னதமான தன்மையை விரைவிலேயே நீ உணரத்தான் போகிறாய். சான்றோர்களான மகாத்மாக்கள், தாங்கள்

தங்களின்,அகத்தேயுள்ள, தங்களுடைய யதார்த்தமான ரூபத்தைத் தரிசிப்பதன் மூலமே, தங்களின் புனிதத் தன்மையை உலகுக்கு எண்பித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பரம் பொருளான இறைவனின் மகத்துவத்தை அறிந்துள்ள மெய்ஞ்ஞானிகளின் நாவு (இம்மை பற்றிய வீண் விவகாரங்களைப் பேசாமல்) மௌனமுற்று விடுகிறது. இவர்கள் பேசவேண்டுமானால் இறை சகாயத்தைக் கொண்டே பேசுவர். இவர்களுக்கு ஏதேனும் தேவையுண்டாயினும் இறைவனிடமே அதைக் கேட்பார்கள். என் இளம் பிராயத்தில் நான் ஜீலானிலிருக்கும் போது, "ஏ பாக்கியசாலியே!" என்று என்னை அசரீரியானதொரு குரல் அழைத்தது. அது கேட்டு நான் பயந்து ஓடிவிட்டேன். பின்னர், என் ஏகாந்தமான வணக்கங் களிடையிலும். அதே அசரீரி என்னை விளித்து, "உன்னை உத்தமமான மனிதனாகக் காண்கிறேன். நீ ஆத்ம நலனையும். வெற்றியையும் விழைந்தால் என் சகவாசத்தை நாடு" என்று அருளியது. என் மகத்தான சத்போதங்களைப் புறக்கணித்து ஓடுபவன் நிச்சயமாக நயவஞ்சகனாகத்தானிருப்பான்.

மெய் விசுவாசிகள் (மூமின்கள்) தங்கள் புறக்கண்களை மூடிக்கொண்டதும், அவர்களின் அகக்கண்கள் திறந்து கொள்கின்றன. அவர்கள் அகத்தின் அகமியங்களனைத்தையும் தரிசிக்க முடிகிறது. அவர்கள் தங்கள் ஞானப்பார்வையை மூடியதும், புறக்கண்கள் திறந்து இறைவனின் சக்தி படைப்புகளை எவ்வாறு இயக்குகிறது என்பதையும் நோட்டமிட முடிகிறது.

மூஸா நபி (அலை) இறைவனுடன் வசனித்த சமயம் அல்லாஹ், "மூஸாவே, என்னுடன் நீர் பேசுகின்ற பாக்கியத்தைப் பெற்றுக்கொண்ட மாண்பாலும், உம்மை என் தூதராக்கி, என் சந்நிதியை நெருங்கும் மகிமையை உமக்கு அருளியதன் மூலம் மற்றவர்களைவிட உமக்கு நான் அதிகமான கண்ணியத்தை அருளினேன். ஒரு நாள் நீர் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சமயம், சிறிய ஆடு ஒன்று மந்தையிலிருந்து வெளியேறி வெகு தூரம் ஓடிவிட்டது. அப்போது நீர்

அதைத் துரத்திச் சென்று, பிடித்து உமது மடியில் இருத்திக் கொண்டு, "அப்பாவி ஆடே, வீணே நீயும் ஓடி ஓடிக் களைத்ததுடன், என்னையும் களைப்படையச் செய்துவிட்டாயே!" என்று பச்சாதாபப்பட்டீர். ஆட்டின்மீது நீர் காட்டிய இந்தப் பரிவு காரணமாகவே, வழி தவறிய அடியார்களை என் திருமுன் அழைத்துவரும் கனம் பொருந்திய தூதராய் (ரசூலாய்) அமரும் பாக்கியம் பெற்றீர்!" என்றான்.

இறை தரிசன பாக்கியத்தை இழந்து, அப்பாலாகிக் கிடப்போர், இறைவனைக் காணவிடாது தம்மை மறைக்கும் தமது பாவச் செயல்களை எண்ணிப் பார்க்கவேண்டும். அவற்றுக்காக பாவ மன்னிப்புத் தேடுவதுடன், (இனிமேல்) அவ்வாறான பாவச் செயல் களைச் செய்வதில்லை என்றும், இறைவன் திருமுன் சித்தசுத்தியோடு உறுதி செய்துகொள்ள வேண்டும். மெய்ஞ்ஞான மார்க்கத்தில் சீர்பட்டுப் புனிதமடைந்து விட்ட மகாத்மாக்களுக்கோ, இப்பிரபஞ்சத்தை ஆட்சி புரியவோ, அடக்கி வைத்துக்கோள்ளவோ வேண்டிய அவசியமே உண்டாவதில்லை. இப்பிரபஞ்சமென்பதே அவர்களுக்கு, அவர்களின் லட்சியமான இறை சந்நிதிக்குச் செல்லும் வழியாகவே மிளிர்கிறது.

நீ, (உன் ஆத்மீகப் போராட்டத்தின் மூலம்) காடு, மலை, பாலை முதலியவைகளையும், களங்கமான மனம், படைப்புப் பொருட்கள் என்ற இரண்டு கண்டங்களையும், சன்மார்க்க நெறிமுறை (ஷரீஅத்), மெய்ஞ்ஞானப் பாதை (தரீகத்) என்ற இரண்டு சமுத்திரங்களையும், சம்பூர்ணமாக வெற்றிகொள்ளாதவரை, மற்றவர்களுக்கு ஞானோப தேசம் புரிவதற்கு உனக்குத் தகுதியுண்டாகவில்லை என்பதை நிச்சயமாக உணரவேண்டும். இறைவனின் மெய் நேசர்களுக்கு (அவனை வணங்குவதற்கு) இரவு பகல் என்ற பாகுபாடுகளில்லை. இவர்கள் நோயாளிகளைப் போன்றே (குறைவாகவே, பேணுதலுடன்) உணவருந்துகின்றனர். இவர்கள் உறங்குவது கூடச் சிறு நேர மயக்கம் போன்ற அளவினதுதான். இவர்கள் அவசியமின்றி எதுவும் பேசவுமாட்டார்கள். இறைவனை யதார்த்தமாக அறிந்துள்ள மெய்ஞ்ஞானிகளின் நாவு பேசச் சக்தியற்றது போன்றே ஆகிவிடுகிறது. ஆயினும், அவர்கள் பேச வேண்டுமென்று இறைவன் நாடியதும்,

அவர்களுக்கு ஒரு புதிய நாவை அருளுகிறான். அதுகொண்டு அவர்கள் எழுத்துப் பிழைகளோ, தயக்கமோ இன்றி அருள்மிக்க ஞானங்களை மழையாகப் பொழிந்து விடுகின்றனர். மகான்களின் நாவுக்கும், விரல்களுக்கும் இடையில் வேற்றுமை இருப்பதில்லை; இரண்டும் ஒன்றாகவே மிளிர்கின்றன. அவர்களின் நாவு ஆற்றவேண்டிய அற்புதங்களை விரல்களின் சமிக்ஞையே சமைத்து விடுகிறது. (இவ்வாறு சீர்பட்டு விட்ட மகான்களுக்கு) அந்த நிலையில் (இறை சந்நிதியில் நுழைய) எவருடைய கட்டுத் திட்டங்களோ, தடுக்கும் திரைகளோ, தடுக்கும் காவலாளிகளோ, நுழைய அனுமதியோ, தேவையில்லாமல் போய்விடுகிறது.

இன்று இத்திருச்சபைக்கு வராதவர்கள் (மெய்ஞ்ஞான மாரி பொழிந்தும், அதில் ஒரு துளியேனும் அருந்தக் கொடுத்தும் வைக்காத) துர்பாக்கியர்களாவர். இப்புனித பாக்கியம் முதல் படிவத்திலோ, இரண்டாம் படிவத்திலோ கிட்டி விடாது! 'தான்' என்ற உள்ளமையிலிருந்து அப்பாலாவதே முதல் படிவமாகும்: நீ சம்பூர்ணமாக சீர்பட இறைவன் அருளும் பேரருளே இரண்டாம் படிவமாகும். **"சர்வலோக இரட்சகனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!" (அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்)** என்று நீ தூய்மையாக துதிக்கும் புனித வேளைதான் இறை சந்நிதியின் திவ்விய வாயிலில் நிற்கும் புனிதமான தருணமாகும். (உனக்கும் உன் இறைவனுக்குமிடையில் திரை ஏற்படும்பொழுது) **"உனக்கே மெய்வணக்கம் புரிந்து, உன்னிடமே மேலான உதவி தேடுகிறேன்" (இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தஈன்)** என்று நீ ஓதும் நேரமே, உன் இறைவனை தரிசிக்கும் திவ்வியமான நேரமாகும். பிறகே சிரவணக்கம் (சஜ்தா) செய்து இறைவனை முடுகியிருக்கும் நிலை உனக்குச் சம்பூர்ணமாகச் சித்தியாகும். நீ சுவைக்கும் போக பாக்கியங்களைத் தந்தருளியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரேனும் உண்டு என்பது போல் பேசி விடாதே! அல்லாஹ்வை மறந்து, வேறு யாரோ உனக்குப் பாக்கியங்களைத் தந்துவிட்டான் என்றாவது நீ நினைப்பாயாயின், நீ இணை

வைத்தவனாகி விடுகிறாய்; இறைவனின் கிருபா கடாட்சங்களுக்குத் துரோகம் புரிகிறாய். இதனால் நீ அவைகளை இழக்கவும் நேரிடுகிறது. அத்துடனன்றி, இறைவன் (உன் ஆத்ம சித்திக்காகப்) பொழிந்துள்ள புனிதமான சௌபாக்கிய சம்பத்துக்கள் அனைத்தையுமே உனக்குத் தீமை பயப்பனவாகவும் ஆக்கிக் கொண்டு விடுகிறாய். உன் (நன்றியறியாமை என்ற) பூநூலை அறுத்தெரிந்து விட்டு (ரப்பின் பக்கம்) தூய்மையாகத் திரும்பு! புனிதமான உள்ளத்தோடு நீ பாவமன்னிப்புத் தேடாதவரை, உன் இதயத்தில் சித்த சுத்தி (இக்லாஸ்) குடிகொள்ளாதவரை, உன் வெளிக் கோலம் எப்படியிருப்பினும், அதற்கு மதிப்போ மகிமையோ கிடையாது.

- 16 -

அருமையானவனே! நபி பெருமான் (ஸல்) அவர்களுக்கு மகோன்னதமாக அருளப்பட்ட 'நபித்துவம்' (நுபுவ்வத்) சித்தியாகியும் கூட, அந்த மகாப் பேற்றினைச் சிறிது காலம் வரை அவர்கள் மறைத்தே வைத்திருந்தார்கள். அந்த விசனத்தால் நபியவர்களின் திருமேனியும் உருகத் தொடங்கியது. பிறகு தான் தங்களுக்கு இறை வெளிப்பாட்டின் (வஹியின்) மூலம் அருளப்பட்ட மெய்ஞ்ஞானப் போதங்களை (ரப்பின் வரப்பிரசாதமான சன்மார்க்கமென்ற அருட் பேறுகளை மறைக்கக் கூடாதென்பதற்காக) மக்களிடம் எடுத்தோதும்படி இறைவன் புறத்திலிருந்து கட்டளை எழுந்தது.

மகனே, உனக்குக் கிட்டியுள்ளதோ அணுவத்தனையான அருட்பேறுதான். நீயோ அதை மறைத்து வைக்காமல், உலகம் முழுமைக்கும் விளம்பரப் படுத்திக் கொண்டு திரிகிறாய். உன் வீட்டின் மேல் கூரையிலிருந்து ஒரு சிறு துணி மூட்டை விழுந்ததும், அதை எடுத்துக் கொண்டு விற்க விலை கூறித் திரிகிறாய். ஒருக்கால் அதை (அல்லாஹ் உனக்காகவன்றி) உன் அண்டை வீட்டானுக்காக, உன்னிடம் சேர்த்திருக்கலாமல்லவா! உன் இதயம் சுத்தமாகிப் புனிதமடைய வேண்டுமானால், உண்ணும் உணவை (அது ஆகுமானதா, விலக்கப்பட்டதா என்று கவனித்துப்) பேணி உண்ணு; மெய்வணக்கத்துக்காகப் பயபக்தியுடன்) ஆயத்தமாகு; அற்புதங்

களைக் காட்டும் அபூர்வ சக்தியை வெளியாக்காமல் மறைத்துவை; இறைவனை மறக்கச் செய்யும் இம்மையின் இச்சா பாசங்களை அகற்றிக் கொள். இவற்றின் மூலமே உன் இதயம் சாயுச்சியமான பதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உண்ணும் உணவின் பேணுதலைக் குறித்து நீ எதையுமே சிந்திக்காமலிருக்கிறாய். பரிபூரணமான பயபக்தியுடன் சன்மார்க்கச் சட்டத்தைப் பேணியவனாக நல்வணக்கம் புரிவதோடு, இடையறாது பணிவுடன் இறைவனிடம் கெஞ்சிச் சீர்பட்டாலதான், அவன் முடுகுதல் சாத்தியமாகும். தான் உண்ணுவதிலும் குடிப்பதிலும் கூட ஆலோசித்துத் திருக் குர்ஆன், ஹதீஸ்களின் அனுமதியைப் பெறுபவனே சீர்பெற்ற சத்திய மெய்விசுவாசியாவான். அவனே இறைவனின் மெய் நேசனாவான். இந்நிலை சித்தியானவன், இறைவனின் திருச் சம்மதி பெற்றே (பிற படைப்புகளுக்கு) ஆணையிடுவான்; தன் எஜமானனின் அனுமதி பெற்றே விலக்குவான்; அவன் கடாட்சிக்கும் மெய்ஞ்ஞானத்தைப் பருகியே அறிஞனாவான்; எஜமானனின் புனித உதவி கொண்டே செயலாற்றுவான் மரணிக்கு முன்பே அல்லாஹ்வோடு புனிதப் பிணைப்பை ஏற்படுத்திக்கொள். நீ மண்ணுள் புதைக்கப்படும் போது தான், சத்தியப் பொருளை (ஹகீகத்) தரிசிப்பாய். ஏ வீணர்களே! மகா மூடர்களே, சோம்பேறிகளே, சில நாட்கள் சென்று, பின்னராவது இந்த அகமியங்களை அறியத்தான் போகின்றீர்கள்.

("கீழான மனம் (நப்ஸ்) தான் சதிசெய்து வழிகெடுத்து விடுகிறதே! அதன் தீர்ப்புக்கு இணங்க நான் எப்படி நடந்து கொள்ள முடியும்?" என்று ஒருவர் கேட்டதற்கு, ஆண்டகையவர்கள் பதில் கூறிப் பேசியதாவது:)

உன் கீழான மனத்தைச் சாகடித்துப் பணியவைத்து, உன் ஆணைப்படி நடந்து கொள்ளும்வரை அதோடு நீ புனிதப் போர் புரிந்து, அதைச் சீர்படுத்து. பிறகு அந்த ஆத்மாவுக்கு (அல்லாஹ்வால்) புனர் ஜீவன் அருளப்படும். அதில் ஞானோதயம் உண்டாகும். அது

சாந்தியடையும். அதன் இயற்கைப் பண்புகளான இம்மையின் மோக பாசமென்ற வாயிலை மூடி, இகத்தின் ஆசையில் சிக்கி விடாமல், அதைஅடக்கிப் பக்குவப்படுத்து. பின்னரே அது பலமற்று, மெலிந்து அதன் பிரேமைகள் உன் தூய இதயத்தின் பக்கம் சார்ந்து, உள் ஆத்மம் போராட்டத்தின் மகிமையால் சம்பூர்ணமாக, உன் புனித இதயமாகவே அது புனர் ஜீவன் பெற்று விடும். இறைவனின் மெய்நேசர்கள் இரவு நேரத்தையே மிகவும் பூரிப்புடன் வரவேற் கின்றனர். குடும்பத்தின் தேவைக்காகத் தாங்கள் ஆற்றவேண்டிய கடமைகளைப் பகல் நேரத்தில் தங்கள் உறுப்புகளாலும், பிற வழிகளாலும் (மனத்தை ஈடுபடுத்தாமல்) செய்து விட்டுக் குடும்பத்தினர் கண்ணயர்ந்த பின்னர், இரவில் இறைவன் திசையில் தங்களின் ஆத்மாவையும், பிற அவயங்களையும் ஒன்றுபடுத்தி இறைவனோடு மகத்தாகப் பிணைந்து குதூகலிக்கின்றனர்.

சஞ்சலங்களும், வியாகுலங்களும் உன்னை வந்தடையு முன்னரே, நீ பக்தி விசுவாசமுள்ளவனாய்ச் சமைந்து விட்டால் தான், சோதனைகள் இறங்கும்போது, இறைவனைத் தவிர வேறு எவரும் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இடமில்லாது போகும்; சகாயத்துக்கு யாரையும் எதிர்பார்க்கவுமாட்டாய்; நன்மை, தீமை, லாப-நட்டம், கண்ணியம் - இழிவு, சுகபோக சம்பத்துக்கள் - வறுமை அனைத்தையும் (உன் நன்மைக்காக) இறைவனே அருளுகிறான் என்று தெளிந்து சீர்படுவாய்.

"தம் பார்வையால் உனக்குப் பயன் உண்டாக்காதவரின் உபதேசத்தால், உனக்கு நன்மை ஏற்படாது" என்று மகான் ஒருவர் கூறியுள்ளதன் கருத்தை விளக்கி வைக்கும்படி ஒருவர் வினவியதற்கு ஆண்டகையவர்கள் கூறியதாவது:

தங்கள் கண்ணால் மட்டுமின்றிப் புனித இதயத்தாலுமே இகபரமிரண்டதன் சௌபாக்கிய சம்பத்துக்கள் அனைத்தையும் அப்பாலாக்கிவிட்டு, இறைவன் மீது மட்டும் தங்களின் அக, முகப் பார்வைகளைத் திருப்புவதன் மூலம், மகிமைபெறுவதுதான்

அல்லாஹ்வின் சத்திய நேசர்களுக்கு மாண்புடையதாகும். ஆகவேதான், அந்த மகாத்மாக்கள் தங்களின் புனிதக் கண்களால் உன்னை நோக்கினாலும், உனக்கு நன்மை விளைந்து நீ புனிதனாகி விடுவாய். காய்ந்து வரண்டு போன பூமிக்குக்கூட, அவர்களின் திருநோக்கின் மகிமையால் இறைவன் புது ஜீவனளித்து, அதில் செடி கொடிகள் முளைத்துப் பூத்துக் குலுங்க அருள் புரிந்து விடுவான். யூதர்கள், கிறித்துவர்கள்கூட இத்தகைய மகான்களின் பார்வை பாய்ந்த மகிமையால் நேர்வழி பெற்றுப் புனிதர்களாகிவிடுவார்கள்.

("தாங்கள் அமர்ந்திருக்கும் இந்த மேடையின் (மிம்பரின்) கால்களை ஏன் கட்டியணைத்துக் குதூகலிக்கிறீர்கள்?" என்று ஒருவர் வினவியதற்கு ஆண்டகையவர்கள், "அது (மிம்பர்) எனக்கு மிக மிக அருகிலாகி, மகத்தான மெய்ஞ்ஞான அகமியங்களையெல்லாம் காணும் பாக்கியம் பெற்றிருக்கிறது. ஆனால், அது தனக்குப் பிராப்தமான, அந்த அருள்களை யாரிடமும் கூறிப் பெருமையடித்துக் கொண்டதில்லை; எவரைப் பற்றியும் புறம் பேசியதுமில்லை. இதனால்தான், நான் அதை உவந்து அணைத்துக் கொள்கிறேன்" என்று பதிலளித்தார்கள். கேள்வி கேட்டவர் மீண்டும், "அந்த மேடையின் கால்களை விட, உங்கள் புனித இதயத்துக்கு நாங்களல்லவா மிக மிக அருகிலிருக்கிறோம். எனவே, தங்களின் ஆலிங்கன பாக்கியத்துக்கு நாங்கள் தாமே மிகவும் அருகதை பெற்றவர்கள்!" என்று முறையிட்டார். அப்போது ஆண்டகையவர்கள் கூறியதாவது:)

அருமைச் சகோதரா! இறைவனிடம் பயபக்தியுடனும், விசுவாசத்துடனும் நடந்துகொள்! அவனையே சதாவும் உன் தியானத்தில் அமர்த்து! உன்னுடைய புனிதப் படிவத்தில், நானே உனக்குத் தாசனாகி ஊழியம் புரிவேன்; உன் அன்புக்குரிய நேசனாயும் விளங்குவேன். அடியான் மெய்யாகவே புனிதத் துறவியாகி, இறைவனின் அருகிலாகி விட்டால், (இம்மையின் ஆசாபாசங்களை இச்சிக்காமல்) தன்னைத் தானே அடக்கிச் சீர்பட்டு விட்டால்,

இறைவனே அவன்மீது வெற்றிகளைப் பொழிவித்து, அவனை அணைத்து அருகிலமர்த்திக் கொள்வான். இம்மைக்கான ஞானங்கள் தனக்குத் தேவையில்லை என்று அவ்வுத்தமசீலன் தன் கண்களை மூடிக் கொண்டாலும், இறைவன் அவனுக்கு உலகஞான அகமியங்களைக் காட்டி, அவற்றின் மகிமையையும் உணர்த்துவான். ஏகாந்தத்தில் அமர்ந்து விடுவதும், (அளவிற்கதிகமாக உண்ணாமல்) உடலைப் பேணுவதும், தன்னை விளம்பரபடுத்திக் கொள்ளாமல், அடக்கத்துடனிருப்பதும், மேலான பண்புகளாகும்.

உத்தம மகான்கள் இறைவன் தங்களுக்கு அருளியுள்ள கிருபைகளையும், பேறுகளையும், தங்கள் அவயங்களாலும், பரிசுத்த இதயத்தாலும், உன்னதமான உள்ளத்தாலும் (நன்றிக்கு அறிகுறியாகத்) தங்கள் தனிமையில் வெளிப்படுத்துகின்றனர். (அவற்றின் மகிமையால்) உயர்வு பெற்று இறைவனின் திவ்விய சமூகத்திலும் கண்ணியமடைகின்றனர். நீங்கள் தாம் தீனார், தீர்ஹங்களையே அல்லாஹ்வாக துதிக்கிறீர்களே, அவை உங்களை விட்டுப் போய் விட்டாலோ, உங்கள் மீது மறுமையே வந்துற்றது போல் ஆகிவிடுகிறீர்களே! தொழுகையோ, ஜும்ஆவோ, ஜமாஅத்தோ தவறி விட்டால் கூட, நீங்கள் அவ்விதம் சஞ்சலப்படுவதில்லையே! பாவ[illegible]ரியத்தைச் செய்யும் ஒருவன், தன் குழந்தை தவறி விட்டால், ஒரே யடியாக ஒப்பாரி வைத்து அங்கலாய்த்து அழுகிறான். தன்னைப் போன்ற படைப்புகளை விரும்பி நேசிக்கும் மனிதன், தன்னிடமிருக்கும் அமரர்களோடு தொடர்பு கொள்வதில்லை. களங்கமற்ற இதயம் சீர்பட்டால்தான் அமரர்களின் நேசமும், தொடர்பும், அருளும் சாத்தியமாகும்; தனிமையில் அவர்களோடு உரையாடும் பேறும் கிட்டும்.

- 17 -

இறைவனை அணுக மறுப்பவர்களே! புனிதமான மார்க்கச் சட்டத்தைக் கண்டு ஓடி ஒளிபவர்களே! சுபாவச் சேட்டைகளோடும், தீய செயல்களோடும், இம்மையோடும் சல்லாபித்துக் கொண்டிருப்பவர்களே! படைத்தவனை மறந்து புடைப்புகளை ஆராதித்துக்

கொண்டிருப்பவர்களே! நீங்கள் இறைவனைச் சந்தித்துத்தான் தீரவேண்டும். ஆகவே, இப்போதே அல்லாஹ்வைத் தரிசிக்க ஆயத்தமாகுங்கள். உங்கள் கீழான மனத்தையும், படைப்புகளின்மீது நீங்கள் வைத்துள்ள பாசத்தையும், சம்பூரணமாக அகற்றிக் கொண்டால்தான், அவனுடைய தரிசன பாக்கியம் சித்தியாகும். இறைவனின் தியானத்தை விடுத்து,மற்றுமுள்ளதனைத்தும் உங்களை நாசப்படுத்திவிடும். அவனை உணரும் ஞானத்தை அன்றியுள்ள சகல ஞானமுமே, உங்களுக்குத் தோல்வியையே சேர்க்கும். படைப்புகளோடு நீங்கள் கொள்ளும் பிணைப்பால் உங்களுக்குப் பெரும் நட்டமே உண்டாகும். என்றாலும், இம்மையை மோகித்து உழல்பவர்கள்தாம் அதிகமாக உள்ளனர். எங்கோ ஒரு சிலரே, மறுமையைப் பயபக்தியுடன் விசுவாசித்து மாட்சி பெறுகின்றனர். மெய்யாகவே மெய்ப்பொருளை நேசிப்போரோ அதனினும் சிலரேயாவர்.

நீ இரவு, பகலென்று பாராமல், இகத்தின் இன்பங்களிலேயே சிக்கிக் கிடக்கிறாய். (அந்தோ) அது உன்னிடம் செம்மையாக வேலை வாங்கிக் கொண்டு, பின்னர் உன்னைத் துண்டு துண்டாகச் சிதைத்துவிடும். நாங்களோ (மெய்யடியார்களோ) எனில், இம்மையிடமும், அதிலுள்ள படைப்புப் பொருள்களிடமும் எல்லா ஊழியத்தையும் வாங்கிக் கொள்கிறோம். ஏ, இழிவின் சோதனையில் மயங்கிக் கிடப்போனே, உனக்கென்ன மகிமையுண்டு? சன்மார்க்க நெறிமுறை (ஷரீஅத்), மெய்யான உணர்வு (இல்மு) என்ற இரண்டு கரங்களே இம்மையில் உனக்கு அவசரமாகத் தேவையானவை யாகும். அவைகளிரண்டும் தீர்ப்பளித்து, அங்கீகாரமளித்துள்ளவை களையே நீ செய்ய வேண்டும். அவை விலக்கியுள்ளவற்றின் திசையில் கூடத் திரும்பாதே! (இந்நிலையில்) இறைவனோடு அகமிய தொடர்பு என்ற பேரின்பம் உனக்குக் கிடைக்காது. உன் தொழில், உரையாடல், ஊண், உறக்கம் அனைத்திலும் அதிகமாகச் சந்தித்து, இரட்சகனின் நல்லிணக்கம் எதிலுள்ளதோ, அதை மட்டும் இறைவன் சங்கல்பம், அதிர்ஷ்டமென்று ஏற்று, ஒழுகிப் புனிதப்படு! இறைவனை

யன்றியுள்ள எதற்கான செயலையும் பரிபூரணமாகப் புறக்கணித்து விடு! இறைவன் மீது மட்டுமே, உன் பக்தி வினயம் மிகைத்திருந்தால் தான், இம்மை மறுமை, இறைக்கருணை கிட்டுதல் - கிட்டாம லிருத்தல், உன்னை ஏற்றல் - ஏற்காமலிருத்தல், அனைத்திலும் பாகுபாடின்றித் தெளிவுண்டாகும்.

மெய்நேசனின் (மஹ்பூபின்) அன்பில் திளைத்தவர்களின் இதயத்துக்குத்தான், மெய்நேசனின் நன்மை, தீமை அனைத்தும் ஒன்றாகவே காட்சியளிக்கும். அவனுடைய வாயிலும், அதனைச் சூழ்ந்துள்ள இடங்களும் கூட ஒன்றாகவே (வித்தியாசமின்றித்) தரிசனம் தரும். அந்த தூய காதல் (முஹப்பத்து) சகலவற்றையும் ஒன்றாகவேகாணச் செய்கிறது.காதால் கேட்கும் விசயங்களும், கண்களால் காணும் காட்சிகளும், லாப, நட்டமளிக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒன்றாகவே ஆகிவிடும். உத்தம மகான்களின் இதயம் சதாவும் தன்னை மறத்தல் (வஜ்து) என்ற நிலையில் ஆழ்ந்துவிடும். ஒரு கணம் இறைவனின் தீவிர சக்தியின் தியானத்திலும், (தீக்ரு-ஜலாலிலும்), மறுகணம் இறைவனின் சாத்வீக சக்தியின் தியானத் திலும் (தீக்ரு-ஜமாலிலும்) கலந்து உறவாடும் உன்னதப் படிவம் கை கூடிவிடும். அவர்கள் (வஜ்து நிலையில்) இறைவனைத் தரிசிக்க, நெருங்க நெருங்க, அவன் அவர்களை அணுகாமல் விலகி அப்பாலாகிக் கொண்டே செல்வான். தூர்சீனாவில் மூஸா நபிக்குக் காட்சி தந்த நெருப்பு (இறைவனின் ஜோதிச் சுடர்) விலகிச் சென்றது போன்ற நிலைதான் இது. நபி மூஸா (அலை) அவர்கள் அந்தத் திவ்விய ஜோதிச் சுடரைத் தரிசிக்க, அதன் அருகில் வரவர, அது பின்னால் நகர்ந்து கொண்டே சென்று, தருணம் வந்ததும், "நான் தான் உன் இறைவன்" என்று கூறி தரிசனமளித்ததல்லவா! அதுபோன்றே மகான் களின் இதயங்களும், இறைவனின் முடுகுதல் (குருபு) என்ற புனித ஜோதியைக் கண்டதும் அதைத் தரிசிக்க) நெருங்கி அணுகும் போது, அத்திரு ஒளி நகர்ந்து அப்பாலாகிவிடும். இவ்வாறே அவர்களின் ஆத்ம ஞானப் பயணம் முடிவடையும் வரை, எட்டியே நின்று, அந்தக் குறித்த காலத்தில் அது நெருக்கமாகித் தன் தரிசன பாக்கியத்தை அருளும்.

(அடியானுக்கு இந்த நிலை சித்தியானதும்) அவனுடைய நிலைமையே வேறாகி விடும். இப்போது, தேடியவன் (தாலிப்), தேடப்பட்டவன் (மத்லூப்) ஆகவும், தரிசனத்தை நாடியவன் (காஸித்) இரட்சகனால் விரும்பப்பட்டவன் (மக்ஸூத்) ஆகவும், நாட்டமுள்ளவன் (முரீது), நாடப்பட்டவன் (முராத்) ஆகவும் ஆகிவிடுவான். அல்லாஹ்வின் அற்ப முடுகுதலின் மகத்தான பாக்கியம் கூட (மனு, ஜின்னு ஆகிய) இரண்டு வர்க்கத்தினரும் புரியும் சர்வ மெய் வணக்கங்களாலும் உண்டாகும் பாக்கியங்களை விடச் சிறப்பான தாகும். இந்த மகத்தான துறவு காரணமாக, இறைவனும் "என் மெய்நேசன் என்னையே உயர்வாக்கித் தன் கீழான மனத்தின் தூண்டுதல்களை விட்டும் ஒதுங்கி, படைப்புகளின் பிணைப்பைப் பரிபூரணமாகத் தவிர்த்துக் கொண்டுவிட்டான்" என்று கூறியவனாக, அடியானை நோட்டமிடுகிறான். இந்த நிலையில் அடியான் (வணக்கத்துக்காக) நிற்கிறான், உட்காருகிறான். இவ் அடியானிடமோ, இறைவனுடைய பாதையில் முன்னேறுவதற்கு வழித்துணையோ, வாகனமோ இல்லை. இந்த நிலையிலும் தொழுகையாலும், நோன்பாலும் கீழான மனத்துடன் போராடுவதிலேயே, அல்லும் பகலும் ஈடுபட்டிருக்கிறான். அப்போது திடீரென அவ்வுத்தம மெய்நேசன் தன்னை இறைவனின் திருச் சமூக வாயிலிலும், அவனுடைய பேரின்ப அணைப்பிலும், அவன் கடாட்சமென்ற உணவு விரிப்பிலும் காண்கிறான். தனக்கு அருளாகி விட்ட ஆதி ஏற்பாடு (இறை அருளும்) கண்டு பூரிக்கிறான்.

- 18 -

ஏ! என் முன் அமர்ந்திருப்போனே, அதலபாதாளத்தில் கிடந்து புரளும் நீ, அமரத்துவ நிலைக்கு உயர்ந்துவிடத் துடிக்கிறாயே! சுவர்க்க ஆனந்தத்தை விரும்புகிறாயே! ஆனால், அதற்கான மெய் வணக்கங்களைச் செய்கிறாயா? அதுதானில்லையே! "உன்னை மயக்கும் பொருள்களை அணுகாதே!" என்பது ஞானநாதர் ஒருவரின்எச்சரிக்கையாகும்! உன் சுபாவத் தூண்டுதலுக்காகப்

பணிந்து எதையும் ருசிக்காதே! இரட்சகனின் ஆணை பிறக்குமுன், ஒருபிடி உணவைக் கூட, ஏன், மருந்தைக் கூட அருந்தாதே! அவ்வாறு ஒரு துளி மருந்தையாயினும் நீ அருந்துவாயாயின், வைத்தியர்களும், வைத்திய சாத்திரமும், அந்த மருந்தால் எந்த குணம் ஏற்படும் என்று முடிவு கட்டியுள்ளனரோ, அதற்கே மாற்றமான பயன் உண்டாகிவிடும். நோ்மையாளர்களான மகாத்மாக்களின் சர்வ தேவைகளையும் இறைவன் பிணையேற்று சீர்படுத்துகிறான். அவனே அம்மகான்களுக்குப் பிணையகற்றும் வைத்தியனாயும், அன்பனாயும் மிளிர்கிறான். மகான்களின் இல்லங்களுக்குத் தேவையான உணவுபோன்ற ஜீவனோபாய பொருள்களையும் அவனே தன் பொறுப்பில் ஏற்று அளித்து வருகிறான்.

(இதன் பின் ஆண்டகையவர்கள் ஒருவித இரைச்சலுடன் குரலெழுப்பி, எழுந்து நின்று தன்னை மறந்த நிலையிலாகி, இடமும், வலமும் திரும்பி நோக்கி, வானத்தின் பக்கம் தங்களின் இரண்டு திருக்கரங்களையும் உயர்த்தி, "இறைவா நான் உனக்கே, என்னை நீ வேண்டுமாறு உபயோகித்துக் கொள்!" என்ற பாவனையில் சில வார்த்தைகள் பேசினார்கள். பின்னர், "மானிடர்களே! உங்களை எரிக்கும் அக்கினியே! மனிதர்களை வாட்டி எடுக்கும் சஞ்சலங்களே!" என்று மொழிந்தார்கள். அதன் பின் பிரார்த்தனைக்காகத் தரையில் அமர்ந்து, மீண்டும் எழுந்தார்கள். அச்சமயம் அவர்களின் திருவதனம் மஞ்சளாயும், சிவப்பாயும் மாறிக் கொண்டே வந்து, சுயநிலையை அடைந்தது. அதன் பின் அவர்கள் பேசியதாவது:)

புனித இதயம் சீர்பட்டு, மோகப்பாசங்களைச் சம்பூர்ணமாகப் புறக்கணிப்பதின் மூலம் இறைவனின் திவ்விய சமூகத்தின் கனம் தங்கிய அதிதியாக ஆகிவிடுகிறது. இந்த நிலையில் அது தன்னைக் காத்துக் கொள்ள, வானிலிருந்து அதலபாதாளம் வரையுள்ள எந்தப் படைப்பின் உதவியையும் நாடுவதில்லை; தன்னைப் போன்று சித்திபெற்றுவிட்ட நல்லாத்மாக்களை அன்றி மற்றுமுள்ள இப்பிரபஞ்சமே கூடப் படைக்கப் பட்டிருப்பதாகவும் எண்ணுவதில்லை. மெய்யாக நாடுபவனுக்கு ஒரே நாடப்பட்டவன் (இரட்சகன்), சத்திய

நேசனுக்கு ஒரே நேசன். தியானிப்பவனுக்கு ஒரே தியானிக்கப் பட்டவன். ஒருவனுக்கு (சர்வத்துக்கும் போதுமான துணை) ஒருவனே என்றாகி விடுகிறது. இந்த நிலையில் இறைவனின் திருச்சமூக முடுகுதலையன்றி, அவன் கண்கள் வேறு எதையும் காணமாட்டா. இந்த நகரத்தின் (பக்தாதின்) மீது எத்தகைய ஆபத்துக்கள், சோதனைகளெல்லாம் இறங்க இருக்கின்றன என்பது எனக்கு உணர்த்தப்படுகிறது. (என்று கூறிவிட்டு, அவை பொழியப்படாம லிருக்க இறைவனிடம் உருக்கமாகப் பிரார்த்தித்து விட்டுத்) தூக்கிலிடப்படவும், கொலை செய்யப்படவும் வேண்டிய வன்னெஞ்சர் களும் இருக்கிறார்கள். இதை என் உயிரின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். ஆனால், (இறைவன் கருணையால்) ஒரே ஒரு புனிதமான கண்ணின் தாட்சண்யத்துக்காக ஆயிரமாயிரம் கண்களுக்கு மதிப்புக் காட்டப்பட்டுள்ளது. (நூறு தடவை 'அல்லாஹ்' என்ற தியானத்தைத் துதித்துவிட்டு) அல்லாஹ், அந்த தீயவர்கள் பொருட்டால் எங்கள் அனைவரையும் அழித்துவிடுவாயா? அவர்கள் புரிந்து வரும் பாவகாரியங்களுக்காக, எங்களனைவரையுமே தண்டித்துவிடுவாயா? நாங்கள் யாது பிழை புரிந்தோம்? (இவ் வாக்கியங்களை மிகுந்த சப்தமாக மொழிந்தார்கள்.) மெய் நேசர்களையும், பகைவர்களையும் விதி (தக்தீர்) என்ற ஒரே வெள்ளாவியிலிட்டு, நாங்களனைவருமே எரிந்து, நீற்றுப் போகட்டுமென்று சபிக்கப்போகிறாயா? *

* ஆண்டகை அவர்கள் மரணித்த சில ஆண்டுகளுக் கெல்லாம் தாத்தாரியர் படையெடுத்து வந்து பக்தாதையே அழித்து, லட்சக்கணக்கானவர்களை வெட்டிக் குவித்து, கலீபாவையும் தூக்கிலிட்டு விட்டனர். பக்தாத் நகர வீதிகளில் பதினைந்து நாட்கள் முழங்காலளவு இரத்த ஆறு ஓடிற்று.

என் முன் வீற்றிருப்போர்களே! அற்புதச் செயல்களை நிகழ்த்தும் சக்தியைப் பெறவேண்டுமென்று ஆசை வைக்காதீர்கள். இறைவனின் உயர்வான முடுகுதலையும், சகவாசத்தையும் விரும்புகிறீர்களா? அவ்வாறாயின் அற்புதங்களை நிகழ்த்துவதில், தீர்க்கதரிசிகள், மெய்நேசர்களோடும் போட்டி போட எண்ணாதீர்கள்! இறைவனின் மகத்தான தோழமை உங்களுக்குச் சம்பூர்ணமாகவும், நிரந்தரமாகவும் சித்தியாகிவிடின், பிறகு அவன் ஊட்டுவதையே உண்பீர்கள். அவன் அணிவிப்பதையே அணிந்து கொள்வீர்கள். அற்புதச் செயல்களை நிகழ்த்தும் சக்தியை அடைய வேண்டுமென்று நீங்கள் ஆசை வைப்பதே, அவனுடைய புனித நேசம் உங்களுக்குக் கிட்டாமல் செய்யும் திரையாக ஆகிவிடும்.

இறைவனின் மாண்புள்ள திசையின் பக்கத்தில் சென்று விட்ட ஞானநாதர்களுக்கு, மனித குலமும், ஜின்னும், அமரர்களும்கூடத் தொண்டு புரிகின்றனர். அவர்கள் எங்கு தங்கி இருந்தாலும் (இறைவன் கருணையால் அருளப்பட்டதையே) உண்ணுகின்றனர். (அதன் மகிமையால் வாசியை ஏற்றும் பாதையைக் கடந்து) அல்லாஹ்வின் திருச் சமூகம்வரை சென்று விடுகின்றனர். இம்மையின் கவலையே அவர்களுக்கு இருப்பதில்லை! அவர்களின் 'உள்ளமை'யே அவர் களுக்குப் பணி புரிகிறது. அம்மகத்தான நேரமே மகான்களுக்குரிய பேரின்ப வேளையாகும். இறைவனின் திவ்விய சமூகத்தில் புனிதமாக நுழையும் சமயத்தில், மகான்களிடம் எஞ்சியிருக்கக் கூடிய சுபாவச் சேட்டைகளும், தான் எனும் தன்மையின் அற்ப சொற்ப சின்னமும் கூட இறைவனின் தீவிரமான சக்திச் சுடரால் பொசுங்கிபோய் விடுகின்றன. அப்போது, இதனால் அவர்களுக்குச் சிறிது வேதனையுண்டாவதும் உண்மைதான். சுகபோகம் போன்ற உலகத் தேவைகளும் குறைந்து போகின்றன. தெளிவு பெற்ற தூய இதயத்துடன் அவர்கள் அமர்ந்துவிடுகின்றனர்; அங்கே இறை கடாட்சமென்ற அமுதும், அரவணைப்பு என்ற பானமும், மகத்துவமென்ற அணியும், கருணை என்ற உடையும் அவர்களுக்கு ஆயத்தமாக இருக்கின்றன. (மெய்) ஞானங்கள் அவர்களுக்கு

அருளப்படுகின்றன. அதன்பின் சர்வ வல்லமையாளனாக அல்லாஹ் அவர்களின் சொந்தப் பெயரால் அவர்களை அழைத்து, தான் அவர்களுக்கு விதித்துள்ள சர்வ சம்பத்து, சன்மானங்களையும் எடுத்துக் காட்டி, அந்த மகாப் பேறுகளின் பேரின்பங்களிலேயே அவர்களைத் திளைக்கச் செய்கிறான். இதற்குப் பின்னர்தான் பிற படைப்புகளைப் புனிதப்படுத்தி அழைத்துச் செல்லும் தன் பிரதிநிதியாக அவர்களை இம்மையின் பக்கம் திருப்புகிறான். உலக நிர்வாகத்தையும், கேட்டால் நிறைவேற்றப்படும் 'வரத்'தையும் அந்த மகான்களுக்கு அருளுகிறான்.

இது நயவஞ்சகம் மிகைத்துள்ள காலமுமாகும்; இப்போது தற்பெருமை தலைதுக்கி நிற்கிறது. நயவஞ்சகம் என்றால் என்ன என்று யாராவது வினவலாம். "பொய் பேசுவதும், வாக்குறுதியை மீறுவதும், தன்னிடம் அடைக்கலமாய் ஒப்படைக்கப்பட்ட பொருளை அபகரித்துக் கொண்டு மோசம் செய்வதும் தான் நயவஞ்சகம்" என்ற நபி பொருமான் (ஸல்) அவர்களின் அருள்வாக்கை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

- 19 -

மெய் விசுவாசியானவன் தனக்குக் கிட்டியுள்ள சாயுட்சியப் படிவத்தையும், கௌரவத் திருநாமத்தையும் அறிந்து கொள்ளாத வரை ஊணையோ, உடையையோ, சம்சார வாழ்க்கையையோ, சாந்தியையோ, மகிழ்ச்சியையோ விரும்புவதே இல்லை. அவன் தனக்கு இரட்சகன் கடாட்சித்துள்ள அனுக்கிரகங்களைப் பார்க்காத வரை, தன் புனித ஏகாந்த வணக்கத்தில், தன் கௌரவத் திருநாமத்தை அறிந்து கொள்ளாதவரை, தனது விதிவசத்தை, (தக்தீரை) அறிந்து கொள்வதற்காகக் கானகம், வனாந்திரங்களில் படுத்துறங்குவதைப் போன்றே விழுந்து கிடப்பான். அவனுடைய அந்த மெய் வேட்கையை உணர்ந்ததும், இரண்டு அமரர்கள் ஒருவரோடொருவர் உரையாடும் முகத்தான், அவனுக்கு இறைவன் அருளியுள்ள திருநாமத்தை அவன் அறிந்து கொள்ளுமாறு செய்யப்படுகிறது.

"இவன் யார்?" என்று ஓர் அமரர் வினவுவார். மற்ற அமரர், "இவன் அல்லாஹ்வின் மெய்நேசன். நாற்பது 'அப்தால்' களில் ஒருவன்; அல்லது ஏழு 'கௌது'களில் ஒருவன்; அல்லது மூன்று 'குத்பு'களில் ஒருவன். இவனுடைய உத்தம சீலங்களெல்லாம் மகா புனிதமானவை; மகத்தானவை" என்று பதிலளிப்பார். (இவ்வாறே இந்த உத்தம அடியானை) நல் 'விதிவசம்' (தக்தீர்) வலமாயும், இடமாயும் புரட்டுகிறது. இவன் விலாக்களுக்கு(ச் சூழ்நிலைகளுக்கு)ப் புத்துயிரளித்து (வாழ்வின் மீதி நாட்களுக்குமாக மெய்ஞ்ஞான) உணவை ஊட்டுகிறது. சர்வ சக்தனான இறைவனே (இவனை முற்றி லும் சூழ்ந்தவனாக). "உன் சொந்த இடத்துக்குச் செல். உனக்குரிய கிருபா கடாட்சமான சம்பத்துக்களைப் பழுதின்றிக் காத்துக்கொள். உன் புனித இதயத்தை (க் களங்கமாக்காமல்) மறைத்து வை. (உன் துயரங்களை) நொடி நேரத் தூக்கம் போல் எண்ணு. அப்போதுதான் உன் புனித இதயமும், உன் திசையில் தூய்மையாக முன்னேறும்" என்று அறிவிக்கிறான். இந்தச் சுபச் செய்தி ஒலிப்பதை மெய்விசுவாசி தன்னுடைய புனிதமான இதயத்தால் கேட்கிறான்.

என் முன் வீற்றிருப்பானே, சன்மார்க்க நெறிமுறை (ஷரீஅத்) என்ற பள்ளிக்கூடத்தில் அமர்ந்து, ஞானம் பெற்று, அந்த உயர்ந்த ஞானத்தின் மீதே நித்திரை கொள்! (அதன்படியே நல் வணக்கம் புரி) வல்லவனின் ஞானமென்ற இறை சங்கல்பத்தின் கட்டளைக்குத் தூய்மையோடு தலைசாய்த்து சீர்படு! உன் பிள்ளைப் பருவம் கடந்ததும், இறைவனே உனக்கு (த் தன் கருணையால்) உண்ணலும், உடுத்தலும் கிருபைபாலிப்பான். நீ இந்தப் புனிதப் பண்பை மட்டும் (அதற்கான நல்வணக்கம் செய்யாமல்) ஆசிக்கிறாயே; அத்துடன் இம்மையின் இச்சா பாசங்களுக்கும், தீய சுபாவச் சேட்டைகளுக்கும், சிற்றின்ப வேட்கையையுமே உன் இதயத்தில் நிறைந்துள்ளனவே! நீ தொழுகையில் நின்றுவிட்டாலோ, உன் மனத்தில் கொடுக்கல் வாங்கல் பற்றி, உடுப்பது உண்பது பற்றி, சம்சார வாழ்க்கையின் சஞ்சலங்கள் பற்றியெல்லாம் எத்தனை ஊசாட்டங்களைப் புகுத்திக் கொள்கிறாய்!

(இந்தச் சமயம் ஒருவர் எழுந்து, " அப்படியானால் இதற்கு என்னதான் பரிகாரம்?" என்றுவினவவே, ஆண்டகையவர்கள் அதற்குப் பதில் கூறுவதுபோலத் தொடங்கி மேலும் பேசினார்கள்:)

உண்பதற்கு விலக்கப்பட்ட, சந்தேகமான உணவை உண்ணாமலிருக்க வேண்டும். செய்ய வேண்டாமென்று இறைவன் தடுத்துள்ள செயல்களைச் செய்யக் கூடாது. கீழான மனம் செய்யத் தூண்டும் காரியங்களையும் செய்யாது ஒதுங்கிக் கொள்ள வேண்டும் அடியானின் மனத்தில் (ஆத்ம சோதனைக்காக) ஒரு சிக்கலான விசயம் புகுத்தப்பட்டதும், அதனால் முதலில் அவனுக்குத் திகைப்பும், குழப்பமும் உண்டாகின்றன. வேறு ஒரு சம்பவம் புகுத்தப்படுகிறது. இதன் மூலம் அடியானின் திகைப்பும், குழப்பமும் குறைகின்றன. பின்னும், பின்னும் (சோதனைக்காக) விசயங்கள் புகுத்தப்பட்டால், (முதிர்ச்சியின் காரணமாக) அவனுக்குச் சாந்தியும், சமாதானமும் சித்தியாகிக் குழப்பமே அப்பாலாகி விடுகிறது. அதன் மகிமையால் அவன் தன் மெய்ஞ்ஞான வழியில் நடந்து செல்லும்போது கல்லும்,கரடும்கூட அவனை நோக்கி, "ஏ இறைவனின் நேசனே, (ஒலியுல்லாஹ்வே)! இறைவனால் தேடப்பட்டவனே! அவனால் நேசிக்கப்பட்டவனே!" என்ற சோபனம் கூறிப் போற்றும் பாக்கியத்தையும் பெறுவான்.

(இது சமயம் சபையிலிருந்த ஒருவர் எழுந்து, தனக்காக நற்பிரார்த்தனை புரிய விண்ணப்பிக்கவே.)

"ஏ இரட்சகா, நான் படைப்புகளிடம் உதவி தேடி ஓடிவிடாமல், உன்னிலேயே என்னை மகத்தாகப் பிணைத்துக் கொள்வாயாக! இந்த மனிதனும் தன் தேவையைத் தேடி படைப்புகளிடம் ஓடிவிடாமல் உன் புனிதச் சிந்தனையிலேயே லயிக்கச் செய்வாயாக!" என்று பிரார்த்தித்து விட்டு மேலும் தொடர்ந்ததாவது:

அடியான் படைப்புகளின் சகாயத்தை முழுமையாக அப்பாலாக்கி விட்ட பின்னர், தான் இறைவனின் மோட்ச வாயிலின் உன்னதப் படிகளில் அமரும் புண்ணியம் பெறுகிறான். அப்போதுதான் இறைவனும் அவ் உத்தம சீலனுக்குத் தன் ஒப்பற்ற அருளை கடாட்சித்து அருள் புரிகிறான். இந்தப் புனித சம்பத்து அடியானுக்குச் சித்தியானதும், அவனும் படைப்புகளிடம் யாசிப்பதை விடுத்து, இறைவனால் பொழியப்பட்ட அருள்மாரிக்காக நன்றி தெரிவித்து இறைவனின் உயர்வான தியானத்தில் அமர்ந்து விடுகிறான்.

நீ மட்டும், (மெய்யாகவே படைப்புகளின் பாசத்தை அப்பாலாக்கிவிட்டு) கானகத்தில் தனித்திருந்து, உன் ஊண், குடிப்புகளைப் பற்றிய வியாகூலத்தை ஒதுக்கி விடுவாயாயின், நிச்சயமாக உன் வீட்டில் (இறைவன்) கருணை என்ற ஊற்று தானே பொங்கிப் பெருக்கெடுக்கும். உன்னை வீழ்த்துவதற்கு வைத்தான் உபயோகிக்கும் பலமான ஆயுதம் எது தெரியுமா? படைப்புகளின் மீது நீ கொண்டுவிடும் பாசந்தான் அந்த ஆயுதம். முதன் முதலில் உன் இதயத்தைப் புனிதப்படுத்து; பிறகு உன் புற அழகைக் கவனிக்கலாம். அழகிய காதலனொருவன் (எந்த சோதனைக்கும் சளைக்காமல்) தன் மனத்துக்கு உவந்த 'காதலி' யைத் தேடியலைவதுபோல், நீயும் படைப்புகளுடன் கலந்துறவாடிக் கொண்டே கருகிவிடாமலிருந்து உயர்வடைவதுதான் மகத்தான சாதனையாகும்.

யூசுப் நபி (அலை) அவர்கள் தம் தந்தை யாகூப் நபியவர்களைத் தேடிப் புறப்பட்டார்கள். யூசுப் நபியைப் பார்த்தவர்களெல்லாம் (அவர்களின் அழகில் சொக்கி) அவர்களை நேசித்துக் காதலிக்கவும் தொடங்கவே, (தப்பிக்க வேறு வழியின்றி) யூசுப் நபி தம் முகத்தைத் திரையால் மறைத்துக் கொண்டதோடு, சிறைச் சாலையிலும், புகுந்துவிட்டார்கள். அவர்களின் லட்சியம் தம் தந்தையை அடைவதேயன்றி மற்றவர்களின் காதலை அல்ல. "இறைவா, உனக்கும் எனக்கும் பிற படைப்புகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் அழிந்து நாசமாகட்டும்!" என்ற ஒரு கவிஞனின் சொல்லுக்

கொப்பவே நடந்து சீர்ப்படு "இறைவனின் முடிவான தீர்ப்பு வரும் வரை உத்தமர்களோடு பிணைப்புக் கொள்ளாதீர்கள்" என்று கூப்பிடுகிறவர் கூப்பிடுகிறார். உன் தவளை வசிக்குமிடத்தில் உள்ள நீர் வற்றும் வரை (உன் பொடு போக்கும் சோம்பலும் முழுமையாக அப்பாலாகும் வரை) பொறுத்திரு. உன் மெய் வணக்கத்துக்கு இடம் சுத்தமாகும் வரை, நீ மற்றவர் களுக்கு ஞானோபதேசம் செய்ய முயலாதே! ஏனெனில், இறைவனின் மகாசக்தி (குத்ரத்) என்ற படகில் உன் உள்ளம் அமர்ந்துள்ளது. (தண்ணீர் வற்றிய பின்னரே படகிலிருந்து இறங்கி நல் வணக்கம் புரியலாம்)

- 20 -

புலி, வேறு உணவைப் புசித்துக் கொண்டிருக்கும் வரை உன் பக்கம் திரும்பாது. எனினும், நீயே அதன் பக்கம் பார்க்க முனைந்தால்தான், அது உன்னையும் கொன்றுவிடப் பார்க்கும். இவ்வாறுதான் உயர்வு மிக்க ஞானநாதர்களும், மெய்நேசர்களும் (இம்மையின் பாசங்களின் பக்கம் திரும்பாமல்) இரட்சகனிடம் பயபக்தியோடும், பேணுதலோடும் நட்புக் கொண்டிருக்கின்றனர். (படைப்புகளின் பக்கம் திரும்பினால், அழிந்து நாசமாகிவிடுவோம் என்று சந்ததமும் அஞ்சிப் பயப்படுகின்றனர்.) அதனால்தான் இறைவனின் புனித நேசத்தில் பேணுதலுடன் இருக்கின்றனர்.

ஹஜரத் ஜுனைத் பக்தாதியின் மாணவரொருவர் மனோ தத்துவ சாத்திரத்தில் மிகவும் திறம் படைத்தவராக விளங்கினார். இதை கேள்வியுற்ற ஜுனைத் அவர்கள், அவரை அழைத்து, "மனிதர்கள் மனத்தில் நினைத்துள்ளதை நீங்கள் கூறுகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். அது மெய்தானா?" என வினவினார்கள். மாணவர் 'ஆம்' என்று ஒப்புக் கொள்ளவே, பக்தாதியவர்கள் "அவ்வாறானால் நான் என் மனதில் என்ன நினைத்திருக்கிறேன் கூறுங்கள் பார்க்கலாம்" என்றதும், மாணவரும் பக்தாதி நினைத்துள்ளதைக் கூறினார். மகானவர்கள், "உம் பதில் சரியில்லை" என்றார்கள். இவ்வாறே பின்னும் இரண்டு தடவை மகானவர்கள் நினைத்துக்

கொண்டதை அந்த மாணவர் கூறியும்கூட, அவர்கள் அது சரியான பதிலல்ல என்றே கூறி விட்டார்கள். இதைக் கண்ட அந்த மாணவர் அவர்களை அழைத்து, 'எனக்கு அந்தத் திறமை (பிறர் மனத்தி லுள்ளதைச் சரியாக யூகித்துச் சொல்லுதல்) இருப்பதென்னவோ உண்மை தான். ஆயினும், தங்கள் இதயத்தையே கேட்டுப் பாருங்கள், நான் கூறியது சரி என்றே அது தீர்ப்பளிக்கும்" என்று கூறினார். அது கேட்ட அவர்கள், மாணவரே, நீங்கள் ஒவ்வொரு தடவையும் கூறிய பதில் சரியே, எனினும், உங்கள் உறுதியையும், மனத்தின் புனிதத்தையும் சோதிப்பதற்கே நான் இவ்வாறு கூறினேன்" என்றார்கள்.

மெய்யன்பர்களான ஞானநாதர்களின் உயர்ந்த இதயங்களில் இறைவனின் நல்லிணக்கம் (பொருத்தம்) என்ற தடம் விழுந்த பாட்டைகளே அமைந்துள்ளன. அவர்கள் ஞானக் கருவூலங் களாகவும், அவர்களின் புனித இதயங்கள் இறை விதிவசத்தின் சர்வ மர்மங்களையும் விளங்கி, ஜோதி பெற்ற கஜானாக்களாகவும் மிளிர்கின்றன. அந்தப் புனித இதயங்கள், இறை விதிவசம் என்ற அடக்கத்தலத்தில் அடக்கப்பட்டவையாகவுமிருக்கின்றன. எனவே, விதிவசம் என்ற மாளிகையில் எந்த மூலையில், எந்தத் தருணத்தில் அவர்களுடைய சீர்பெற்ற இதயம் உலவி வந்தாலும், அதற்குப் பக்தி ஞானங்களும், இறை அகமியங்களும் கடாட்சிக்கப்படும்.

அரசனைத் திருப்திப்படுத்துவதற்காக ஒருவன் முன்னூற்று அறுபது கதைகள் எழுதினான். அவற்றை அரசனுக்குத் தினமும் ஒவ்வொன்றாக அனுப்பிக் கொண்டு வந்தான். அரசன் அவைகளைப் படித்துவிட்டுச் சும்மா இருந்துவிட்டான். ஆனால், இவன் மட்டும் கதைகளைத் தொடர்ந்து அனுப்பச் சளைக்கவில்லை. இறுதியில் அவன் அரசனின் திருப்திக்கு ஆளாகிவிட்டான். (அந்தோ,) நீயோ சில நாட்களில், சில இரவுகளில் மட்டும், இறைவனிடம் கெஞ்சி பிரார்த்தித்து விட்டுச் சடைந்து போய், மீண்டும் மனிதர்களிடமே வந்து

யாசிக்கத் தொடங்கி விடுகிறாயே! கதை எழுதிய அந்த எழுத்தாளனின் மனப்பாங்கு உனக்கும் தேவையாகும். படைப்புகளின் அற்ப சகாயத்தை நம்பிக் கொண்டிருக்கும் வரை நீ வெற்றி காணமுடியாது. படைப்புகளின் சகாயத்தை முற்றும் புறக்கணித்துவிட்டு, அல்லாஹ் வின் திவ்விய சமூகத்தின் பக்கமே முன்னோக்கு. அவனுடைய மகத்தான சமீபத்துவத்தின் திருவாயிலின் நிலைமீதே அமர்ந்துவிடு! இரட்சகனின் கருணை, முடுகுதல் என்ற திருக்கரங்கள் உன்னை அணைத்துக் கொள்ளட்டும். அந்த மோட்ச மாளிகையின் நீங்கா விருந்தினனாய்ச் சமைந்துவிடு. அந்த சாயுட்சிய மாளிகையின் போகபாக்கியங்களும், கொலு மண்டபங்களும் (மகாமாத்) உனக்குக் காட்சி தந்துவிட்டால் எண் திசைகளிலிருந்தும் பூரிப்பும், மகிழ்ச்சியும் உன் மீது பொழியப்படும். அவற்றின் மகிமையால் உன் தோள்கள் வலுப் பெற்று அம்மாளிகையின் கொத்தளங்களிலெல்லாம் பறந்து திரிவாய். அந்தப் புனிதக் கொத்தளங்களே உனக்குத் துணையாக அமையும். நீ தவறி விழுந்தாலும், மாளிகைக்குரிய சர்வ வல்லமையாளனின் திருக் கரங்களிலேயே புரளுவாய். கேட்ட வரங்கள் அனைத்தும் அருளப் பெற்ற வரப்பிரசாதியாகத் திகழ்வாய்!

- 21 -

நீ படைப்புகளுக்கு நன்மை பயக்க வேண்டி ஞானோபதேசியாய் வர நாடினால், சீர்ப்பட்டு புனிதமெய்திய பின்னரே வெளியில் வரவேண்டும். வெறுமனே உளறிக் கொண்டலையாதே! படைப்புகளை விட்டும் அப்பாலாகி, இறைவனோடு சங்கமமாகித் தொழப்படும் தொழுகையே புனிதமான தொழுகையாகும். ஓர் உடல் இரண்டு துண்டங்களாகி, இரண்டு இடங்களில் பிரசன்னமாவது எங்ஙனம் இயலும்? இதுவே ஞானநாதர்களின் மெய்த் தொழுகையாகும். மெய் வணக்கவாளி (ஆபித்)கள் தொழும் போது, தங்கள் இதயத்தின் வலப்பக்கம் சுவர்க்கமும், இடப்பக்கம் நரகமும், முன்னால் 'ஸிராத்' என்ற நேரிய ஒடுக்கமான பாலமும் இருப்பதாக நிலைப்படுத்திக் கொண்டு, மகத்தான ஓர்மை நிலையில் நின்று

அல்லாஹ்வைத் தியானிக்கின்றனர். மெய்க்காதல் கொண்ட (ஆசிக்குகளென்ற) சத்தியநேசர்களோ, தங்கள் தொழுகையில் படைப்புகளை முழுமையாக அப்பாலாக்கி விட்டுத் தூய்மையுடன் ஐக்கியமாகி விடுகின்றனர்.

உன் ஆத்மாவுக்கு உணவின் தேவை இருக்கிறது என்பதற்கு மெய்யான அறிகுறி எது தெரியுமா? உள்ளத்திலிருந்து கோழிக்குஞ்சு கறைவது போன்று ஒரு சப்தம் வரும்; அப்போது அதற்குச் சிறிது உணவை ஊட்டு. அந்த உணவே உன் நல்வணக்கத்துக்குத் தேவையான பலத்தைத் தரும். "ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அதன், அதன் நன்மை, தீமைகளை அறிவித்தவன்", "அவனே சிரிக்குமாறும் செய்கிறான், அழவும் வைக்கிறான்". (திருக்குர்ஆனின் இவ்விரண்டு வசனங்களிலும், ஆதி ஏற்பாடு (தக்தீர்) சூசகமாக விளக்கப்பட்டுள்ளது). இறைவனைப் பற்றிய புனிதச் சிந்தனையில் உன் இதயம் ஒன்றித்திருக்கும் நிலையில், அந்தச் சர்வ வல்லமையாளனை வணங்குவதில் புகுந்து விடு. அந்த நிலையில் தான் நிர்மலமான வணக்கமும், ஞானோதயமும் சித்தமாகும். சத்வணக்கத்தில் நீ அமரும் முன்பு, உன் தூய இதயத்தில் தோன்றும் உணர்ச்சிகள் ஷைத்தானின் தூண்டுதலாலோ, கீழான மனத்தின் ஏவலாலே, உண்டானவையா அல்லது அவை அமரர்கள் அங்கே விதைக்கும் ஞானோதய வித்துக்களா என்று சீர்தூக்கிப் பார்.

இறைவனின் மகத்தான மெய்ஞ்ஞானப் பாதையில் நடக்க உனக்கொரு வழித்துணையும், நேசரும் தேவையாயின், நிசப்தமான நடு நிசியில் முழுமையாக ஒலுச் செய்து, புனிதமான தொழுகையில் நின்றுவிடு. சுத்தமான ஒலுவால் தொழுகையையும், அந்தத் தொழுகையால் இறைவனின் திருவாசலையும் திறப்பது சாத்திய மாகும். தொழுது முடிந்ததும், "இறைவா, நான் எவரை நேசிக்க வேண்டும்? எனக்கு மெய் வழி துலக்கும் ஞானநாதர் யார்? உன்னை

எனக்குத் தரிசனையாக்கி வைக்கும் அப்புண்ணியசீலர் யார்? படைப்புகளில் மாணிக்கமான அவர் யார்? உன் பிரதிநிதி யார்?" என்று உருக்கமாகக் கெஞ்சிப் பிரார்த்தனை செய். சங்கை மிகுந்த கருணையாளன் உன் நாட்டத்தை நிறைவேற்றி வைப்பான்; ஐயமின்றி உன் தூய இதயத்தில் ஞானோதயத்தை உதிப்பாக்குவான்; உன் உள்ளத்தில் ஞானசோதி சுடர்விடச் செய்வான்; உன் உள்ளக்கிடக்கையை நிறைவேற்றித் தன் திவ்விய வாயிலைத் திறந்து, உன் பாதைக்கு ஒளிகாட்டும் ஞான வெளிச்சத்தைத் தந்தருள்வான். (உனக்கு நல்வழி காட்டும் ஞானநாதர் ஒருவரைக் காட்டியருள்வான்).

எந்தப் பொருளையும் சலியாத முயற்சியுடன் தேடுபவர்கள், அதை அடைந்தே தீருவார்கள். "நாம் சத்தியப் பாதையில் முயற்சியுடன் நடந்தவர்களை நம் பாதுகாப்பில் நடத்துகிறோம்" என்று காருண்ய னான இறைவனே உறுதி கூறுகிறான். குறை, உன் சீர்படாத உள்ளத்தில் தான் இருக்கிறது. அல்லாஹ்வின் ஞான போதத்திலல்ல. (சத்தியப் பொருளைத் தேடும்போது) உனக்கு ஞானநாதர்கள் பலர் தரிசனமாவர். அவர்களில் உன் களங்கமற்ற இதயம் அதிகமாக நோக்குபவரையே பின்பற்றி நடக்க உறுதிகொள். அவரையே உன் உன்னத லட்சியத்தை எய்திக் கொள்ளச் சாதனமாக்கிக் கொள். ஆபத்தான பிராணிகள், பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்களிடம் பழகுவதைப் போன்றே உன் ஞான குருவிடம் (ஷைகிடம்) பேணுதலுடன் நட்புக் கொள்! அவருடைய வறுமை, ஏழ்மையையோ, குலம் கோத்திரத்தையோ, அவருடைய (தன்னை மறந்த ஐத்து) நிலையையோ, அவர் கடைபிடிக்கும் குறைவான (இபாதத்) நல்வணக்கங்களையோ நீ கவனிக்க வேண்டியதில்லை. அவருடைய லட்சியம் (இறைதரிசனம், முடுகுதல்) அவர் புனித உள்ளத்தில் தானிருக்கிறதேயன்றி வெளியிலோ, முகத்திலோ, உடம்பிலோ இல்லை. உன் ஞான (குரு) நாதருக்கு முன் பேசாதே! உனக்குச் சித்தியாகியுள்ள ஞானப் படிவங்களையும் அவரிடம் வெளிப்படுத்தாதே!

அவர் இரட்சகனின் திவ்விய சமூகத்திலிருந்தே தான் அந்த மெய்வணக்கத்தின் பேற்றினைத் தரிசிப்பார். அவரே உன் ஞான (குரு) நாதரென்றாலும், அவர் காட்டும் ஆணை (ஞானவழி) அவருடையதல்ல; (அல்லாஹ்வினுடையது.) அவர் பரிமாறுபவரே அன்றி, ஞான அமுதம் நிறைந்த தட்டுக்களோ இறைவனுடையவை யாகும். அவர் வெறும் மொழி பெயர்ப்பாளர் தான்; மூல வாசகமோ மெய்ப்பொருளான அல்லாஹ்வினுடையதாகும். அவர் நாவின் மூலம் இறைவன் அருளிய ஞான போதத்தைத் திவ்வியமாக ஏற்றுக்கொள்! அவர் உனக்கு வகுத்துத் தந்த வரம்பை மீறியோ, அவருடைய புனிதப் பார்வையைக் கடந்து அப்பாலாகியோ விடாதே! சந்ததமும் அவர் முன் பயபக்தியுடன் சிரஞ்சாய்த்துப் பணிவுடன் அமர்ந்திரு! அவருடைய ஞானப் படிவங்களையோ, அமல்களையோ, சொற்களையோ குறைகூறித் தரியாதே! சர்வ உயர்ந்த படைப்புகளிலும் அவரையே மகா மகா உயர்ந்தவராக எண்ணு! அங்ஙனமானால்தான் அந்த ஞான தேசிகர், நீ அப்பாலாகி விடாமல் கவனித்து, உன்னை இறைவனின் திருச்சந்நிதியின் பக்கல் அழைத்தேகும் பாக்கியம் பெறுவாய்.

அவர் (உன் குருநாதர்), ஞானக் கனிகளை அருந்திக் கொண்டிருக்கிறார். அதை உனக்கு ஊட்ட வேண்டிய அவசிய மில்லை. அவரே (இரட்சகனுடன்) உரையாடும் பாக்கியசாலியா யிருப்பதால், ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கும் அவர், உனக்குப் போதிக்க வேண்டிய தேவையில்லை. நமது இயற்கை சுபாவங்கள், நாற்கால் பிராணிகளைப் போன்று படைக்கப்பட்டுள்ளன. ஆனால், மெய்யறிவும், சன்மார்க்க நெறிமுறையும் (நன்மை தீமைகளுக் கிடையேயுள்ள) வித்தியாசங்களை நமக்குச் செவ்வையாக உணர்த்துகின்றன. பாவம் எது, புண்ணியம் எது என்பதை நமக்குள்ள புனித ஞானோதயம் விளக்குகிறது; இறைவனை நெருங்கு தலையும், ஆசார, அனாச்சாரங்களையும், நமக்குப் பகுத்துக் காட்டுகிறது. மெய்வணக்கமும், தன்னையறியும் (தவ)ஞானமும் நம்மைப் புனிதமாகச் சுத்திகரித்துச் சீர்படுத்துகின்றன.

மூலவோர் ஒன்றே ஒன்றுதான். (அடியார்கள்) புனிதமான மெய்ஞ்ஞான வழிப்படியே மெய்வணக்கம் புரிவார்களாயின், அவர்கள் ஒரு பிணத்தின் (வழி தவறியவனின்) அருகாக நடந்து சென்றாலும், அந்தப் பிணத்துக்கு (வழி தவறியவனுக்கு) ஆத்மஞான மென்ற உயிரையூட்டி, அவனை உயிர்ப்பித்துவிட முடியும். சோதனைக்குள்ளான பாவாத்மாக்களின் சமீபத்தில் அவர்கள் நடந்து சென்றாலும் (அவர்களை தங்கள் மகிமையால்) இறை தியானத்தை சதாவும் துதிப்பவர்களாகவும், இரட்சகனின் அகமியங்களிலேயே மூழ்கித் திளைக்கும் சான்றோர்களாகவும், சமைத்துவிட முடியும். ஞான மகான்களின் இல்லங்களில் ஏனைய படைப்புகளுக்காக கிருபா கடாட்சமென்ற தட்டங்கள் வருகின்றன. அந்த மெய்ஞ்ஞானிகளே இறைவன் விதித்துள்ள வரிப் பணங்களை வசூலிக்கும் அதிகாரிகளாவர். வசூல் முடிந்ததும், அதை இரட்சகனின் திவ்விய சமூகத்தில் ஒப்படைத்து விடுகின்றனர். அவர்கள் தங்களிடமுள்ள திருவோடுகளை ஏந்தி யாசிக்கிறார்களென்றால், அது அந்த வசூல் தொகையைத் தங்களுக்காக வைத்துக் கொள்வதற்காக அல்ல; இறைவனின் கஜானாவில் சேர்ப்பதற்குத்தான். இறைவன் நீ சீர்படுவதை விரும்பி விட்டாலோ, உனக்கும் ஞானோதய வரத்தை அருளி, நீயே உன் ஆத்மீகக் குறைபாடுகளைக் களைந்து கொள்ளுமாறு செய்து விடுவான்.

உங்களிடையே உலவும் எத்தனையோ ஞானோபதேசிகள் (ஆலிம்கள்), முற்றுமே வழிதவறியவர் (ஜாஹில்)களாகவும், பொய்யர்களாகவும், புனிதத் துறவி போன்று நடிக்கும் போகிகளான நயவஞ்சகர்களாகவும் இருக்கிறார்களே! உன் சன்மார்க்கத்தை (தீனை)ப் பிழைக்கும் வழியாகப் பயன்படுத்தாதே! சன்மார்க்கத்தால் மறுமையின் முக்தியைத்தான் சம்பாதிக்க வேண்டும். "உள்ளச்சத் தோடும், தூய்மையான பணிவோடும், உங்கள் இறைவனிடம் பிரார்த்தனை புரியுங்கள். வரம்பு கடந்த அப்பாலானவர்களை இறைவன் நேசிப்பதில்லை" என்ற திருக் குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ள 'வரம்பு கடந்தவர்கள்' என்பது படைப்புகளிடம்

யாசிப்பவர்களையே குறிக்கிறது. " அடியார்களே, நீங்கள் என் இதய ஜோதியில் அமர்ந்து விடுங்கள். இறைவனை அறிந்து கொள்ளுங்கள். இறைவனை அறிந்து கொள்ள நாடி, என் ஞான போதத்தைச் செவி சாய்த்துக் கேட்பவர்கள் மட்டுமே அதனால் சீர்படுவார்கள். அவர்களிடம் என் ஞானோபதேசம் பிரகாசித்து ஜொலிக்கும். மற்றவர்களிடம் அது அவர்களை நாசமாக்கும் சாதனமாக ஆகிவிடும். அப்படிப்பட்டவர்கள் என்னை அணுகாதீர்கள்" என்று இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் உபதேசித்துள்ளார்கள்.

இப்ராஹிம் நபி (அலை) அவர்கள் (நம்ரூதின்) நெருப்புக் குண்டத்திலிருந்து வெளியேறிய பின், அவர்களுடைய ஆடு, மாடுகளும், ஆட்படைகளும் அதிகரித்துவிட்டன. அதனால் அவர்கள் சிரியாவுக்குச் சென்று, பல வாயில்களையுடைய அழகிய மாளிகை ஒன்றை நிர்மாணித்தார்கள். அவர்கள் தங்கள் சீடர்களையும், மற்றவர்களையும் சீர்செய்து புனிதப்படுத்துவதற்காக, அந்த மாளிகையில் தனியே ஏகாந்தத்தில் அமர்ந்துவிட்டார்கள். மெய்நேசம் (குல்லத்) என்பது இறைவனின் புனிதக் கடாட்சமாகும். இதை இறைவன் இப்ராஹிம் நபிக்கு அருளினான். 'முஹப்பத்' (மெய்வணக்கம்) என்பது கருணையாளனுடன் மகத்தாக ஐக்கியமாகிவிடுவதாகும். (இது இருலோக நாயகர் எம்பெருமான் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டதாகும்.)

- 22 -

("மகான்கள் சீர்பட்டு ஈடேற்றம் அடைந்ததும், அவர்களுக்குச் சித்தியாகும் பரவச நிலை போன்றவைகளைப் பின் பற்ற வேண்டுமா, அல்லது அவர்களின் போதனைகளை மட்டும் பின்பற்றி அமல் புரிய வேண்டுமா?" என்று ஒருவர் கேட்டதற்கு ஆண்டகையவர்கள் பதில் கூறிப் பேசியதாவது:)

ஆத்ம ஞானப் படிவங்களில் சீர்படாத சாமான்யர் (அவாம்)கள் மகான்களின் போதனைகளைப் பின்பற்றியும், சீர்பெற்ற புனிதசீலர் (கவாஸ்)கள் அவர்களின் நிலைகளை (ஹ்காலை)ப் பின்பற்றியும் நடக்க வேண்டும். நீ எந்தப் படிவத்திலிருக்கிறாய் என்பதை எனக்கு விளக்கு; உன் நாடியை என்னிடம் ஒப்படை; (உன்னைச் சீர்செய்து) உனக்குத் தகுதியான இடத்தில் (படிவத்தில்) உன்னை அமர்த்தி, உன் ஆத்ம பிணியை அகற்றுகிறேன். (அஞ்ஞானப்) பிணியாளர்களை வினவிச் சீர்படுத்துவது நபிபெருமான் (ஸல்) அவர்களின் பழக்கமாகும். எங்களுக்கோ, அந்த மகத்தான 'நிலை' விலக்கப்பட்டுள்ளது. எங்கள் தெண்டிப்பின் (ஹிம்மத்) மகிமையால், உடல் நலமுள்ளவர்களை மட்டுமே சீர்படுத்தி வருகிறோம். உங்கள் இருப்பிடத்துக்கு வர எங்கள் கால்களும், உங்கள் செல்வத்தை யாசித்து எடுத்துக் கொள்ள எங்கள் கரங்களும் தடுக்கப்பட்டுள்ளன. எங்களுக்குச் சித்தியாகியுள்ள ஞான மார்க்கப் படிவங்களுக்குத் தக்கவும்,இறை சங்கல்பத்தின் முடிவுக்குத் தக்கவுமான வகையிலேயே (நடக்க) ஆணையிடப்பட்டுள்ளோம்.

ஒருவனுக்குப் பத்துப் பிள்ளைகள் இருந்து அவன் காலமாகி விட்டால், அவன் தனபாக்கியங்களை, அந்தப் பத்துப் பிள்ளைகளும் சமமாகத்தானே பங்கிட்டுக் கொள்வார்கள்! எனினும், அவனுக்கு ஒரு மகன் மீது மட்டும் அதிகப் பிரியமும் அன்புமிருந்து, அவனுக்கே தன் சொத்து முழுவதையும் கொடுத்துவிட வேண்டுமென்று அவன் ஆவல் கொள்கிறான். அச்சமயம் இறை சங்கல்பத்தால் மற்ற ஒன்பது மக்களும் இறந்து விடுகின்றனர். இந்த நிலையில் தந்தையின் உள்ளன்புக்குரிய அந்த மகனே முழு ஆஸ்தியையும் அடைய முடிகிறதன்றோ! இதிலுள்ள மெய்ஞ்ஞான அகமியங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுங்கள். இறைவனின் ஈடேற்றம் நம்மீது பொழியப்படட்டும்! (வஸ்ஸலாம்). இரட்சகா, படைப்புகளின் கொடுமைகளிலிருந்து எங்களைக் காத்தருள்! இறைவா, கீழான மனத்தின் ஆவேசங்களும், சுபாவச் சேட்டைகளும், இகத்தின் பாசங்களும் எங்கள் மீது தம் கரங்களை நீட்டாமலிருக்கக் கருணைபுரி!

சபையில் அமர்ந்திருப்போனே! இம்மை என்ற அந்தக் கடலைக் கண்டு அச்சம் கொள்வதாகச் சொல்லும் நீ, ஏன் அதிலிறங்கி நீந்தி விளையாடுகிறாய்? அச்சப்படுவதும், ஆசைப்படுவதும் ஒன்றுக் கொன்று முரணானவை அல்லவா? "இறைவனின் அடியார்களில் உலமாக்களே, (யதார்த்தமான ஞானமுடையவர்களே) அல்லாஹ் வுக்கு அஞ்சிப் பயபக்தியுடன் நடக்கின்றனர்" என்பது அல்லாஹ்வின் சோபனச் செய்தியாகும். அவர்களுக்குப் புனிதமான ஞானோதயம் அருளப்பட்டு, அதன் மகிமையால் மெய்யான பக்தியுண்டாகிறது. (இறைவனுக்கு அவர்கள் மெய்யாகவே அஞ்சுகின்றனர்) உனக்கும் எப்போதேனும் ஏதாவதொரு மெய்ஞ்ஞான அகமியத்தைப் பற்றிய உதிப்பு உண்டானால் அதன் காரணமாக நீ வழிதவறிவிடாதே! இறைவனிடம் அச்சமிகுந்தவனாகத் தீமையிலிருந்து விலகி நில்! மரணம் அவசியம் வந்தேதான் தீரும். எனவே, அதற்கு ஆயத்தமாக மெய் வணக்கம் புரிந்து புனிதப்படு!

மேல் கூரைகூட இல்லாக் குட்டிச் சுவரில் வசிப்போனே, பசி அகற்ற உணவும், உடுத்த உடையுமின்றித் தவிப்பவனே, (எச்சரிக்கை) குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது! அதற்கான சாதனங்களை இப்போதே தயாரித்துக் கொள்! சர்வ வல்லமையாளன் வந்துக் கொண்டிருக்கிறான். (மரியாதைக்காக) உன் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு, வெறும் காலோடு நில்! மரணம் என்ற பயங்கர மிருகம் இதோ நெருங்கி வருகிறது! உஷார் தப்பித்துக்கொள்! தொழுகையில் நீ, (இய்யா(க்)க நஃபுது வஇய்யா(க்)க நஸ்தயீன்) "இறைவா, உனக்கே சித்தசுத்தியுடன் சிரவணக்கம் செய்கிறேன்; மேலும், உன்னிடமே புனித சகாயத்தை ஆசிக்கிறேன்" என்று சொல்லுவதன் தாத்பரியம் தானென்ன? உனக்கே என் தூய மெய் வணக்கம் உரியது. உன்னிடமே கிருபா கடாட்சத்தைத் தேடுகிறேன் என்பதுதானே? எப்போதேனும் நீ அந்தப் பரமனைப் பரிசுத்த ஏகனென்று அறிந்து புனிதப்படுத்தியதுண்டா? களங்கமற்ற

மெய்வணக்கத்தை எப்போதேனும் நிறைவேற்றியதுண்டா? படைப்புகளின் பாசத்திலிருந்தும், முகத்துதியிலிருந்தும், நயவஞ்சகத்திலிருந்தும் அப்பாலாகியதுண்டா? இரட்சகனின் திவ்விய சமூகத்தில் முழுமையான பணிவை எப்போதேனும் சமர்ப்பித்ததுண்டா.? (நீயே சொல்)! அப்படிமுக்கற்ற ஏகாந்தத்தில் இதயம் சித்தி பெற்றிருக்கும் அளவுக்கே உனக்குத் தாழ்மையும் பணிவும் சித்தியாகும். ஆத்ம பாசமென்ற இழிவான பிரேமையும், கருணையாளனின் தரிசன பாக்கியமும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாதவை. இவை இரண்டையும் இணைத்துப் பார்க்கவே மகான்கள் வெட்கப்படுகின்றனர். ஆகவேதான், இச்சையை மகா தூய்மையுடன் ஒதுக்கி அப்பாலாகி விடுகின்றனர். ஒரு சமயம் யூஸுப் நபி (அலை) அவர்கள் தனிமையிலிருக்கும் போது, இச்சை மேலிட்டுத் தவித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட அவர்களுடைய தந்தை யாகூப் நபி (அலை) அவர்கள் தம் புதல்வரின் நிலைக்கு வருந்திக் கைசேதப்பட்டுப் பல்லைக் கடித்தார்கள். அதை அறிந்த யூஸுப் நபி (அலை) அவர்கள் துயரப்பட்டுப் புனிதமடைந்தார்கள். அதைப் போல் நீ எப்போது சீர்பட போகிறாய்? இறைவன் மீது கொள்ளும் உன்னத ஈடுபாடுதான் அந்தச் சீர்பாடாகும்.

ஹஜ்ரத் யூஸுப் நபி (அலை) அவர்கள் ஒரு சமயம் அந்த மாதரசி (ஜுலைகா)யுடன் தனித்திருக்க நேர்ந்தபோது, இரட்சகனின் பயபக்தி என்ற புனித 'ஈடுபாடு' மேலிட்டதும் அங்கிருந்து ஓடியே விட்டார்கள். (இதைத்தான்) "யூஸுபிலிருந்து தீமையையும், அருவருப்பான குணங்களையும் அகற்றிவிட்டோம். மேலும், அவர் நமது சிறந்த அடியாருமாவார்" என்று இறைவன் சிலாகித்துக் கூறியுள்ளான். யூஸுப் நபியைப் போன்று நீ எப்போது புனிதப்பட்டுச் சிலாக்கிய மடைவாய்? அவர்கள் இறைவனின் திருச் சந்நிதியிலும், அவனது மகத்தான அணைப்பிலுமாகித் தங்களின் ஒப்பற்ற கற்பை (இஸ்மத்) காத்துக் கொண்டதால்தான் இரட்சகனின் சித்தப்படி, சிறைக்கூடம்

புகுவதையே சிறந்ததாகக் கண்டார்கள். அதன் மகிமையால் தான், மேலும் மேலும் மகத்தான புனிதக் கற்பு அவர்களுக்கு அருளப்பட்டது. அல்லாஹ்வின் அடியார்களே! சீடர்களே! நீங்களும் அவ்வாறே புண்ணிய சீலர்களாகி, மெய்நேசர்களின் புனிதமிக்க பண்பை அடையப் பெறுங்கள். அவை உங்கள் மீது பொழியப்பட இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தியுங்கள்.

இகத்துக்கான ஜீவனோபாய சாதனங்களையும், படைப்புகளை நம்பிக் கிடக்கும் அவல நிலையையும், பரிபூரணமாகப் புறக்கணித்து ஒதுக்கிவிடுவது தான் பரஞ்சாட்டுதல் (தவக்குல்) ஆகும். மனம் 'இம்மையின் பாசம்' என்ற களங்கமான படிவத்தைக் கடந்துவிட்டால், அதற்கு அமரத்துவம் (மலகூத்து) சித்தியாகும். பின்னர், அமரர்(மலக்கு)களுக்குக் கடாட்சமாகும். ஞானோதயம் இந்த சீர்பெற்ற இதயத்துக்கும் கிடைக்கும்; அமரர்கள் கேட்கும் சப்தங்களை இதுவும் கேட்கும் நிலையுண்டாகும். அந்த நிலையைக் கடந்து, அது மேலும் மேலும் தூய்மையடைந்து அமரர்களுக்கும் அதிகாரியாய்த் திகழும்.

(மூஸா நபி (அலை) அவர்கள் இறைவனைச் சந்தித்த சம்பவத்தை விளக்கி ஆண்டகையவர்கள் கூறியதாவது:) சுத்திகரிக்கப்பட்ட உள்ளமே தூய உள்ளமாகும். தூர்சீனா (சீனாய் மலை)விலிருந்து இறைவனின் ஜோதி இலங்கிய சமயம், அதன் அகமியத்தை அறியும் ஞானேதயம் மூஸா நபிக்குச் சித்தியானதும் தான். அவர்களின் புனித உள்ளத்தினால் பாசமிகுந்த தங்கள் குடும்பத்தினரையே அப்பாலாக்கி விட்டுச் செல்ல முடிந்தது. முகக் கண்ணால் கண்டது சாதாரண நெருப்பு; அகக் கண்ணால் தரிசித்ததோ வல்லோனின் ஞானபிரகாசமாகும். வெளிக் கண் கண்டது (நெருப்பு என்ற) படைப்புப் பொருளை, அகக்கண் கண்டதோ கருணையாளனான இறைவனையேயாகும்.

அந்த மகத்தான படிவத்தில்தான் தங்களோடு வந்தவர்களை நோக்கி, "நான் நெருப்புச் சுடரைக் காண்கிறேன்; நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று ஆணையிட்டார்கள். அந்த 'ஞான ஜோதியே' நபியவர்களை வசீகரித்துத் தன் பக்கம் வலித்துக் கொண்டது. அதன் மகிமையால் புனிதமான துறவு நிலை அவர்களுக்குச் சித்தியாயிற்று; இகத்தின் பாசமான மனைவி, மக்களின் பிணைப்பிலிருந்தும் விலகிக் கொண்டார்கள். உடனே அவர்கள் தங்களோடு வந்தவர்களை நோக்கி, "இங்கேயே நின்றுகொள்ளுங்கள்" என்றார்கள்! (இவ்வாறே இறைவனின்) அசரீரியான சப்தமும், மகத்தான தெய்வ சங்கல்பத்தின் கொரடாவும் வந்து, உத்தம மகான்களை, அவர்களின் உற்றார், உறவினர்களை விட்டுப் பிரித்து இழுத்துப் புனிதத் துறவு ஏற்க)க் கொண்டு போய் விடுகின்றன. எனது புனித ஆணையே, நீடுழிவாழ்! அகமியம் மிக்க தெய்வ ஞானமே, (மகான்களை அணுகி) முன்னேறு! (அபசாரம் நிறைந்த) கீழான மனமே, (அவர்களை அணுகாமல்) அப்பாலாகிவிடு! தூய இதயமே, புனித அகமியமே, நீங்கள் இருவரும்தாம் பதில் கூற வேண்டும்! ஞானோதயம் அனுக்கிரகமாகாத, அதை விரும்பாத, அதை நம்பாத மூடர்களுக்கே துர்பாக்கியமும், நஷ்டமும் உண்டாகட்டும். அந்தோ, பெருநஷ்டமே! அந்தோ பரிதாபமே! அந்தோ (தரிசன புண்ணியத்தைத் தராத அஞ்ஞானத்) திரையே! அந்தோ இரட்சகனின் முனிவே! உன்னதமான சன்மார்க்க வழியை, அதன் அடையாளங்களைக் கூடத் தெரிந்துக் கொள்ளக்கூடாத வகையில் தவறவிட்டு விட்டீர்கள். அதனை விளக்க, அல்லது அழைத்துச் செல்ல, நான் ஏதேனும் ஒரு செய்தியைக் கொண்டு வரலாம். அதுவரை நீங்கள் அமர்ந்திருங்கள்!

(இச்சமயம் கலீபாவின் பிரதான அதிகாரியொருவர் ஆண்டகை அவர்களின் சபைக்கு வந்தார். அதற்குமுன் அவர் அங்குவரும் வழக்கமில்லை. அன்று அவரை ஆண்டகை

அவர்கள் பார்த்ததும், "அந்தோ, நீ பிறக்காமலிருந்திருக்கக் கூடாதா? பிறந்துவிட்டாய், ஏன்தான் பிறந்தாய்? என்றாவது சிறிது சிந்தித்துப் பார்க்கக் கூடாதா?" என்று கூறிவிட்டுத் தங்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள்:)

அஞ்ஞானமென்ற ஆழிய நித்திரையில் புரண்டு கொண்டிருப்போரே, தூக்கம் விட்டெழுங்கள். சர்வ வல்லமையாளனின் (வேதனை என்ற) வெள்ளம் எதிரே வந்து உங்களைச் சூழ்ந்து கொள்ளப் பாய்கிறது! நியாயத் தீர்ப்பு நாளன்று உங்களிடம், "உங்கள் வேதம் எது? உங்கள் வழிகாட்டி யார்? யாரை இறைவனாக ஏற்றீர்கள்?" என்றெல்லாம் நிச்சயமாகக் கேட்கப்படுவீர்கள்.

நீ சங்கைக்குரிய புனிதனாகவே காணப்படவில்லையே! அதிகமான பயபக்தியில் முழுமையாகப் பண்பட்டவனைத் தான் அல்லாஹ்வும், அவன் திருத் தூதரும், மெய்யான சங்கைவானென்று ஏற்றுக்கொள்வார்கள். "நாயகமே, தங்களின் மெய்யான சங்கையுள்ள சந்ததியினர் யார்?" எனறு ஒரு மனிதர் நபி பெருமானாரிடம் வினவியபோது, "தூய்மையான பயபக்தியுடையவனே என் உன்னத குடும்பத்தவன்" என்று அவர்கள் அருளினார்கள். இதை நீ நன்கு சிந்தித்துப்பார்! போ, சும்மா வாயை மூடிக்கொண்டிரு! உனக்கு அறிவே இல்லை! திஜ்லா நதியின் மீது வீடமைத்துக் கொண்டு, தாகத்தால் செத்துக் கொண்டிருக்கிறாயே! (நானிருக்கும்போதே வழிதவறி நடக்கிறாயே!) கீழான மனம், படைப்புகள் என்ற இரண்டு பாலங்களையும் கடந்தால் தான் கருணையாளனான இறைவனின் திவ்விய சமூகத்தை அடைய முடியும்.

இறைவனின் திருச் சந்நிதியை அடைய நாடுவோனே, உன்னிடமிருக்கும் இம்மை, மறுமை என்ற இரண்டு பாதங்களையும் புனிதப் படுத்தி நடந்து, கருணைக்கடலான இறைவனின் திருச் சமூகம் செல்! நீ செயசீலனாகிச் சீர்பட வேண்டுமானால், என் ஞானோபதேசங்

களென்ற சம்மட்டியடிகளுக்கு முழுமையாகச் சகிப்புக் காட்டியொழுகு! எனக்கு (அல்லாஹ்வுக்காக மட்டுமே கோபித்தல் என்ற) வெறி ஏற்பட்டுவிடுமாயின், உன்னைப் பார்க்கவே மாட்டேன். என் தூய உள்ளத்தின் உணர்வும், களங்கமற்ற சுபாவமும் என்னில் அலைவீசத் தொடங்கி விட்டால், உன் முகம் எனக்குத் தெரியாது. நீ சிறப்படைய வேண்டும். உன் இதயக் களங்கங்கள் அகன்று, நீ உத்தம சீலனாய் மிளிர வேண்டும் என்பதுவே என் அவாவாகும். உன் இதயமென்ற மாளிகையைப் பற்றிக் கொண்டிருக்கும் பெரு நெருப்பை அணைக்கவும், உன் மகிமையைப் பாதுகாக்கவுமே நான் ஆவல்படுகிறேன். உன் கண்களைத் திறந்து, உன்னெதிரிலிருப்பது என்ன என்று கூர்ந்து நோக்கு. உன்னைத் தண்டித்து வேதனைப்படுத்தும் பெரும்படை வந்து கொண்டிருக்கிறது.

ஏ மூடா, உன் நிலைக்காக வருந்தித் துக்கப்படுகிறேன். சில நாட்களில் நீ மரித்துத்தானே ஆகவேண்டும்! உன் சுகபோகங்களனைத்தும் உன்னை விட்டுச் சென்றே விடும், உன் மக்கள் பாக்கியங்களையும், வீடு வாசல்களையும் விட்டுவிட்டு மண்ணறையின் நண்பனாக, கருணையின் (அமரர்களின்) கரங்களிலோ அன்றி, வேதனைப்படுத்தும் கிங்கரர் (ஜபானியாக்)களின் பிடியிலோ சிக்கிக் கொள்வாய்.

வீணர்களாகத் திரிபவர்களே! அழிந்து போகக்கூடியவர்களே! செத்து மடிந்து போகக் கூடியவர்களே! இறைவனின் அருட் கொடைகளைத் துய்ப்பவர்களே, மந்த புத்திக்காரர்களே, நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? இழிநிலையிலாக்கப்பட்டுச் சோதனைக் குள்ளானவர்களே, வாரத்தில், மாதத்தில், வருடத்தில், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது என்னை அணுகி, அமர்ந்து சீர்படக் கூடாதா? அற்பப் பொருளையோ, அணுவத்தனை பண்டத்தையோ, நீங்கள் எனக்குத் தர வேண்டியது இல்லை. உங்களிடம் உள்ள அற்பச் செல்வங்களை ஒதுக்கி, என்னை அணுகினால், என்னிடமிருக்கும் ஒப்பற்ற பாக்கியங்களனைத்தையும் அமோகமாக உங்களுக்கு

அன்பளிப்பாகத் தருகிறேன். நாளை (மறுமையில்) இதனினும் மகத்தான சம்பத்துக்களெல்லாம் உங்களுக்கு பிராப்தமாகும்.

(என்னை அணுகினால்) என் சுமைகளையும், உன்னையே சுமக்க வைத்து விடுவேனென்று நினைக்கிறாய்? (அதற்கு மாறாக) உன் பாரங்களையும் நானே சுமக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். என் தேவைகளையும் அல்லாஹ்வே ஏற்றுக் கொண்டு விட்டான். ஒரு வாய் உணவுக்காகக்கூட படைப்புகளிடம் நான் நெருங்க மாட்டேன். என் ஞானபோதத்தைப் போன்ற ஒரு வார்த்தையாவது நீ கேட்க வேண்டுமானால், ஆயிரமாண்டுகள் நீ அலைந்து திரிய வேண்டும். என்ன இருந்தாலும், உனக்கும் எனக்கும் இடையில் உள்ள தூரம் கொஞ்சம்தான். படுமோசமான சோம்பேறி நீ! அடிமுட்டாள் நீ! கீழ்தரமான நடத்தையுள்ளவன் நீ! தேடற்கரிய ஏதோ சுகபோகம் கிடைத்துவிட்டதாக அகந்தை கொண்டலைகிறாய். உன்னைப் போல் எத்தனையோ பேர்களை இந்தப் பிரபஞ்சம் கொழுக்க வைத்து, உண்டு, ஏப்பம் விட்டிருக்கிறது; ஐசுவரிய சம்பத்துக்களாலும் பட்டம் பதவிகளாலும் பலரைப் பெருக்க வைத்துப் பின்னர் சாப்பிட்டும் விட்டது.

இம்மையின் சம்பத்துக்களில் ஏதேனும் சிறப்பு இருக்குமாயின் அவைகளை அடைந்து கொள்வதில் என்னை நீ முந்தவே முடியாது. சகல கருமங்களும் அல்லாஹ்வின் பக்கமே திரும்பி விடும் என்பதைக் கவனித்துச் சீர்படு! எந்த நிலையில் என்னை நீ பார்த்தாலும், நான் இறைவன் பக்கம் சார்ந்திருப்பதைத் தான் காண்பாய்.

(ஆண்டகை அவர்கள் சொற்பொழிவை முடித்துக் கொண்டு மேடையிலிருந்து இறங்கியதும், ஒரு சீடர் ஒருவர் அவர்களை அணுகி "நாயகமே, இன்று நீங்கள் மிகவும் காரசாரமாய் உபதேசித்ததுடன், கலீபாவின் பிரதானியையும் மிகவும் வன்மையாகத் தாக்கி விட்டீர்கள். அதனால் அவருக்கு வருத்தம் ஏற்பட்டிருக்கும்" என்றார். இதை கேட்ட ஆண்டகை அவர்கள், "என் ஞானோபதேசம் அவருக்குப் பயனளித்திருந்தால், அவர் மீண்டும் மீண்டும் இங்கே வந்து கொண்டிருப்பார்"

என்றார்கள். (பிறகு அவ்வாறே அந்த பிரதானி தினமும் ஆண்டகை அவர்களை அணுகி உபதேசம் பெற்று உன்னதமடைந்தார்.) அதன் முடிவில் "இரட்சகா, பொறுமையையும், மன்னிப்பையும் அருள் வாயாக! இறைவா, எங்களுக்கு உன் மகத்தான பேரருளைப் பொழிந்துக் கருணை புரிவாயாக" என்று வேண்டினார்கள்.)

- 23 -

படைப்புகளிடம் இம்மையின் செல்வத்தை யாசிப்பதற்காக நின்று கொண்டிருந்தாயோ, படைப்பவன் உன்னை அப்பாலாக்கி விடுவான். "இம்மையின் செல்வத்துக்காக, செல்வர்களிடம் தலை குனிந்து நிற்பவனின் மெய்யுறுதியில் மூன்றில் இரண்டு பங்கு அழிந்து போகும்" என்ற நபி பெருமானின் அருள்வாக்கைச் சிந்தித்துப் பார்! அந்தோ கைசேதமே, நீ படைப்புகளிடம் யாசித்துக் கொண்டிருப்பதிலேயே மோகமாய் கிடக்கிறாயே! எனவே, அதே கேவல நிலையில்தான் அந்தக் கருணையாளனையும் சந்திப்பாய்.

ஒரு சமயம் நான் ரஹ்பாவின் கடைத் தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மனிதன் ஒருவனைச் சந்தித்தேன். அவனோ விலையுயர்ந்த பட்டு அங்கி ஒன்றை இருபத்தைந்து பொற்காசுகளுக்கு விற்று, அப்பணத்தை மடியில் வைத்துக் கொண்டிருந்தான். நான் அவன் பின்னாலேயே சென்றேன். சிறிது தூரம் போனதும், வேறு ஒரு மனிதன் ஹரீஸாவைத் தின்று கொண்டிருப்பதை அந்த யாசகன் பார்த்து, அவனிடம் சென்று யாசித்தான். அவன் இவனுக்கு ஒருபிடி கூடத் தரவில்லை. நான் யாசகனை அணுகி, "பிச்சை எடுப்பது உனக்கு வெட்கமாயில்லையா? இப்போது தானே விலையுயர்ந்த அங்கி ஒன்றை விற்றாய்?" என்று வினவினேன். அதற்கு அவன், "உன் உபதேசத்தைக் கேட்டு, என் தொழிலை விட்டு விடவா?" என்று வெட்கமின்றிப் பதில் கேள்வி கேட்டான்.

முழுமையான இறைநேசம் (விலாயத்) சித்தியான மகாத்மாக்கள், தங்கள் காலத்திய படைப்புகளுக்குக் 'குத்பு'களாவர். எல்லா படைப்புகளையும் புனிதப்படுத்திச் சீர்படுத்தும் பாரத்தையும்

அவர்களே ஏற்கின்றனர். அதற்குத் தக்கவாறே மற்றவர்களைவிட அதிகமான மெய்யுறுதி அவர்களுக்கு அருளப்படுகிறது. அதன் மகிமையால் தான் சகல படைப்புகளின் சுமைகளையும் அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். (ஏ மூடனே) நான் அணிந்திருக்கும் மேலான விலையுயர்ந்த அங்கியையும், நான் அமர்ந்திருக்கும் விரிப்பையும் பார்த்து (ஒரு துறவிக்கு விலை மதிப்பற்ற விரிப்பும் அங்கியும் எதற்கென்று) மனம் புழுங்காதே! நான் அணிந்திருப்பதோ, செத்த பிறகு வெறும் சடலத்துக்கு அணிவிக்கும் 'கபன்' ஆகும். பிரேதத்துக்கு 'கபன்' துணி உயர்ந்ததாயும், புதிதாயும்தானே அணிவிக்கிறோம்! நான் பல ஆண்டுகள் முரட்டுக் கம்பளிகளை உடுத்தியும், ருசியற்ற உணவை உண்டும், பசித்திருந்து சீர்பட்ட பின்னரே, இந்த உயர்ந்த அங்கியை அணிந்து, இந்த விரிப்பில் அமரும் பாக்கியம் பெற்றேன்; (உன் கண்முன் நான் தென்பட்டாலும்) வேறொருவருடன்; (இறைவனுடன்) என்னைப் பிணைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஏ, பாக்தாத் வாசிகளே! ஞானோதயம் பெறுங்கள்! பூமியிலும், வானத்திலும் சஞ்சரிப்போர்களே! நீங்களறியாத படைப்புகளை எல்லாம் பின்னும் படைப்பதாக இறைவன் அருளியுள்ளான். வரப்போகும் அவ்வாறான படைப்புகளே, பேச்சைச் சோடித்து சிங்காரித்து, அடுக்கு மொழிகளில் பேசிவிடுவதால் மட்டும், அது சத்திய ஞானபோதமாகி விடாது. என் வெளிக்கோலம் புனிதமானது என்று நூய உள்ளமும், உள்ளம் புனிதமானதென்று வெளிக்கோலமும் சாட்சி பகர்கின்றன. நீ வணங்கும் எண்ணற்ற தெய்வங்களை எல்லாம் அப்பாலாக்கிவிட்டு, உன் ஒரே இறைவனான அல்லாஹ்வுக்கே வழிபடு! நீ முகம் நோக்கும் சகல திசைகளையும் விட்டு விட்டு ஒரே திசைதான் உன்னில் நிலையமாக மிளிரவேண்டும். உன் வணக்கத்திற்குரிய அன்பன் ஒருவனாகவே இருக்க வேண்டும். உன் சித்தசுத்தி அடைந்த இதயத்தில் இறைவனின் பரிசுத்த ஒருத்துவத்தை மட்டுமே ஏற்ற வேண்டும். இந்த நிலை உனக்கு

அருளப்படும் வரை ஞானோபதேசி என்று நீ வெளியில் வருவது சரியல்ல. இறைவனின் தூய முடுகுதல் உன் இதயத்தில் அமர்ந்ததும், 'தன்னை மறத்தல்' (மஜ்தூப்) நிலை உன் உள்ளத்தில் புனிதமாக சீர்பட்டதும், அந்தக் கணத்திலேயே படைப்புகளின் மீதுள்ள பிரேமையை அப்பாலாக்கிவிட்டு நீ இரட்சகனை சந்திப்பாய். "படைப்புகளனைத்தையும் அகற்றி விட்டு, அல்லாஹ்வுக்கே தன்னை அர்பணித்துக் கொண்டவனுக்குத் தான் இறைவனும் பிணை ஏற்றுக் கொள்கிறான்" என்பது நபி பெருமானாரின் அருள் போத மாகும். இகத்தின் பாசத்தில் திளைப்பவனை, இறைவனும் அதே மோகத்திலேயே ஆழ்த்தி விடுகிறான்.

வழக்கத்துக்கு மாற்றமாக (நீ மெய் வணக்கங்களை நிறைவேற்றாது இருக்கும்போதே, உனக்கு சௌபாக்கிய சம்பத்துக்கள் அளிக்கப்பட வேண்டுமென்ற) அற்புதத்தை அல்லாஹ் நிகழ்த்த வேண்டுமென்று ஆசைப்படுகிறாயே, அவ்வாறு நடக்காது. உன் தூய்மை பெற்ற இதயம் உட்பட, முழுக்க முழுக்க இறைவனுக்கே உன்னை அர்பணித்துவிட வேண்டும். பின்னர் தான் சௌபாக்கியங்கள் அனைத்துக்கும் நீ தகுதி பெற்றவனாவாய். "எனக்கல்லாமல் பிற படைப்புகளுக்காக அடியான் புரியும் வணக்கம் எனக்குத் தேவையில்லை. அது எனக்காகவல்ல, படைப்புகளுக்காக செய்யப்பட்டதுதான்" என்பது இறைவனின் எச்சரிக்கையாகும். சித்த சுத்தி பூமிக்குச் சமமானது. மெய் வணக்கம்தான் (அதன் மீது எழுப்பப்படும் மாளிகையின்) சுவர் போன்றது. சுவர் சரியில்லாவிடின் கட்டிடம் நிற்பதேது? மெய் வணக்கமான சுவர் பலமுள்ளதாக, அதில் உண்மையான பயபக்தி (தக்வா) என்ற சாந்து கலந்திருக்க வேண்டும்.

"நான்தான் சகல படைப்புகளையும் புறக்கணித்து விட்டு அல்லாஹ்வுக்கே அர்ப்பணமாகி விட்டேனே. பின் ஏன் அல்லாஹ் என் இம்மையின் தேவைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை?" என்று உங்களில் யாரேனும் கேட்கலாம். அதற்குக் காரணம், முழுத் தவறும் உன்னிடத்திலுள்ளது; நபிமார்களிடமல்ல. அவர்கள் (திருத் தூதர்கள்) தங்கள் கீழான மனத்தின் தீய தூண்டுதலுக்கு அடிமையாகி

எதையும் கூறவே மாட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டே கூறுகிறேன், இறைவனுக்கும் உனக்கும் இடையில், புனிதத் தொடர்பு அணுவளவேனுமில்லை. இம்மையிலும் அதன் பகட்டிலும் உன் மனத்தைப் பறிகொடுத்து விட்டு நிற்கிறாய். சத்தியமாக, நீ இரட்சகனுக்காகவே அர்ப்பணமாகி விட்டிருந்தால், அற்பப் பொருளைத் தேடுவதில் கூட (படைப்புகளை நாடிச் சிந்தனை செலுத்தாமல், உன்னை முழுக்கவும் இறை நாட்டம் என்ற காட்டில் புகுத்தியிருக்கலாம். அப்போதுதான் உன் ஏணியின் நுனி, இறைவனின் புனித முடுகுதல் என்ற திருவாசலைத் தொடும். அங்கே இம்மை, மறுமை இரண்டின் வனப்பையும்விட, மகாநேர்த்தியான ஒரு வதனத்தைத் தரிசிக்கும் பாக்கியம் உனக்குக் கிட்டும். பின் உனக்கும் அந்தத் திருமுகத்துக்கும் இடையேயுள்ள திசையும் அப்பாலாகும்.

நீ இறைவனின் சங்கல்பமென்ற காட்டிலிருக்கும்போதே இகத்தின் போக பாக்கியங்கள் உனக்கு மீண்டும் அருளப்பட்டு, அவற்றை நீ அனுபவிக்க அனுமதிக்கப்படும். உன் சேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, அவை உன் முன் கைதிகளைப் போன்று நிறுத்தப்படும். மகத்தான முடுகுதலையும், செல்வ சம்பத்துக்களையும் நீ ஏற்றுக் கொள்ளும்படி, அப்புனித நிலையே உனக்குச் சிபாரிசு செய்யும் அம்மேலான படிவத்தில், ஞானோதய (தக்தீர்) மென்ற கரங்கள் அச்சம்பத்துக்களைச் சேகரித்துக் கொள்ள நீளும். சன்மார்க்க நெறிமுறை என்ற தோள் அதற்குச் சகாயமளிக்கும். உன் தொடக்க நிலையிலேயே, கீழான மனத்தையும், அதன் பாசங்களையும், சுபாவச் சேட்டைகளையும் எதிர்த்து வெற்றி கொள்ளும் முன்பே, இம்மையின் மேல் மினுக்கில் மூழ்கிய நிலையிலேயே இரட்சகன் சந்நிதியை நெருங்கி விட்டேன். அவனுடைய மெய்நேசத்துக்கு அருகதை உடையவனாகி விட்டேன் என்று நீ எண்ணிக் கொள்வது, உன்னை நீயே நாசமாக்கிக் கொள்வதாகும்.

இம்மை உன்னை (அழித்து)த் துண்டாடிக் கொண்டிருக்கிறது என்ற ஞானோதயம், மெய்யாகவே உனக்கு உண்டாகியிருக்கு மாயின், அதை நீ விரும்பவே மாட்டாய். அப்போது அதுவும் உன்னை நோக்கி வரும். ஆனால், அதன் இனிமை (மெய்யாகவே) நஞ்சுதான். முதலில் அதில் சிறிது இனிப்புத் தட்டினாலும், அடுத்த கட்டத்தில் அது அப்பட்டமான கசப்பாகவே ஆகிவிடுகிறது. இகத்தின் மோகம் உன் தூய உள்ளத்தில் புகுந்து, அதன் களங்கமான அரவணைப்பில் நீ அகப்பட்டதும், அது விஷமாக மாறி, உன்னைக் கொன்றே தீர்த்துவிடும். முன்னோர்களான ஞான நாதர்கள், 'கல்வத்' எனும் தனியிடத்தே, ஏகாந்தத்தில் அமரும் முன்பே, மனத்துள் உதிக்கும் ஊசாட்டங்களை எல்லாம் நன்கு உணர்ந்து, அவற்றைக் களைந்து கொண்டனர். பின்னரே ஏகாந்த வணக்கங்களில் ஈடுபட்டனர். ஷைத்தானின் கீழான மனத்தின், இதயத்தின் ஊசாட்டங்களையே பகுத்துணர முடியாதவனே, பாவ காரியங்களிலும், சறுகுதலான கருமங்களிலும் உன்னைப் புகுத்தி உயர்வான மெய்யுறுதியில் இறை நிராகரிப்பையும், நல் அமல்களைப் புறக்கணிக்கும் தீய குணமான துரோகத்தையும் தூண்டுவதுதான் ஷைத்தானின் வேலையாகும். மெய் வணக்கத்தையும் நல் அமல்களையும் எவ்வாறு அதன் மூலங்களிலிருந்து பிரிக்க முடியும்!

மன்ஸூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் தூக்கிலிடப்படுமுன், ஒருவர் அவர்களை அணுகித் தமக்கு உபதேசம் புரியும்படி வேண்டினார். அப்போது, " உன் கீழான மனம் சம்பந்தமாகத் தான் நான் உபதேசிக்க முடியும். அதைக் கீழாக்கி, அதன் மீது நீ ஏறிச் சவாரி செய்! இல்லை யானால், அது உன் மீது ஏறிச் சவாரி செய்துவிடும்" என்று அவர்கள் உபதேசித்தார்கள். அரசர்களின் சகவாசத்தில் இருந்து, அவர்களோடு கூடிஉண்டு, குடித்து மதிமயங்கிக் கிடக்க உன் கீழான மனம் உன்னைத் தூண்டுமானால், முதலில் நீ பாழ் மண்டபங்களையும், பாலைவனங்களையும், கானகங்களையும் அண்டி வாழ்! அப்போது

தான் உன்னைப் பிடித்துள்ள அஞ்ஞானமென்ற மதி மயக்கம் தெளியும். பின்னர் நீயும் அரசர்களின் அந்தரங்க வாழ்க்கையைக் குறித்து பெருமையடித்துக் கொண்டலையமாட்டாய். அரசர்களின் சகவாசம் உன்னை நாசப்படுத்தி விடும். இதனால்தான், " அரசர்கள் ஒரே இடத்தில் தங்கி இருப்பதை விட, அவர்கள் பிரயாணத்திலிருப்பது விரும்பத்தக்கதாகும்" என்ற முதுமொழியும் வழங்கி வருகிறது.

இந்த இம்மை (இரட்சகன் சந்நிதிக்கு) பயணம் செய்து வைக்கும் வாகனம் போலாகும். சன்மார்க்க நெறிமுறைப் படியான வணக்கங்களை அதிகமாக நிறைவேற்றிச் சீர்பெற்ற பிறகே, ஏகாந்தத்தில் அமர வேண்டும். அதற்கும் (மகான்களின்) வழி காட்டலும், ஒத்தாசையும் அவசியமாகும். காரணமே புலப்படாத ஒரு மகத்தான சம்பவத்தைச் சந்தேகமின்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஞானோதய வாயிலில் நுழைந்து மெய் வணக்கம் (ஹுகும்) என்ற பாரமாத்திகப் பாதையில் நடந்துதான் ஆகவேண்டும்; சன்மார்க்க நெறிமுறை காட்டும் ஏவல் விலக்கல்களின்படி ஒழுகித் தான் ஆகவேண்டும். அவ்விதம் ஒழுகும்போதே நம்மீது (பரீட்சைக்காக) பல சோதனைகள் இறங்கும். அப்போதுதான் அடியான் ஞானம் பெற்றவனாயிருப்பது மிகமிக அவசியம். இன்றேல், " நான் இறைவனின் சத்திய வணக்கத்தில் மூழ்கி இருந்தும், என்னை அவன் அநியாயமாகக் சோதிக்கிறானே!" என்று அடியான் குறைபட நேரிட்டுவிடும். இதனால்தான் உனக்குச் சிறிதளவாவது ஞானோதய உணர்வு தேவைப்படுகிறது.

சன்மார்க்க நெறிமுறையின் (ஷரீஅத்தின்) மீது நின்றே மெய் வணக்கம் புரியும் வணக்கவாளிகள், தத்தம் சீர்பாட்டுக்கு மட்டுமே தயாராகிக் கொள்கின்றனர். ஞானம் மேலானவர்களோ, பிறரையும் சீர்செய்யும் நிலையை அடைகின்றனர். சன்மார்க்க நெறிமுறையும், மெய்த்துறவியும் ஒன்றாக இணைந்திருப்பர். மெய்ஞ்ஞானமோ (இல்ம லதுன்னியோ) மெய்நேசர் (சித்தகீன்)களிடமும், மெய்பக்தர்

(மஹ்பூப்)களிடமும், இறைவனின் சகவாச சித்தி பிராப்தமான பாக்கியசாலிகளிடமும் தஞ்சம் புகும். சன்மார்க்க நெறிமுறையும், புனிதத் துறவு நிலையும் பிணைந்துவிடும். இது இதற்குத் தோழனாயும், அது அதற்கு மந்திரியாயும் இலங்கும். நடிப்புத் துறவி, உஷ்ணம் அதிகரித்தவனுக்கு ஒப்பானவான். மெய் பக்தர்களோ, உண்மையாகவே ஜுரம் பீடிக்கப்பட்டவர்களைப் போன்றிருப்பார்கள். நடிப்புத் துறவி, வேண்டுமென்றே சிற்றின்ப நிகழ்ச்சிகளை ஒதுக்கி நோன்பிருப்பதால், அவன் ஆத்மாவை கூடு தாக்குகிறது. மெய்த் துறவிகளோ தங்கள் ஆசாபாச, சிற்றின்பங்களைச் சதாவும் இயற்கையாகவே ஒதுக்கிவிட்டதால், சாட்சாத் தெய்வீக நோயாளிகளாகவே விளங்குகின்றனர்; அவர்கள் விஷயத்தில் இந்த இம்மையே செத்துப் போய்விட்டது. அவர்கள் மெய் பொருளின் புனித விரிப்பில் நீட்டிக் கிடக்கும் நோயாளிகளாகவே மகிமை பெற்றுள்ளனர்.

எதிர்பாராதவிதமாக இப்பரம ஞானிகள் மகத்தான துறவற மாளிகையின் திருவாயிலில், வகை வகையான அறுசுவை உண்டிகளையும், உடைதாங்கி முளைகளில் விதவிதமான அலங்கார உடைகளையும், கடாட்சமாக அருளப் பெறுகின்றனர். இவர்களுக்குப் பிராப்தமான சகலவித சம்பத்துக்களையும் புனிதமாக ருசிக்காத வரையில் இவர்கள் இம்மையை விட்டும் அப்பால் அகற்றப்படுவதில்லை. இறை நிராகரிப்பாளர்களும் இரட்சகனின் பேற்றினை மறந்துவிட்ட துரோகிகளும், இம்மையின் சம்பத்துக் களைத்தான் சேகரிக்கிறார்கள் என்றால், அதிலும் அவர்கள் உறுதியைக் கைக்கொள்வதில்லை; பேராசையால் குருடர்களைப் போன்று இடறிவிழுந்து, உண்ண ஆகாத (ஹராமான) தையும் தின்று தீர்க்கின்றனர். (ஆண்டகையவர்கள் தங்களையே சுட்டிக்காட்டி) இந்த ஏழை அடியானுக்குத் தன்னைப் பனாவாக்கி கொண்டபின் மீண்டும், புத்துயிர் பெற்றுவிட்ட பாக்கியம் கடாட்சமாகியுள்ளது. மறுபடியும் படைக்கப்பட்டுள்ள பேற்றினை நான் அடைந்துள்ளேன். என்

உடலிலுள்ள தசை, துண்டு துண்டாகிச் சிதறி, எலும்புகள் பலமிழந்து, தோல் சுருங்கியதால், கீழான மனம் தேடும் இம்மையின் இன்பங்களே உருத் தெரியாமல் கரைந்து விட்டன. இச்சா பாசங்களோ, என்னைப் புறக்கணித்து ஓடிவிட்டன. நான் அவற்றை விட்டுப் பரிசுத்தமாகி, என் ஆத்ம ஆவேசங்கள் அடக்கப்பட்டு, என் புனித இதயத்துள் தூய்மை யான சீவனும், ஞானோதயமும், ஏகத்துவமும் மகத்தாக நிலைபெற்று விட்டன.

சீர்பெற்ற இதயத்துக்குத்தான் மகத்தான (உன்னத) ஆட்சி சித்தியாகும். இறைவனே அந்தத் தூய இதயத்துக்குப் பாதுகாவலனாகி, அதை இயக்கி வருகிறான். மரணத்துக்கு(சீர்பாட்டுக்கு)ப் பின்னரே புனித இதயத்துள் மாண்புமிக்க ஜீவன் (ரூஹ்) அருளப்படுகிறது. புனித இதயத்திலுள்ள பாசங்களும், இன்பங்களும் தெய்வீகமாகச் சாகடிக்கப்படுவதுவே யதார்த்தமான மரணத்துக்கு முன் ஏற்படும் மெய்ஞ்ஞான மரணமாகும். இம்மையின் போகங்களை அதற்குக் காட்டிய பின்னர், அதை மரணிக்க வைத்து, அதற்கு இறைவன் மீண்டும் ஜீவனளித்துக் கருணை புரிகிறான். அந்தப் புனிதமான இதயம் தனது திவ்விய சமூகத்தில் மரணித்துக் கிடக்கும் நிலையில், அல்லாஹ் தன் மகத்தான அகமியங்களையும், மர்மமான தத்து வார்த்தங்களையும், படைபட்டாளங்களின் மதிக்கவொண்ணாக் கூட்டங் களையும் அது தரிசிக்குமாறு செய்கிறான்.

இறைவன் தன்னுடைய ஆட்சியைப் புனித இதயம் தரிசித்துச் சித்திபெற்ற பின்னர், அதன் ஜீவனை உடலோடும், உடலைச் சீர்பெற்ற உள்ளத்தோடும் இணைத்து, இம்மையில் அதற்கு விதிக்கப்பட்டுள்ள பேற்றினை அது ருசிக்கச் செய்கிறான். இவ்வாறு அந்த இதயம் சிறப்படையாதிருக்கும்போது, கிழக்கு, மேற்குக்கு இடையேயுள்ள அவ்வளவு சௌபாக்கியங்களையும், அதன் முன் சமர்ப்பித்தாலும், அது அவைகளில் அர்ப்பமானதைக்கூட அநுபவிக்க இசையாது. பரமனின் மகத்தான நாட்டம், மர்மம் நிறைந்ததாகும். இறைவ னுடைய தூதர்கள், இறை நேசர்கள், உன்னத மகான்கள் ஆகியோரின்

இச்சாபாசங்களுக்கும், அவர்களுக்கும் இடையில் ('மஷிய்யத்' என்ற) இறை நாட்டம் திரையாகச் சமைந்து விடுகிறது. அதன் மகிமையால் அவர்களின் இதயங்களில் அணுவளவு இச்சாபாசமும், சுயநலமும் கூடத் தங்குவதில்லை. அவர்களின் இதயங்கள் சாட்சாத் கருணையாளனான அல்லாஹ்வுக்காகவே பரிபூரணப் புனிதத்துடன் திகழ்கின்றன. இவ்வாறான சம்பூர்ண 'சுத்தி' என்ற நிலை சித்தியான பின்னரே, அவர்களுக்கான வரப்பிரசாதங்கள் ('மக்ஸும்' கள்) அபரிமிதமாக பொழியப்படுகின்றன. அவைகளைப் பரிபூரணமாக ருசிக்கவே என்றும் அழிவில்லா சாயுச்சிய ஜீவன் (ஹயாத்த உஜூது) அவர்களுக்கு அருளப்படுகிறது.

ஈஸா நபி (அலை) அவர்களோ, இவ்வுலகில் இருந்தவரை மணமுடித்துக் கொள்ளவுமில்லை; தங்களுக்காக இம்மையின் செல்வத்தைச் சிறிதும் தேடவுமில்லை. ஆனால் இறுதியில் இறைவன், அவர்களை மீண்டும் இவ்வுலகில் இறக்கி, உயர்குலப் பெண்மணி ஒருத்தியை அவர்கள் மணமுடிக்கச் செய்து, அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறக்கச் செய்வான். இதுபோன்றே, சான்றோர்களான ஞானமகான்கள், தங்கள் துறவு நிலையைச் சம்பூர்ணமாக உறுதிப் படுத்திக் கொண்ட பின்னரே, உண்ணவும், குடிக்கவும், படைப்பு களுடன் தங்களுக்குப் பிராப்தமாகியுள்ள சௌபாக்கியங்களை ருசிக்கவும் விரும்புவார்கள். அந்த மகாத்மாக்கள் இச்சித்த ஒரு பொருளில் (உண்ணும் விசயத்தில்) ஐயமேற்படும்போது, அதை (உண்ணாமல்) மகத்தான வகையில் தியாகம் செய்து விட்டு, அதைக் குறித்து மெய்விளக்கம் உதயமான பிறகே அது ஆகுமானதாயின் எடுத்துக் கொள்வார்கள். மாண்புமிக்க மெய்த்துறவிகள் உயர்ந்த உணவையும், குளிர்ந்த பானத்தையும்கூட(ப் பேணுதல் காரணமாக)ப் பன்றியின் மாமிசமாகவும், மதுவாகவும் கருதி ஒதுக்கி விடுகின்றனர். நடிப்புத் துறவிகள் பலர், தங்கள் (புனிதமற்ற) துறவறத்தால், பரம் பொருளின் தரிசன பாக்கியமற்றுத் தடுக்கப்பட்டவர்களாய் உள்ளனர். ஞானிகளென்போர் பலர் தங்களின் (அஞ்)ஞான மமதையால், இரட்சகனின் தரிசனப் பாக்கியமற்று

அப்பாலாகி விட்டவர்களாயுள்ளனர். ஆனால் இந்த அவலநிலைக்குள் ளானவர்களோ சிலர் தான். இன்றேல், வல்லானின் புனிதக் கார்மானத்தால் அனைவருமே சித்தி பெற்றவர்களாகி விடுவரன்றோ!

இம்மையின் பாசத்தில் உழன்று கொண்டிருப்போரின் சகவாசம், நீ இறைவனை அணுகவிடாமல் உன்னை அப்பாலாக்கி விடும். மெய் வணக்கத்தில் ஈடுபடுவது கொண்டு, மறுமையின் ஈடேற்றத்துக்கான பாதையில் முனைவதே உனக்கு நல்லதாகும். அந்தப் படிவத்தில் உனக்குத் இறை சங்கல்பமான அருட்கொடைகள் வலிய வலிய உன் மீது சொரியப்படும் அவைகள் செய்தால், தவாபு கிடைக்கும்படியான இஷ்டபூர்வமான தொழுகை போன்ற (ருக்சத்தான) வணக்கங்களை, மகத்தாக நிறைவேற்ற உனக்கு ஊக்கமூட்டும். அதிலும் நீ நிறைவு பெற்ற பின்னர், அந்த (ருக்சத்தான) வணக்கங்களையும், கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய (அஜீமத்தான) வணக்கங்களைப் போன்றே, தூய்மையுடன் நிறைவேற்றவும் அவை உத்தரவிடும். உன் சர்வ அமல்களும், உனக்குக் கட்டாயமானவையாக ஆகிவிட்ட நிலையில், இறைவனின் மெய்யன்பு (ஹுப்புல்லாஹ்) உன் இதயத்தில் குடிகொள்ளும். மேலும் மேலும் இப்புனிதப் படிவத்திலேயே அமர்ந்து விடின், அல்லாஹ்வே உன்னை நேசிக்கும் (மஹ்பூபிய்யத்) நிலையும் இறைத் தோழமை (விலாயத்) பதவியும் உனக்குப் பிராப்தமாகும்.

- 24 -

மெய்யாகவே நீ ஞானம் பெற்றவன்தானா? அவ்வாறாயின், நீ உன்னையே நரகவாதிதான் என்று தீர்ப்பளித்துச் சோதனை செய்! அந்தப் புனிதத் தீர்ப்பின் மகிமை உன்னை உயர்வான மெய் வணக்கங்களில் ஈடுபடத் தூண்டும். மெய்யாகவே நீ சுவர்க்க வாதியாகவே இருந்து விட்டாலோ, அந்தப் புண்ணியத்துக்கு ஆளானதற்காக அல்லாஹ்வுக்கே நன்றி தெரிவித்துக் கொண்டிரு! (உன் ஜீவனோ பாயத்துக்காக) நீ புறப்படும் போதே யுத்த களத்துக்குப் போவதாயும், மீண்டும் இருப்பிடம் திரும்பும் பாக்கியமிருக்குமோ என்னவோ என்றும் எண்ணிக் கொண்டு புறப்படு. ஜீவனோபாயத்துக்

காக நீ புரியும் தொழில்களில் கூட, இறைவன் உனக்கு ஆத்ம சோதனைகளையே வைத்திருக்கிறான். ஏனெனில், உனக்கு உழைப்பின் சிரமத்தைக் கூடத் தராமல், உணவு அளித்துக் காக்க அந்த வல்லவனால் முடியும் என்பதையும் நீ முழுமையாக நம்பு.

உத்தமமான மெய்யுறுதியுடையவன், சில சமயங்களில் மலைக்கும், சில சமயங்களில் விதிவசக் காற்றினால் நெடுகிலும் புரட்டப்படும் இறகுக்கும் சமமாவான். இறைவனின் சோதனையான சஞ்சலங்களும், துயரங்களும் உன் மீது சாரும்போது, அசையாத மலைபோன்று இருந்துவிடு. அவனுடைய திவ்விய சகவாசம் (ஜக்கியம்) அருளப்படும் போது, அவனுடைய விதிப்பு, கட்டளை, திருவுளச்சித்தம் போன்ற காற்றுகளால் நீ எப்படிப் புரட்டப்பட்டாலும், பட்சிகளின் இறகு போன்று பரிபூரணமாக, அதற்கு இடங்கொடுத்து விடு. பிரியநேசனே, 'நபி'ப் பட்டம் தான் நமக்கில்லையே, 'விலாயத்' எனும் இறை நேசத் தோழமையின் மகத்தான பாக்கியத்தையாவது நாம் இழந்து விடாமலிருக்க வேண்டாமா? படைப்புகளின் பாசத்தில் உழன்று கொண்டிருக்கும் நிலையில், சர்வ சக்தனான இறைவனின் புனித சகவாசத்தை அடையும் பாக்கியம் பெறலாமென்பது முடியாத காரியம். கண்ணிழந்த குருடன் போலிருக்கிறாய் நீ. இனித் தாகமே எடுக்காதா உனக்கு? பருகும் தேவையற்றவன் போலிருக்கிறாயே! உணர்ச்சியற்றுப் போன பிணம் போலிருக்கிறாயே! (இறைவனின்) தரிசனப் பாக்கியத்தை இழந்தும், அவ்வாறு தடுக்கப்பட்டுள்ளோம் என்பதைக்கூட உணர்ந்து கொள்ளாத அறிவிலிகளே. அந்தோ, கைசேதம்!

புனிதமான மெய்வணக்கங்களில் நீ ஈடுபடுவதுமில்லை; மெய்வணக்கவாளிகளுக்கு உபகாரம் புரிவதுமில்லை. சாட்சாத் தீமையே உருவெடுத்தவனாயிருந்து கொண்டே, உன்னை இறை நேசனாக நீ கருதிக் கொண்டிருக்கிறாயே! மறுமையை (அதன் மாண்பை உணராமல்) விட்டு விட்டு, இம்மையின் கோப தாபங்களையும், உள்ளத்தின் தூய்மையை நாடாமல், வெளிக்

கோலத்தின் அழகை மட்டும் நேசிக்கிறாய். உன் ஆட்சியும், உன் அமோக வாழ்வும், உன் நேசர் (அரசர்)களும், உனக்குப் பயன்பட மாட்டார்கள். அண்மையிலேயே மரணம் உன்னை அணைத்துக் கொள்ளும். மரணத்துக்குப் பின் (மறுமையில்) நீ பழிக்கப்பட்ட வனாயும், கண்ணியமற்றவனாயும் ஆகிவிடுவாய். கண்ணியவானாயிருக்க விரும்புபவனுக்கு, இறைவனும், அவன் திருத்தூதரும், ஞான மகான்களான பெரியோர்களும், அருளும் கண்ணியமே. மிக மிக உன்னதமானதாகும். இம்மை ஒரு கடலாயும், சன்மார்க்க நெறிமுறை அதில் ஒரு கப்பல் போன்றும், இறைப் பேரின்பம் அந்தக் கப்பலின் மாலுமி போன்றுமிருக்கின்றன!

எனவே, சன்மார்க்க நெறிமுறைப்படி (ஷரீஅத்படி) நடக்காதவன், இம்மை என்ற நாசகாரக் கடலில் வீழ்ந்து மூழ்கிச் சாவான். சன்மார்க்க நெறிமுறை என்ற கப்பலில் முதலாக இடம் பிடித்துக் கொண்டவனையே இறைவன் தனக்குப் பிரதிநிதியாக்கிக் கப்பலையும் சாமான்களுடன் அவனிடம் ஒப்படைப்பான். இவ்வாறே தான் இம்மையின் பாசங்களை ஒதுக்கிவிட்டு, அருள்ஞான போதங்களைக் கற்பதிலும், சோதனைகளிடையில் பொறுமையாய் இருப்பதிலும், சன்மார்க்கக் கடமைகளை ஒழுங்காகப் பேணுவதிலும், கருத்துக் காட்டியவர்களும், இறைவன் அருளுக்குப் பாத்திரமாகின்றனர். இந்தப் புனிதப் படிவத்தில் தான், இறைவனின் பேரானந்தப் பேறுகளும், ஞானோதய ஒளியும், அதற்கான மகிமை மிக்க 'கில்அத்' (இறைநேசர்கள் அணியும் புனித ஆடை)தும் அவர்களுக்குக் கிட்டுகின்றன. உன்னுடையது மற்றவர்களிடம் சென்றுவிட்டால், அதைச் சமன் செய்ய சர்வசக்தனான இறைவனால் முடியும். எனவே, உன்னிடமிருந்து ஏதேனும் பொருள்கள் போய்விடுமாயின், அதற்காக விசனிக்காதே! தானே அருளிய, தன் ஆளுகையினுள்ள சம்பத்துக்களைத் தான் விரும்பிய விதம் ஆட்டிப் படைத்து நிர்வகிக்க, அவனுக்குச் சர்வ அதிகாரமும் உண்டு. அடிமையும், அடிமையின்

எல்லா வகைச் செல்வங்களும் எசமானனுக்குத்தானே சொந்தம்! உன்டமிருந்து எசமானன் எடுத்துக் கொண்டதை, நாளைக்கு நீ அவசியம் திரும்பப் பெற்றுக் கொள்வாய்.

"ஏ, மெய்விசுவாசியே, உன் மகத்தான 'ஒளி' என் கோரச் சுவாலையைத் தணிக்கிறது. ஆகையால், விரைவில் என்னைக் கடந்து அப்பால் சென்றுவிடு!" என்று மெய்யுறுதி கொண்டவனைப் பார்த்து, நரகம் ஓலமிடும். இவ்வாறே மெய்யுறுதி வலுப்பட்டு, இதயம் இரட்சகனின் முடுகுதலில் ஐக்கியமாகும் போது, கீழான மனத்தின் போராட்டங்கள் எனும் வியாகூல நெருப்புக் குறுக்கிடும். அந்த நிலையில் அடியானின் தூய உள்ளத்தில் (பாதினில்) எஞ்சி இருக்கும் இகத்தின் பாசமும், படைப்புகளிடமுள்ள மோகமும், அந்தப் போராட்டம் என்ற நெருப்பால் பசுப்மாகிவிடும். அவ்வாறு மெய்யுறுதி சித்தியானவர்களைப் பார்த்துத்தான், "உன் புனித ஜோதி என் நெருப்பின் சுவாலையைத் தணித்துவிடுகிறது. நீ விரைந்து என்னை தாண்டிச் சென்றுவிடு!" என்று நரகம் ஓலமிடுகிறது. (அதனால்தான்) உலகத்தின் கோட்டை, கொத்தளங்களையெல்லாம் இடித்துத் தகர்த்து விடும் ஆயுதங்கள் கூட, மெய்யுறுதி கொண்ட அவர்களை எதுவும் செய்துவிட முடியாது. எனவே, நீயும் இம்மை, மறுமையின் நெருப்புக்கூட உன்னை எரித்து விடாத வகைக்கான உன்னதமான மெய்வணக்கங்களைப் புரிந்து சீர்படுவாயாக.

- 25 -

" இவர்கள் தாம் ஆத்மஞான வைத்தியர்கள்" என்று இறைவனே போற்றிப் புகழும் நல்லடியார்களும் இருக்கின்றனர். இறைவன் அவர்களைப் பிணியணுகாமல் சீவிக்க வைத்து, சுகவாசிகளாகவே மரணிக்கச் செய்து,சுவர்க்கத்திலும் புகச் செய்கிறான். அல்லாஹ்வைச் சம்பூர்ணமாக அறிந்த அவர்கள், இம்மையின் பாசங்களையும், சிற்றின்பங்களையும் அப்பாலாக்கிக் கொள்கின்றனர். எனினும் இரட்சகனின் வரப்பிரசாதமான இம்மையின் இன்பங்களைச் சிறிதே ருசிக்கவும், அவன் அவர்களை வற்புறுத்துகிறான். அவர்களோ வீடு

கட்டுவதற்கு முன்பே, அண்டை வீட்டானைத் தேடிக் கொண்டதால், மகிமை பெற்றவனைப் போல, அயல்வீட்டானை (அல்லாஹ்வின் துணையை) அடையும் பாக்கியம் பெற்ற புண்ணிய சீலர்களாவர். அதன் மகிமையால் அவர்களுக்குப் புனித வீடும், இறைவனின் தூய்மையான நல்லுதவியும் அருளப்படுகின்றன. "இன்றிலிருந்து நீங்கள் நம் திவ்விய சமூகத்தில் நம்பிக்கைக்குரிய நேசர்களாய் அமரும் பாக்கியம் பெற்றீர்கள்" என்ற அவனுடைய சுபச் செய்தியையும் அவர்கள் கேட்கிறார்கள்.

அல்லாஹ்வின் அருள் - ஞானோதயம் கிட்டியுள்ள உத்தம மகான்கள், அவனது ஆளுகையில் எந்தப் பொருளின் மீதும் கண்களையோ, கரங்களையோ நீளவிடமாட்டார்கள். சகலத்தையும் கணவனுக்கே அர்பணித்துவிட்ட ஒருமணப் பெண் போன்று, அவர்கள் இறைவனுக்கே தம்மைத் தத்தமாக்கிக் கொண்டுள்ளார்கள். அவனின் மகிமையுள்ள முடுகுதலே அவர்களுக்கு ஊணும், பானமுமாய் விடுகிறது. அவர்களுக்கான சகல போகங்களும் இறைவனின் முடுகுதலிலேயே சித்தியாகியுள்ளன. கீழான மனம் (நப்ஸு) தூய்மைபெற்று இறைவனிடம் புனிதமான நல்லிணக்கம் கொண்டிருப்பதை நிருபித்த பின்னர், யூஸுப் நபிக்குச் சிறைச் சாலையில் சாக்கி தோழனாய் அமைந்தது போல், அதற்குத் தூய இதயம் நேயனாய் அமையும். பிறகே, அது சிறையிலிருந்து விடுதலையாகிச் சிறைக் கூட்டாளியான, கீழான மனத்தை (நப்ஸை)யும் சீர்செய்து, அதில் அழகு, மேன்மை, ஒழுக்கம் யாவையும் உண்டாக்கும். அதனால் அது இரட்சகனின் திவ்விய சந்நிதி சென்று,' கில்அத்' என்ற புனித உடை பெற்று, 'இன்றிலிருந்து நம் சமூகத்தில் நீ நம்பிக்கைக்குரிய அடியானாவாய்" என்ற இறை சோபனத்தையும் கேட்கும் பேறு பெறும். பின்னர் இறைவன் கருணையால் அந்த மனமும் படைப்புகளின் பக்கம் திரும்பாமலே சீர்பட்டு நிற்கும்.

பின்னர் ஆண்டகையவர்கள் ஒரு சப்தமிட்டுக் கூவி, "யா அல்லாஹ்! அன்பன் பார்வையில் படாமல்

மறைந்திருக்கிறான். உரையாடவே வந்திருக்கும் இவனை வேறு பராக்கில் திருப்பி விடாதே!" என்று கூறிவிட்டு, மேலும் பேசினார்கள்:)

மெய்யடியார்களின் புனித முடுகுதல் மிகவும் நீடித்து விட்ட பிறகே, அவர்களின் (இறைஞானப் பாதையின்) யாத்திரையில் ஏற்பட்ட அசதியும், களைப்பும் அகலும்; தசைகள் ஊட்டமாகி, எலும்புகள் வலுபெற்று,மனக் குழப்பமும் நீங்கும்; வாழ்க்கையில் பேரின்ப ருசியை நுகரும் உயர்வான சாந்தியும் பிராப்தமாகும்; மேலான அப்படிவத்தில் தான் பரமனின் திவ்விய சந்நிதியிலமர்ந்து, ரகசியம் பேசும் கண்ணியத்தையும் பெறுகின்றனர்; இறைவன் தன் ராச்சியங்களையும் மக்களையும் ஆட்சி செய்யும் அதிகாரத்தை அவர்களிடம் ஒப்படைத்து, கடல்களுக்கும் அவர்களை அனுப்பி, மூழ்கித் தவிப்பவர்களை அவர்கள் மூலம் காப்பாற்றிக் கரை சேர்க்கிறான். காடுகளிலும் மிருகங்களின் வாயில் சிக்கி விட்டவர்களை, மகான்களைக் கொண்டே விடுவித்துக் கருணை புரிகிறான். அவர்கள் தங்கள் சுபாவச் செயல்களைக் களைந்து தூய்மையானதும், அவர்களைத் தன் பிரதிநிதியாக்கிப் பொறுப்புகளை ஏற்று நடத்தும் சீலர்களாகச் சமைக்கிறான். நபிமார்கள், தீர்க்க தரிசிகளின் புனித இதயங்களுக்குக் 'கில்அத்' என்ற உடையை அணிவித்ததைப் போன்றே இச்சிறந்த நாதர்களின் தூய இதயங் களுக்கும் 'கில்அத்' தை அணிவித்து, அவர்களுக்கு ஒளலியாக்கள், அப்தால்கள் என்ற பட்டங்களையும் சூட்டுகிறான்.

ஏ பாசாரிகளே! இறைவனோடு மகத்தாக அகமிய சம்பாசணை புரியும் மகான்களும், ஞானோதயம் பெற்ற உத்தம சீலர்களும், இத்திருச் சபையில் (உங்களுக்குப் புலப்படாமல்) அமர்ந்திருக்கின்றனர். (நீங்கள் பணிவுடன் ஒழுங்காக அமருங்கள்.)

(ஆண்டகையவர்களின் ஞானோபதேசத் திருச் சபையில் இறை நேசர்களும், அமரர்களும் வருகை தந்து ஞானோப தேசம் பெறுவதுண்டு. அவர்கள் கூடியிருக்கும் மக்களின் புறக்

கண்களுக்குப் புலப்பட மாட்டார்கள். இதைத்தான் ஆண்டகையவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்தச் சமயம் சபையில் ஒருவர் எழுந்து, "கட்டாயமில்லாத வணக்கம் எப்போது கட்டாயமாக்கப்படும்?" என்று வினவினார். அதற்குப் பதில் சொல்லத் தொடங்கிய ஆண்டகையவர்கள் மேலும் பேசியதாவது:)

இறைவன் உனக்குக் கருணைபுரிய நாடிவிட்டால், அதற்காக நீ பண்பட்டு விட்டதும், உனக்கு 'விசாலம்' (பஸ்த்) என்ற மகிமை சித்தியாகும். அப்போது கட்டாயமில்லாத மனப்பூர்வமான நல்அமல்கள் அனைத்தையும் நீ கட்டாய வணக்கம் (அஜீமத்) போன்றே கடைப்பிடிப்பாய். அந்த நிலையில் கட்டாயமான வணக்கங்கள் உன் சுபாவத்திலேயே ஊறிப்போன புனிதப் பண்பாகிவிடும். இவ்வாறு அதில் பரிபூரணமாகிவிட்டால், அப்போது உன்னை இறைவன் தன் கருணையும், கடாட்சமும் நிறைந்த மாளிகைக்குள் அழைத்துச் செல்வான். அங்கே நீ சாட்சாத் மெய்வணக்கத்தின் சின்னமாகவே பிரகாசிப்பாய். அந்தப் படிவத்தில் கட்டாயம், மனப் பூர்வம் (பர்ளு, நபில்) என்ற பாகுபாடே உனக்குத் தோன்றாது. கண்ணியமிக்க விருந்தாளி ஒருவருக்கு எதிரில், மேலான உணவுகள் வைக்கப்பட்டதும், அதில் சிறிது எடுத்து உண்டுவிட்டு, வேறொரு வீட்டுக்குச் சென்று, அங்கே அளிக்கப்படும் மேலான உணவிலும், உண்ணும் பாக்கியம் பெறுவாரே, அவரைப் போன்றேதான் நீயும் அதிர்ஷ்டசாலியாய்த் திகழ்வாய்.

'கட்டாயம்' என்ற சலுகை, கட்டாய மெய்வணக்கங்களில் பூணிப்புக் காட்டாத சோம்பேறிகளுக்குத்தான். நிறைவு பெற்ற மெய்விசுவாசிகளுக்கோ, சர்வ நல் அமல்களும் கட்டாயமானவை யாகவே திகழும். அழிந்து நாசமாக வரம் பெற்றோர்களே, இம்மையை ஆளும் ஆசை கொள்வர். சென்ற காலத்தில், என் புனிதத்துக்காகவே பூமியின்மீது ஏகாந்தத்தில் அமர்ந்திருந்தேன். இப்போது அதற்கு மாற்றமாக(ப் படைப்புகளைச் சீர்படுத்தவே

பகிரங்கமாக மக்களிடையே மேடைமீது அமர்ந்து) இருக்கிறேன். எவர் தாட்சண்யத்துக்காகவும், தங்களின் புனிதமான படிவங்களை மறைத்து வைக்காமல், மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தும் பாக்கியத்துக்கு அருகதை பெற்றுள்ள மகா ஞானநாதர்களின் கூட்டத்தில் நானுமொருவன். இதனால்தான் என் மெய்வணக்கங்களை யாருடைய முகத்துதிக்காகவும் நிகழ்த்தவேண்டுமென்று நான் நினைப்பதுகூட இல்லை.

இம்மையின் சுகபோகங்களைப் புறக்கணிக்கும்போதும், அவைகளை ஏற்கும் சமயத்திலுந்தான், உன் புனிதமான ஒழுக்கத்தையும், சிரேட்டமான பண்பையும் நீரூபிக்க வேண்டும். உன்னுள் அஞ்ஞானத்தை வைத்துக்கொண்டு ஏகாந்தவணக்கத்தில் அமராதே! நீ ஒழுக்க சீலனாய்ச் சீர்படாத நிலையில், தனிமையில் அமராதே! தொடக்கத்தில் ஞானத்தெளிவு பெற்றுக்கொண்டு, பிறகே ஏகாந்தவணக்கத்தில் நுழையவேண்டும். (அந்தோ பரிதாபம்), நீ எப்போதாவது ஞான போத திருச்சபைகளில் அமர்ந்ததுண்டா? சந்தேகமே! (அப்படியானால் பின் ஏன்) ஒரு நல்ல அமலைக்கூடப் புரிவதில்லை? எண்ணற்ற சிறந்த மகான்கள், ஏதாவதொரு குருமகானை (ஷைகை) அணுகி, ஞானபோதம் பெற்று, அவைகளைப் புனிதமாகக் கடைப்பிடிப்பதையே தங்களின் மறுமைக்கான சாதனமாய்ச் செய்து கொள்கின்றனர். நீயோ, படைப்புகள் பலவற்றின் மகத்துவங்களை உணரும் பாக்கியம் பெற்றிருக்கிறாய்; அதிசயங்களையும் கண்களால் தரிசித்திருக்கிறாய்; ஞானபோத திருச்சபைகளிலும், சில சமயங்களில் அமர்ந்துமிருக்கிறாய். இருந்துதானென்ன, நீ (முன்னிருந்த நிலைமாறி) ஒரு அடிகூடப் புனிதப் பாதையில் முன்னேறவில்லையே! நீ (இத்தகைய திருச்சபைகளில்) வராமல், இருந்த இடத்திலேயே இருந்துவிடுவதே உனக்கு நலமானதாகும்.

மேலும், நீ இத்தகைய திருச்சபைகளுக்கு வரவரப் பின்னுக்குத்தான் போய்கொண்டிருக்கிறாய். "ஒரே விதமாகச் சிறிதும்

ஞானவழியில் முன்னேறாமல்) இரண்டு நாட்களைக் கழித்தவனே பெரும் நஷ்டவாளியாவான்" என்பது நபி பெருமானாரின் அருள் வாக்காகும். ஞானப் பிரகாசம் பெற்று விழித்தெழு! இரட்சகன் உன் மீது கருணை புரியட்டும். ஒரு வினாடி நேரம் ஆடும் விளையாட்டுப் போன்றதே இம்மை. ஆகவே, அந்தக் கேளிக்கையில் ஆழ்ந்துவிடாதே! இறைவனின் மெய்நேசர்களின் மகிமையைப் பார்! அவர்களின் பக்தியும், பேணுதலுமே அவர்களை மெலியவைத்து விடுகின்றன. தங்கள் அவயவங்கள் (பாவத்தில் சென்றுவிடாமல்) அவர்கள் பேணிக் கொள்கின்றனர். இறை நாட்டத்துக்கு எதிராக, இரட்சகனின் திருப் பொருத்தமின்றி, அவர்கள் தங்கள் கரங்களையோ, கால்களையோ அசைப்பதுமில்லை. எனவே அவர்களின் புனித இதயங்களில் படைப்புகளின் 'பாசப்புறக்கணிப்பு' என்ற மயக்கம் பரவி விடுவதால் அவர்கள் ஒரே இடத்தில் அமர்ந்துவிடும் பாக்கியத்தை எய்துகின்றனர்.

கருணையாளனின் வரப்பிரசாதமான 'இம்மையின் பாகங்கள்' (மக்ஸும்) அவர்களுக்குக் கடாட்சமாக வேண்டிய தருணம் வந்ததும், உணவளிக்க வேண்டியவர்கள் உணவளிக்க வந்து விடுகின்றனர். முன்னால் சென்றுவிட்ட, அல்லது இனி வரப்போகும் எவரிடமும், எனக்கு எவ்விதக் குறையுமில்லை. உங்கள் சன்மார்க்கத்தின் சிரசைத் தூய்மையாகப் பேணிக் கொள்ளுங்கள். இன்றேல் (பைஅத்துச் செய்துஃ சீடராவதில்) யாதும் பயனில்லை. என்னுடன் நீங்கள் கொண்டிருக்கும்; பிணைப்பையும், ஞானமார்க்கத் தொடர்பையும், கத்தரித்துக் கொள்ளுங்கள். அஞ்ஞானிகளாய்த் திரியாதீர்கள். வீட்டில் அமர்ந்து கொண்டே (அர்த்தமற்ற ஞானச் சொற்களை கூறிக் கொண்டிருப்பதின் மூலம்) பிதற்றிக் காலம் போக்கும் அறிவிலிகளாக வேண்டாம்!

நான் ஞானாமுத (மருந்து)களை அருந்தி, அதனால் சீர்பட்டுள்ளேன். பரிசோதனை செய்து நல்ல மருந்துகளையே உனக்கும் சிபாரிசு செய்கிறேன். நீயே உழைத்து ஆகுமான வழியில்

சேர்த்த செல்வங்களும், சந்தான பாக்கியங்களுங்கூட, உனக்குப் பயன்படாத அந்த ஒரு (கியாமத்) நாளை நினைவு கூர்ந்து அச்சத்துடன் நடந்து கொள்!

"எங்கள் சந்தான பாக்கியங்களும் சகல செல்வங்களும் மறுமையில் எங்களுக்கு உதவும்" என்று முற்கால அரபுகள் நம்பி வந்தது போல் நீயும் நம்புகிறாயா? "செல்வங்களும், சந்தான பாக்கியங்களும் பயன்தராத அந்த நாளுக்கு அஞ்சுங்கள்- இதயம் சீர்பட்டு வந்த மனிதனைத் தவிர" என்பது இறைவனின் எச்சரிக்கையாகும். தன் இதயத்தால் சகல செல்வங்களையும், சந்தான பாக்கியங்களையும் நேசிக்காத ஒருவன், அவைகளின் பாசங்களையும் தன் இதயத்தில் அமர்த்தாத ஒருவன்."நான் செல்வங்களையும், சந்தான பாக்கியங்களையும் நேசிக்காமல், அவைகளை இறைவனின் புனித ஆணைக்கிணங்கவே செயல்படச் செய்கிறேன்" என்றால், அவன் இதயம் இம்மையின் சம்பத்துக்களால் விளையும் தீமைகளை விட்டும் சுத்தமாயிருக்கலாம். எது போலெனில், ஒருவனுக்கு அரசனே பார்த்து ஒருத்தியை மணமுடித்து வைத்து, அவள் கையாலேயே அவனைக் கொலை புரிய வேண்டு மென்று கட்டளையிட்டால், அம்மனிதன், "அந்தோ, நான் ஓடிவிட்டாலும், அரசனின் ஆட்கள் என்னைப் பிடித்துக் கொள் வார்களே, மணம் வேண்டாமென்றாலும் சட்டவிரோதமென்று கருதி, அரச ஆணையால் கொல்லப்படுவேனே, மணத்துக்குச் சம்மதித் தாலும் என் மனைவியே என்னை கொன்றுவிடுவாளே, எவ்வகையினும் தப்பிக்க வழியில்லையே!" என்று ஓலமிடு வானல்லவா? அஃதே போன்றுதான் இம்மையின் செல்வங்களையும் ஏற்க நேரலாம்.

அரச ஆணைப்படி அவனுக்கு அரசனின் அடிமைப் பெண் ஒருத்தியோடு மணமாகியதும், அவனுக்கு விசத்தை கொடுத்து விடும்படியோ, அல்லது அவன் தூங்கும்போது, அவனைக் கொன்று விடும்படியோ, அடிமைப் பெண்ணுக்கு அரசன் ஆணையிட்டு

விட்டால், அவன் கதி யாதாகும்? என் ஞான போதங்களைப் புறக் கணித்துத் திரிவோரே, புதுமைமையான கூது வாதில் மூழ்கிக் கிடப்பவர்களே, உங்கள் நிலைக்காக வருந்துகிறேன். புனித ஒழுக்கத்தோடு இறைவனிடம் நல்லிணக்கம் காட்டுங்கள். குறிப்பிட்ட மனிதன் அரச ஆணைப்படி மணமும் முடித்து, தனியறையுள் நுழைந்து, திருமணக் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டதும், இரவின் இறுதிப் பாகம் தொடங்கியதும் மணப் பெண் என்ன செய்கிறாள் என்று நோட்டமிட்ட வண்ணம், ' பேணுதல்' என்ற அங்கியை அணிந்து, இதயக் கண்களுக்கு (இபாதத்தில்) 'விழிப்பு' என்ற சுருமாவையும் தீட்டிக் கொண்டு, எச்சரிக்கையாய் இருப்பின், ஆபத்து அகன்று, அவனுடைய பீதி மகிழ்ச்சியாக மாறிவிடுமன்றோ! பணியாட்களும் அவனது பேணுதலைக் கண்டு, அவனைப் பகைக்க இயலாதவர்களாக எண்ணி மரியாதை செய்வார்களல்லவா! இந்த நிலையில் இரவு விடிந்து பகல் வந்ததும், அவன் அரசனின் மரியாதைக்கும் உரியவனாகி விடுவான். அவனைப் போன்றுள்ள சிறந்த நாதர் (மணவாளர்)களையே, "இறைவனிடம் புனித இதயத்தோடு வந்துவிட்டவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களின் மணப்பெண் என்றது, வாழ்நாள் முழுவதும் இவர்கள் கலந்துறவாடாத இம்மையாகும். இந்தப் புனித நிலையிலேயே இவர்கள், தங்கள் சன்மார்க்கத்தைக் களங்கப்படுத்திக் கொள்ளாமலும், தூய பக்தியை (இம்மையின் பாசங்களில்) பறிகொடுத்து விடாமலும், மறுமையின் பக்கம் வந்துவிட்ட வெற்றி வீரர்களாவர். அதுவே மகத்தான ஈடேற்றமுமாகும்.

இறைவனை மெய்யாகவே அறிந்துகொண்ட ஞானநாதர் களுக்கும், இந்த மேலான பாக்கியம் கிட்டும். அவர்களும் இகத்தின் பாசத்தை அப்பாலாக்கிவிட்டுப் பரத்தின் மகிமைகளையே ஆசித்தவர்களாவர். அவர்களுக்கு இதயத் தூய்மை சித்தியானதும், ('காஸித்') மெய்ஞ்ஞானத் தூதர்கள் வந்து, "இம்மையின் சௌபாக்கியங்களில் உனக்குக் கடாட்சமானதை (அத்தருணம்) நீ ருசிக்கலாம்" என்று சோபனம் கூறிச் செல்கின்றனர். அப்போது

அவர்களுக்கு மெய்நேசர் (ஸித்தீகீன்)களின் புனிதமான ஆத்ம வாழ்வு பிராப்தமாகும். மகான்களின் விஷயத்தில் இந்த நிலையும் திகைப்பையும், சிரமத்தையும் தரும் ஒரு வகை வணக்கமாகவே திகழ்ந்துவிடும்.

உன் தூய இதயம் (கல்பு), அகம் (பாத்தின்) ஆகிய இரண்டும் எத்தகைய மெய் வணக்கங்களால் புனிதமடையுமோ அத்தகைய நல் அமல்களையே சதாவும் கடைபிடித்துவா. இவ்வாறு உள்ளமும், இதயமும் சீர்பட்டதும் அவ்விரண்டும் சர்வசக்தனின் திவ்விய சமூகத்தில் குதூகலமாகச் சென்று, " ஏ கண்ணியமிக்கவனே! எங்களைக் குறித்து என்ன முடிவு செய்திருக்கிறாய்? உன் தரிசன பாக்கியத்தை எங்களுக்கு அருளாமல், எங்களை அப்பாலாக்கி விட நாடுகிறாயா? எங்களின் புனித வாழ்வைக் கசப்பாக்கி விடுவாயா? நாங்கள் உன்னிடமிருந்து உறுதியான சோபனச் செய்தியை வரமாகப் பெறாமல், இங்கிருந்து அசையவே மாட்டோம்" என்று வாதாடிக் கொண்டு அங்கேயே தங்கி விடு. உடனே கருணையாளனான இறைவனும், "நீங்கள் அஞ்சவேண்டாம்! நான் உங்களுடனேயே இருந்து பார்த்தவனாகவும், கேட்டவனாகவுமிருப்பேன்" என்று நல்லுறுதி கூறுவான்.

பின்னர் புனித இதயமும், அகமும், அவனுடைய உயர்வான பாதுகாப்பென்ற அருளைப் பெற்று, இவ்வுலகின் பக்கல் திரும்பும். இவ்வாறான உத்தம சீலர்களே, நயவஞ்சகம், முகத்துதி, படைப்புகளின்மீது பாசம் போன்ற களங்கங்கள் அனைத்தையும் விட்டுச் சீர்பட்ட இதயத்தோடு, இறைவனின் திருச்சமூகத்தில் செல்லும் புண்ணியவான்களாவர்.

ஏ, (ஞானத் தெளிவு பெறாமல்) திகைப்பில் உழன்று தவிக்கும் சீடர்களே, ஏ, இறை சங்கல்பம் என்ற (தக்தீரின்) மைதானில், அமைதியின்றித் திரிபவர்களே! உங்கள் இதய பீடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது அவசியம். மாண்புமிக்க சகல சம்பத்துக்களையும் அதில் அமர்த்தாதீர்கள். வைரம், மாணிக்கம்,

புதையல்களின் திறவுகோலை உங்கள் பையில் வைத்துக் கொள்ளாதீர்கள். இம்மையின் இச்சாபாசங்களை அப்பாலாக்கி, அவனது திருநாம உச்சரிப்பையும், மெய்ஞ்ஞான சிந்தனைகளையும், மரணத்தையும், மரணத்துக்குப் பின்னுள்ள நிகழ்ச்சிகளையும், தியானிக்க, இதயத்துக்கு இடம் கொடுங்கள். அதன் மூலமே உங்கள் இம்மையின் பாசங்களைக் குறைக்க உதவும் ரசவாத ஒளடதம் உருவாக வேண்டும். "நான் இப்போதே மரிக்க வேண்டியவன் தானே!" என்ற ஞானோதயத்தை இதயத்துள் புகுத்தித் தியானிப்பதால், இகத்தின் மோகபாசங்கள் குறையத் தொடங்கும். அதனால், உன் மெய் வணக்கங்களும் பரிபூரண அழகோடு திகழும்.

உன் இகப்பாசங்கள் அதிகரித்துக் கொண்டே போகுமாயின், சில சமயங்களில் இம்மையின் படைப்புகளின் மீது பார்வை விழுந்து மயங்கிவிட நேரிடும். பிறகொரு சமயம் அவைகளின் மீது நயவஞ்சகச் சிந்தனையும் பின் தொடரும். இம்மையின் பாசங்களைக் குறைக்க விரும்புபவன், பிற படைப்புகளை விட்டும் சதாவும் தனித்திருந்து, சீர்பெற்று, முதலில் பற்றுதல் (ஜுஹ்து) என்ற உடையை அணிந்து, அதன் பின் இருந்தும் நாஸ்தியாதல் (பனா) என்ற உடையையும், அதன் பிறகு மரணமென்ற உடையையும் அணிந்து கொள்ள வேண்டும். "பொய் போசாதீர்கள், அடைக்கலப் (அமானத்) பொருள்களை அபகரித்து மோசம் செய்யாதீர்கள்! வாக்குறுதிகள் புனிதமானவை. அவற்றை மீறாதீர்கள்! கொடுமை இழைக்காமல் உங்கள் கரங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வையை (தீயதை பார்க்காமல்) கீழே தாழ்த்திக்கொள்ளுங்கள். உங்கள் கற்பைப் பேணுங்கள்! இந்த ஆறையும் நீங்கள் பேணி நடந்துகொண்டால், உங்களுக்குச் சுவர்க்கம் கிடைக்க நான் பிணை ஏற்றுக்கொள்கிறேன்" என்பது நபிபெருமான் (ஸல்) அவர்களின் அருள் வாக்காகும். இவ்வாறு உன் புனித உள்ளம், புனிதம் பெற்று விட்டால், இறைவனின் திருவசனங்களை, இடையே திரையின்றிக் கேட்கும் மகிமை உனக்குச் சித்தியாகும். உன் இரட்சகன், உன் எசமானன் (மௌலா) நேராகவே உன்னோடு உரையாடுவான்.